# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 16 Issue - 05

மே 2023 - ஷவ்வால் - துல்காயிதா 1444





## 'தி கேரளா ஸ்டோரி' சினிமா

32000 பெண்கள் அல்ல...!

3 பெண்கள் தான்...!

## நீதிமன்றங்களில் அந்தர் பல்டி அடித்த இயக்குனர்/தயாரிப்பாளர்

## திப்பு சுல்தானை மீண்டும் கொலை செய்ய வேண்டுமாம்!

மே மாதம் - திப்பு சுல்தான் ஷஹீது மாதம்

சிறப்பு கட்டுரை



## கோவை...!

சங்கிகள் என்றால் மனநோயாளிகள்

முஸ்லிம்கள் என்றால் தீவிரவாதிகளா?

அமெரிக்காவில் தொடரும் இஸ்லாமிய புரட்சி



## ஹிஜாப் அணிந்த நீதிபதி

بسم الله الرحمن الرحيم

நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யாமலிருப்பதற்கு என்னதான் காரணம்? உண்மையில், வானங்கள் மற்றும் பூமியின் வாரிசுரிமையோ அல்லாஹ்விற்கே உரியதாகும். உங்களில் (யார் வெற்றிக்குப் பின் செலவு செய்வார்களோ, மேலும், அறப்போரும் புரிவார்களோ அவர்கள்) வெற்றிக்கு முன் செலவு செய்து, அறப்போரும் புரிந்தவர்களுக்குச் சமமாக மாட்டார்கள். அத்தகையவர்களின் அந்தஸ்து, பின்னர் செலவு செய்தவர்களைவிடவும், அறப்போர் புரிந்தவர்களைவிடவும் உயர்ந்ததாகும். ஆயினும், அல்லாஹ் இரு சாராருக்கும் நல் வாக்குறுதியினை அளித்திருக்கின்றான். நீங்கள் செய்பவை அனைத்தையும் அல்லாஹ் அறிந்தவனாயிருக்கின்றான்.(அல்குர்ஆன் : 57:10)


**அமெரிக்காவில் ஹிஜாப் அணிந்த நீதிபதி** 18

**இஸ்லாத்தை ஏற்ற பிரபல கிருஸ்தவ பாதிரியார் ஹிலாரியன் ஹீகி** 20

**தென்முடியனூர் கிராமம் – தீண்டாமை!** 22

**அல்குத்ஸ் (மீட்பு தினம்) ரமழான் மாதம் கடைசி வெள்ளிக்கிழமை** 28

**தேசத்துரோக சட்டம் – ஒரு மாநிலத்தின் வகுப்புவாத ஆயுதமாக எப்படி பயன் படுத்தப்படுகிறது?** 40

**நரோடா கம் படுகொலைகள் குற்றவாளிகள் விடுதலை!** 46

**திப்புசுல்தானை மீண்டும் கொல்ல வேண்டுமாம்**

**மே மாதம் - திப்பு சுல்தான் ஷஹீது மாதம்**

**சிறப்பு கட்டுரை பக்கம் 04**

**‘தி கேரளா ஸ்டோரி’ சினிமா இஸ்லாமோபோபியா இஸ்லாமிய வெறுப்பு பிரச்சாரம்**

**கவர் ஸ்டோரி பக்கம் 08**

- *சிலுவைப்போர் 2.0* 34
- *மருத்துவம் - தொடர்* 50
- *டெல்லி கலவரம் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் - தொடர்* 54
- *விடுமுறையும் விளையாட்டும்* 62
- *பிராமினிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்* 64



மே – 2023 / ஷவ்வால் – துல்காயிதா 1444

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர்
மு.குலாம் முஹம்மது,M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,

தனி இதழ்: ரூ.40 | ஆண்டுச் சந்தா – உள் நாடு: ரூ.480 / வெளி நாடு: ரூ.5000

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darultrust.in

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only





# திப்புசுல்தானை மீண்டும் கொல்ல வேண்டுமாம்

## மே மாதம் - திப்பு சுல்தான் ஷஹீது மாதம்

### 224 அண்டுகள் கழித்தும் பாஸிஸ்டுகளை கதிகலங்க வைக்கும் திப்புசுல்தான்

மே 04 திப்புசுல்தான் ஷஹீதாக்கப்பட்ட நாள். ஆங்கிலேயர்களுக்கு எதிராக போரில் மற்ற சிப்பாய்கள் போல வாள்களை சுழட்டி மடிந்தார். பிரெஞ்சு நாட்டு வரலாற்றாசிரியர்கள் எல்லாம், இந்தியாவில் ஆங்கிலேயர்களை தினரடித்துக் கொண்டிருந்த முதல் மன்னர் திப்புசுல்தான் - தான் என்று பாராட்டிக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் திப்புசுல்தானை வைத்தே இங்கு ஒரு கேவலமான அரசியலும் நடைபெறுகின்றது.

ஸ்ரீரங்கப்பட்டினத்தை ஆங்கிலேயர்கள் முற்றுகையிட்டுவிட்டனர். மிர் சாதிக்-கும், பூர்னைய்யாவும் ஆங்கிலேயர்கள் பக்கம் சாய்ந்து துரோகம் இழைத்துவிட்டனர் என்ற செய்தி வந்தவுடன், திப்பு சுல்தான் தனது குடும்பத்தினரிடம் ஒரு ஆலோசனை செய்கிறார். அந்த ஆலோசனைக் கூட்டத்தில் பிரான்ஸ் நாட்டிலிருந்து வந்த ஆலோசகர்களும் இருந்தார்கள்.

அவர்களெல்லாம், "இந்த சுரங்கத்தின் வழி நீ தப்பித்து சென்றுவிடு. அதன் பின் வருவதை பார்த்துக்கொள்ளலாம்" என்று சொன்னபோது, "நான் ஒரு ஆட்டுக் குட்டியை போல வாழ விரும்பவில்லை. இரண்டு நாட்கள் வாழ்ந்தாலும் சிங்கமாகவே வாழ விரும்புகிறேன்." என்று திப்பு சுல்தான் சொன்னதெல்லாம் நாம் அறிந்ததே!

அவர் ஷஹீதாகி 224 வருடங்கள் ஆகிவிட்டன. இப்போது மீண்டும் அவரை கொல்ல வேண்டும், ஷஹீதாக்க வேண்டும் என்று அவரது வரலாற்றை கொலை செய்து கொண்டிருக்கின்றனர். ஆனால் இவர்களின் இந்த முயற்சி வெற்றி பெறவில்லை என்பதுதான் உண்மை. 224 ஆண்டுகளுக்கு முன் ஷஹீதான திப்பு சுல்தானின் வரலாற்றை இப்போது இவர்கள் கொலை செய்ய துடிப்பது ஏன்?

இதை ஆய்வு செய்து, டெல்லி நேரு பல்கலைக் கழகத்தில் உள்ள ஜானகி நாயர் என்பவர் இந்து பத்திரிகையில் ஒரு கட்டுரையை எழுதியுள்ளார். அந்த கட்டுரை மார்ச் 25, 2023 அன்று இந்து ஆங்கில இதழில் வெளிவந்தது. அதில் அவர் என்ன சொல்கிறார் என்றால்,

"Why Tippu Sultan must be killed again - ஏன் திப்பு சுல்தானை நாம் மீண்டும் கொலை செய்தே ஆகவேண்டும்?" என்று தலைப்பிட்டு, திப்பு சுல்தானின் மேன்மையையும், மகிமையையும், அவர் இன்னும் மக்கள் மனங்களில் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்பதை யெல்லாம் கோடிட்டு காட்டுகின்றார்.

நமது வரலாற்றில் பெரும்பாலும் பதிக்கப்படாத ஒரு பகுதியை அவர் சுட்டிக் காட்டுகின்றார். அது,

"ஆங்கில நாட்டில் திப்பு சுல்தான் குறித்த ஒரு பயம் எப்போதும் இருந்து வந்துள்ளது. அது எந்தளவிற்கு இருந்ததென்றால், ஆங்கி லேயர்களின் குழந்தைகள், வீட்டிற்கு அடங்காமல், கட்டுக்கு அடங்காமல் இருந்தால் அவர்களை திப்பு சுல்தானின் பெயரை கூறி பயம் காட்டுவார்களாம்."

ஆதேப்போல ஆங்கிலேயர்களுக்கு மத்தியில் திப்புசுல்தான் என்பவர் ஒரு Hero-ஆக இருந்துள்ளார். அதாவது அவர்களது ஆட்சியாளர்கள், தளபதிகளால் வெல்ல முடியாத ஒரு மாவீரராக ஆங்கிலேயர்களுக்கு மத்தியில் திப்புசுல்தான் திகழ்ந்துள்ளார். இதனால் ஆங்கிலேய நாட்டு தளபதிகளை மட்டமாக பார்க்கும் ஒரு சூழலும் உருவாகியுள்ளது.

எனவே அன்றைய நாட்களில் ஆங்கிலேயர் கள் தங்களது குழந்தைகளிடம் திப்பு சுல்தான் குறித்த அவதூறுகளை பரப்பியாக வேண்டும் என்ற அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எந்தளவிற்கு என்றால், நமக்கு தன்மானம் இல்லாத ஒரு வாழ்க்கையை லண்டனில் வாழ வேண்டிவரும் என்று அஞ்சி திப்புசுல்தான் குறித்து அடுக்கடுக்கான பொய்களை பரப்பி விட்டார்கள்.

அவர்கள் திப்புவின் வீரத்தை எப்படி யெல்லாம் மட்டம் தட்டினார்கள் என்பதை இந்த நேரு பல்கலைக்கழகத்தின் வரலாற்றாசிரியர் பட்டியல் போடுகின்றார்.

- நாட்டுப்புற பாடல்களை இயற்றினார்கள்.
- கேலிச் சித்திரங்களை வரைந்தார்கள்.
- நையாண்டி துனுக்குகளை எழுதவும், அதை சிறு சிறு நாடகங்களாக அரங்கேற்றவும் செய்தார்கள்.
- தெருக்கூத்துகள் மூலம் திப்பு சுல்தானை மட்டம் தட்டினார்கள்.
- குழந்தைகள் விளையாடும் நையாண்டியான விளையாட்டு பொருட்களில் திப்புசுல்தான் முகத்தை பயன்படுத்தினார்கள்.
- பானங்கள் குடிக்கக்கூடிய கோப்பைகளில் திப்பு சுல்தானின் கேலிச் சித்திரங்களை வரைந்தார்கள்.
- திப்புவை உருவகேலி செய்யும் செயல்முறையையும் இவர்கள் விட்டு வைக்கவில்லை.
- அப்போதிருந்த நாடக அரங்குகளி லெல்லாம், ஆங்கிலேய ராணுவ வீரர்களுக்கு, "திப்புவை நாம் ஒரு நாள் வென்று விடுவோம்" என்ற மனநிலையை ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

இப்படி அப்போதிருந்த மக்கள் தொடர்பு சாதனங்கள் அனைத்தையும் திப்புவிற்கு எதிராக பயன்படுத்தினார்கள் ஆங்கிலேயர்கள்.

## ஆங்கிலேயர்களுக்கு நிம்மதியில்லை

1799 மே 4ஆம் தேதி திப்பு சுல்தான் ஷஹீதாகிவிட்டார். ஆனால் திப்புவின் சடலத்தை ஆங்கிலேயர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஜெனரல் டேவிட் என்பவர் தான் அன்று ஆங்கிலேய படையில் களத்தில் நின்று கொண்டிருந்தவர். இவர் தனது படை யினரிடம் திப்புவின் உடலை பார்த்தீர்களா? என்று கேட்டுக் கொண்டே இருந்தார். ஒரு

வேளை திப்புவின் குடும்பத்தினர் வந்து அவரது உடலை எடுத்து சென்று விட்டால் அப்போதும் ஆங்கிலேயர்களுக்கு பிரச்சனை தான். ஏனென்றால் ஒரு கற்பனை எதிரி அவர்களுக்கு காலம் முழுவதும் இருந்து கொண்டே இருப்பார். எனவே ஷஹீதான திப்புவின் உடலை காணாமல் ஆங்கிலேயர் களுக்கு நிம்மதியில்லை.

கடைசியில் ஜெனரல் டேவிட் பியர்டு திப்புவின் உடலை கண்டு பிடித்தார். கண்டு பிடித்த அடுத்த நொடி அங்கிருந்தவாரே கர்ஜித்தார். "இனி இந்தியா நமக்குதான்" என்று. அதன் பின் திப்பு சுல்தானின் உடலை எடுத்துக் கொண்டு ஓடி விட்டனர். ஆங்கிலேய வீரர்களுக்கு திப்பு சுல்தான் உடலை காண்பித்தால் தான் அவர் இறந்து விட்டார் என்பதை நம்புவார்கள் என்ற நோக்கத்தில்.

**திப்பு சுல்தானின் ஹஹீதுக்கு பின் என்ன நடந்தது?**

திப்பு சுல்தானின் இறப்புக்கு பின் அவரது இறப்பேயில்லாத வீர வரலாறு தொடங்கியது. அமர்சித்திர கதைகளில் திப்புவை, "ஆங்கில ஏகாதிபத்திய எதிர்ப்பின் ஒரு அடையாளமாக" அவரை காட்டினார்கள். இந்தியாவிற்கே வராத ஆங்கிலேயர்கள் எல்லாம் திப்பு சுல்தானை பற்றி எழுதி தள்ளினார்கள்.

எந்தளவிற்கு ஆங்கிலேயர்கள் திப்பு சுல்தானை குறித்து அஞ்சியிருந்தார்கள் என்றால், "ஸ்ரீரங்கப்பட்டணத்தில் அவர் ஷஹீதான இடத்தையும், அவரது அடக்கஸ் தலத்தையும் ஆங்கிலேய படைகள் எல்லாம் கட்டாயம் பார்க்க வேண்டும்" என்று பெரும் பணச் செலவில் ஆங்கிலேய படைகளை அழைத்து வந்துள்ளனர். இதை அவர்கள் புனிதப் பயணம் போல் மேற்கொண்டுள்ளனர்.

1831ல் ஒரு வரைபட போட்டி நடத்து கிறார்கள். அதில் "டேவிட் வில்கி" என்ப வரிடம் ஒரு பொறுப்பை ஒப்படைக்கிறார்கள். இவர் அந்த காலக்கட்டங்களில் சித்திரங்கள் வரைவதில் புகழ் பெற்றவர். "நீ திப்பு சுல்தானை மலிவாகவும், அவரை வீழ்த்திய வெல்லஸ்லி பிரபுவை மாவீரனாகவும் சித்தரித்து" ஒரு படம் வரைய வேண்டும் என்றார்கள். அப்படியே சித்திரத்தை வரைந்தார். அவருக்கு விருதுகளை வாரி குவித்தார்கள். மேலும் அந்த படத்தை வெளி நாட்டினர்களெல்லாம் பார்க்கும் அளவிற்கு ஒரு கண்காட்சியை நடத்தினார்கள்.

இப்படி ஆங்கிலேயர்கள் திப்பு சுல்தானின் வரலாற்றை கொலை செய்து கொண்டிருந்த நேரத்தில், இந்தியாவில் அவரை பாராட்டி போற்றிக் கொண்டிருந்தனர். ஏனென்றால்,

- விவசாயிகளுக்கு அவர் செய்த நன்மைகள்.

- மது, கல்லு குடிப்பது, கஞ்சா, சூதாட்டம், விபச்சாரம் போன்றவற்றை முழுவதுமாக தடை செய்திருந்தார்.

நமது மூத்த வழக்கறிஞராக இப்போது பதவியேற்றுள்ள திரு.லஜபதி ராய் அவர்கள், நாம் நிறுவி நடத்தி வந்த விடியல் வெள்ளி பத்திரிகையில், நம்பர் 2002ஆம் ஆண்டு, மதமாற்றம் குறித்த ஒரு சர்ச்சை கிளம்பிய போது, அவர் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். அதில் அவர்,

"ஸ்வாமி விவேகானந்தர் திருவிதாங்கூரில் நடக்கும் அநியாயங்களை பார்த்துவிட்டு 'இது பத்தியக்காரர்களின் விடுதி' என்று அழைத்தார். அங்கிருந்த உயர் சாதி இந்துக்களும் சாதி இழிவுகளை நீக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலாடை அணியக் கூடாது. மார்பக வரி இப்படி யெல்லாம் அங்கு நிறைய கொடுமைகள் நடைமுறையில் இருந்தன."

"ஆனால் திப்புசுல்தான் இதற்கெதிராக நடவடிக்கை எடுத்தார். திருவிதாங்கூர் அரசுக்கு திப்புசுல்தான் எழுதிய கடிதத்தை அப்படியே கோடிட்டு காட்டியுள்ளார். அதில், "நான் உங்கள் ஊர் வழியாக சென்ற போது, அங்குள்ள பெண்கள் இடுப்புக்கு மேல் ஆடை அணியாமல் இருந்ததை பார்த்தேன். அவர்கள் ஆடை அணியாமல் இருப்பதன் காரணமென்ன? ஒருவேளை வறுமை காரணமாக அவர்கள் மேலாடை அணியாமல் இருந்தால், அவர்களது வருமானத்தை உயர்த்த வழிவகை செய்யுங்கள். அல்லது சமூக கட்டுப்பாடுகள் காரணமாக அவர்கள் மேலாடை

அணியவில்லை என்று சொன்னால் குறிப்பிட்ட இத்தனை நாட்களுக்குள் அந்த சமூக கட்டுப்பாடுகளை நீக்கி அவர்கள் மேலாடை அணிய செய்ய வேண்டும். இல்லையென்றால் நான் உங்கள் மீது போர் தொடுத்து அந்த மக்களை மாற்றுவது தவிர எனக்கு வேறு வழியில்லை."

பெண்கள் மேலாடை அணியாமல் இருந்த அந்த சமூக சூழல் திப்பு சுல்தானை வெகுவாக பாதித்திருந்தது. அதனால் அவர் இப்படியொரு கடுமையான நடவடிக்கையில் இறங்கியிருந்தார்.

இப்படியெல்லாம் திப்புசுல்தான் நடவடிக்கைகளை எடுத்ததால் தான் இந்தியாவில் அவர் அனைவரின் நெஞ்சங்களிலும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். இதனால் தான் சங்கப்பரிவாரத்தினர் அவரது வரலாற்றை கொலை செய்ய மெத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

1831ல் மைசூரை சுற்றியுள்ள பகுதிகளில் ஒரு விவசாய போராட்டம் நடந்தது. அப்போது ஆட்சியாளரிடம், "எங்களது திப்பு சுல்தான் தந்த வெகுமானங்களை எல்லாம் தாருங்கள்" என்று கேட்கும் அளவிற்கு திப்புவின் ஆட்சி இருந்துள்ளது. இந்த வரலாறு விவசாயிகள் போராட்ட வரலாறுகளில் பதியப்பட்டுள்ளது என்கிறார் இந்த நேரு பல்கலைக் கழகத்தின் ஆய்வாளர்.

### திப்புவை கண்டு கதிகலங்கும் பாசிஸ்டுகள்

224 ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலேயர்களை கதிகலங்க வைத்த திப்பு சுல்தான் இப்போது இங்குள்ள பாசிஸ்டுகளை கதிகலங்க வைத்துள்ளார். அதனால் தான் திப்பு சுல்தான் வரலாற்றை எப்படியாவது திரித்துவிட வேண்டும் என்ற கடுமையாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் பாசிஸ்டுகள்.

இதைத்தான் அல்லாஹ் தனது திருமறையில் இப்படிக் குறிப்பிடுகின்றான், "அல்லாஹ் வுடைய பாதையில் இறந்தவர்களை நீங்கள் இறந்தவர்கள் என்று சொல்லாதீர்கள். அவர்களுக்கு நாம் உணவளிக்கின்றோம். அதை நீங்கள் அறிய மாட்டீர்கள்"(2:154). என்று.



திப்பு சுல்தானை பொறுத்தவரையில் அவருக்கு குர்ஆன் வசனத்தை தாராளமாக சொல்லலாம். ஏனென்றால் ஆங்கிலேயர் களுக்கு எதிரான போரை அவர் ஜிஹாத் என்றுதான் எடுத்துக் கொண்டார். என்ஸோகிளோபிடியா பிரிட்டானி காவிலிருந்து எல்லாவற்றிலும் வரலாற்று பதிவுள்ளது.

"இந்தியாவில் ஆங்கிலேயர்களுக்கு எதிரான போர் என்பது வெறும் மண்ணுக்கான போர் மட்டுமல்ல. அது ஜிஹாத்" என்று. "ஒரு இந்துவையும், ஒரு முஸ்லிமையும் வழியில் கண்டால், நான் முஸ்லிமை உடனே சுட்டு கொன்று விடுவேன். ஏனென்றால் அவனுக்கு இது ஜிஹாத்" என்றான் ஒரு ஆங்கிலேயன்.

ஆகவே நீங்கள் என்னதான் திப்புசுல்தானை மீண்டும் மீண்டும் கொலை செய்தாலும், அவர் வரலாறு முழுவதும் வாழ்ந்து கொண்டிருப்பார். ஒன்றை மட்டும் தெரிந்து கொள்ளுங்கள் நீங்கள் எப்போதெல்லாம் திப்பு சுல்தானை பற்றி பேசுகின்றீர்களோ, அப்போதெல்லாம் அவரது கீர்த்தியும், கித்தாபும் மேலோங்குமே தவிர தாழ்ந்து போகாது. ஏனென்றால் அவர் தனது உயிரை தந்து ஆங்கிலேயர்களுக்கு எதிராக போராடி யுள்ளார். எங்கள் இறைவனும் இது போன்ற ஷஹீதுகளுக்கு உயர்ந்த அந்தஸ்துகளை வழங்கியுள்ளான். அல்ஹம்துலில்லாஹ்!

ஆதாரம் : **The Hindu - 25/03/2023**

**- MGM**



# தி கேரளா ஸ்டோரி சினிமா

## இஸ்லாமோபோபியா

## இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்பு பிரச்சாரம்

## 32000 பெண்களல்ல...! 3 பெண்கள் தான்..!

## நீதிமன்றத்தில் அந்தர் பல்டி அடித்த தயாரிப்பாளர்

'தி கேரளா ஸ்டோரி' என்ற சினிமா சண் ஷைன் பிக்சர்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த சினிமாவின் ட்ரெய்லர் கடந்த 26-ம் தேதி வெளியான நிலையில், மே 5-ம் தேதி தமிழ், மலையாளம், தெலுங்கு, இந்தி மொழிகளில் இந்த சினிமா வெளியாகவிருக்கிறது. இந்து பெண்ணைக் காதல் வலையில் வீழ்த்தி, சிரியாவிலுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் கொண்டுசேர்ப்பது குறித்த காட்சிகள் ட்ரெய்லரில் காட்டப்பட்டிருக்கின்றன. மேலும், கேரளாவில் சுமார் 32,000 பெண்கள் மாயமானதாகவும் ட்ரெய்லரில் கூறப்பட்டிருக்கிறது. இந்த சினிமாவுக்கு சி.பி.எம்., காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துவருகின்றன.

இந்த நிலையில், 'தி கேரளா ஸ்டோரி' சினிமாவுக்கு கேரளா முதல்வர் பினராயி விஜயன் கடும் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார். இது குறித்து பினராயி விஜயன்,

"வகுப்புவாதத்தை லட்சியமாகக் கொண்டு கேரளாவுக்கு எதிராக வெறுப்பு பிரசாரத்தை உருவாக்கும் வகையில், 'தி கேரளா ஸ்டோரி' என்ற இந்தி சினிமாவின் டிரெய்லர் வெளியிடப் பட்டிருக்கிறது.

மதச்சார்பற்ற மண்ணான கேரளத்தை, மதத் தீவிரவாதத்தின் மையமாகக் காட்டுவதற்கான சங் பரிவாரின் அஜண்டாவை இந்த சினிமா பரப்புகிறது என்பதை ட்ரெய்லர் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. கேரளாவில் தேர்தல் அரசியலில் ஆதாயம் அடைய சங் பரிவார் மேற்கொள்ளும் பல்வேறு முயற்சிகளின் பின்னணியில் ஒன்றுதான் முஸ்லிம்களை அன்னியப்படுத்தும் இந்த சினிமா. விசாரணை ஏஜென்சிகளும், கோர்ட்டும், மத்திய உள்துறை போன்றவை

மறுத்திருக்கும் லவ் ஜிகாத் குற்றச்சாட்டை மையப்படுத்துவது திட்டமிட்ட நடவடிக்கையாகும். லவ் ஜிகாத் என்ற ஒன்று இல்லை என அன்றைய மத்திய இணை அமைச்சரும், இன்றைய மத்திய அமைச்சருமான கிஷன் ரெட்டி நாடாளுமன்றத்தில் பதிலளித்தார்.

அப்படி இருந்தும் பொய்க் குற்றச் சாட்டை முக்கிய மையக்கருத்தாகக் கொண்டு சினிமா எடுத்திருப்பது உலகத்தின் முன்னில் கேரளாவை அவமானப்படுத்தி காட்ட வேண்டும் என்ற எண்ணம்தான் காரணம். கேரளாவில் மத ஒற்றுமையை தகர்த்து வகுப்புவாத விஷ விதைகளை விதைக்க, சங் பரிவார் முயல்கிறது. பிற இடங்களைப்போல கேரளாவில் அவர்களின் அரசியல் எடுபடாததால், போலிக்கதைகள் மூலம் பிரிவினை அரசியலை சினிமா மூலம் புகுத்தப் பார்க்கிறார்கள்.

எந்த உண்மையும், ஆதாரமும் இல்லாமல் சங் பரிவார் இது போன்ற கட்டுக்கதைகளை ஏற்படுத்துகிறது. கேரளாவில் 32,000 பெண்களை மதம் மாற்றி ஐ.எஸ் உறுப்பினர்களாக மாற்றியதாக பச்சைப்பொய்யை சினிமாவின் ட்ரெய்லரில் பார்க்க முடிகிறது. அந்தக் கும்பலின் பொய் தொழிற்சாலையில் உருவான போலிக்கதைதான் இது.

மத வெறியையும், பிரிவினையையும் உருவாக்க சினிமாவை பயன்படுத்து பவர்களைக் கருத்து சுதந்திரம் என்ற பெயரில் நியாயப்படுத்துவது சரியல்ல. கருத்து சுதந்திரம் என்பது பொய்களைப் பரப்புவதற்கும், மக்களைப் பிரிப்பதற்குமான லைசென்ஸ் அல்ல. வகுப்புவாத, மதவாத இயக்கங்களை மக்கள் முற்றிலும் நிராகரிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். பொய்ப் பிரசாரத்தின் மூலம் சமூகத்தில் அமைதியைக் குலைக்கும் வகுப்புவாத சக்திகள் குறித்து மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சமூக விரோதச் செயல்களுக்கு எதிராகச் சட்ட




நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

**- நன்றி : விகடன்**

இப்படி இந்த படத்தின் டிரெயிலர் வெளி வந்தவுடனேயே கடுமையான எதிர்ப்பு தெரிவித்து கேரளா முதல்வர் வெளியிட்ட இந்த அறிக்கை மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியது. நிச்சயமாக கேரளா அரசு இந்த படத்தை தடை செய்து பாஸிஸ்டுகளுக்கு தக்க பதிலடி கொடுக்கப்போகிறது என்று மக்கள் உற்சாகத்திலிருந்தனர். ஆனால் நடந்ததோ வேறு. ஆரம்பத்தில் மிகவும் வீரியமாக எதிர்ப்பு தெரிவித்த கேரள முதல்வர் பின்னர் பின்வாங்கினார். மே 5ம் தேதியன்று கேரளா முழுவதும் இந்த திரைப்படம் வெளியாகியிருந்தது மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

**உச்ச நீதிமன்றத்தில் தடைக்கோரி மனு**

இந்நிலையில், வழக்கறிஞர் கபில் சிபல் மற்றும் நிஜாம் பாஷா ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்தனர்.

அதில், 'தி கேரளா ஸ்டோரி திரைப்பட டிரெயிலர் காட்சிகளில் குறிப்பிட்ட மதத்துக்கு எதிரான வெறுப்பு பேச்சு, பிரச்சாரங்கள் இடம்பெற்றுள்ளன. எனவே இந்தப் படத்தை வெளியிட தடை விதிக்க வேண்டும்' என கூறப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நீதிபதிகள் கே.எம்.ஜோசப் மற்றும் பி.வி. நாகரத்னா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பாக நடைபெற்ற விசாரணையில் வழக்கறிஞர் நிஜாம் பாஷா வாதிடுகையில், "கேரளா ஸ்டோரி படத்தில் மதத்துக்கு எதிரான வகையில் மோசமான வெறுப்பு பேச்சுகள் இடம்பெற்றுள்ளன. இது, முற்றிலும் குறிப்பிட்ட மதத்துக்கு எதிரான ஆடியோ-வீடியோ பிரச்சாரமாகவே பார்க்கப்படுகிறது. அந்தப் படத்தின் டிரெயிலர் காட்சிகளை 1.6 கோடிக்கும் அதிகமானோர் பார்வையிட்டுள்ள நிலையில், மத துவேஷத்தை தூண்டும் வகையில் தி கேரளா ஸ்டோரி படம் அமைந்துள்ளது. இந்த திரைப்படம் வெள்ளிக்கிழமை வெளியாகவிருப்பதால் அதற்கு உடனடியாக தடைவிதிக்க வேண்டும் என்றார்.

இதையடுத்து உச்ச நீதிமன்ற அமர்வு கூறியதாவது: "வெறுக்கத்தக்க பேச்சுகளில் பலவகைகள் உள்ளன. இந்தப் படத்துக்கு மத்திய தணிக்கை வாரியம் உரிய அனுமதியையும், சான்றிதழையும் வழங்கியுள்ளது. படத்தை வெளியிட தடை கோர விரும்பினால் அதற்கு வழங்கப்பட்ட சான்றிதழை எதிர்த்து உரிய அமைப்பில் முறையீடு செய்யவேண்டும்."

"இந்த மனுவை தற்போது விசாரணைக்கு ஏற்றுக்கொண்டால் தவறான முன்னுதாரணம் ஆகிவிடும். அனைவரும் நேரடியாக உச்ச நீதிமன்றத்தை நாடத் தொடங்கிவிடுவார்கள். நீங்கள் முதலில் கேரளா உயர்நீதிமன்றத்திற்கு செல்லுங்கள். எனவே படத்துக்கு தடை கோரும் இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொள்ள முடியாது." இவ்வாறு உச்சநீதிமன்ற அமர்வு தெரிவித்தது.

இதையடுத்து, வழக்கறிஞர் கபில் சிபல், "உரிய அமைப்புகளை அணுகி இப்பிரச்சனைக்கு தீர்வு காண தயாராக இருப்பதாக'' தெரிவித்தார்.

**சென்னை உயர்நீதிமன்றத்தில் தடை கோரி மனு**

சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்த திரைப்படம் குறித்து தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பாக மே 4ஆம் தேதி விசாரிக்கப் பட்டது. அதன் இறுதியாக அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டதாக செய்திகள் வெளியானது. இதுகுறித்து இந்த வழக்கு சம்மந்தமாக வழக்கறிஞர்.அலீம் அல் புகாரி அவர்களிடம் ஒரு பேட்டி கண்டோம். அதில் அவர் கூறியதாவது,

"2022 நவம்பரிலேயே இந்த திரைப்படம் குறித்து ஒரு டீசர் வெளியிடப்பட்டது. அப்போதே தமிழகத்தை சார்ந்த ஒரு மூத்த ஊடகவியலாளர் CBFC - Centrel Board of Film Certificate-க்கு RTI-இல் ஒரு கேள்வி யெழுப்புகிறார். அதில், "இந்த திரைப்படத்தில் சொல்லப்பட்டுள்ள உள்ளடக்கத்தினுடைய உண்மைத் தன்மையை ஆய்வு செய்து நீங்கள் எங்களுக்கு பதில் அளிக்க வேண்டும்" என்று. இந்த கேள்விக்கு முறையான பதிலும் வந்தது. அதில், 2022 நவம்பர் மாதம் வெளியிடப் பட்ட இந்த டீசருக்கு நாங்கள் எந்த சான்றிதழும் வழங்கவில்லை" என்று பதில் இருந்தது.

"இங்கு நாம் கேட்ட கேள்வி இந்த டீசருக்கு முறையான சான்றிதழ் வழங்கப்பட்டதா? இல்லையா? என்பதல்ல! மாறாக இந்த டீசரில் காட்டப்பட்ட உள்ளடக்கத்தின் உண்மைத் தன்மையை ஆய்வு செய்தீர்களா, இல்லையா? என்பது தான் நமது கேள்வி. ஆக, சரியான பதில் கிடைக்கவில்லை என்பதால் இந்த விவகாரத்தை MIB - Ministry of Information & Broadcasting-க்கு கொண்டு செல்கின்றோம். ஆனால் MIB-யிடமிருந்து எந்த ஒரு பதிலும் இல்லை. மீண்டும் ஒரு Reminding Letter அனுப்புகிறோம். அப்போதும் எந்த பதிலும் இல்லை."

ஆக எந்தெந்த கதவுகளையெல்லாம் தட்ட முடியுமோ அங்கெல்லாம் சென்றிருக் கின்றோம். இதெல்லாம் *MHA, CM of Kerala, Kerala DGP, Kerala Commisioner, Tamil Nadu CM, Tamil Nadu DGP, Chennai City Commisioner* போன்ற எங்கெல்லாம் செல்ல முடியுமோ அங்கெல்லாம் இந்த பிரச்சினையை கொண்டு சென்றுள்ளோம். இந்த நிலையில் தான் ஏப்ரல் 24ம் தேதி இந்த திரைப்படத்தினுடைய டிரெயிலர் வெளியிடப்பட்டது.

இந்த நிலையில் தான் மே 4ம் தேதி சென்னை உயர் நீதிமன்றத்தில் நாம் தடை கோரி தொடுத்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கு விசாரணையில் மான்புமிகு நீதிபதிகள் நாம் முன்வைத்த

வாதத்தை முழுமையாக கேட்டனர்.

"32000 பெண்கள் கடத்தப்பட்டுள்ளனர்" என்ற விவகாரம் குறித்து விவாதம் எழுந்த போது, கேரளாவின் முன்னாள் முதல்வர் ஓம்மன் சாண்டி அவர்கள் சொன்ன தகவலை மேற்கொள்காட்டினர். அப்போது நாம் சில வாதங்களை முன் வைத்தோம். "கேரளாவின் முன்னாள் முதல்வர் வருடத்திற்கு 2800 பெண்களிலிருந்து 3200 பெண்கள் வரை மதம் மாறுகிறார்கள் என்றுதான் சொன்னாரே தவிர, அவர்கள் கட்டாய மதமாற்றத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள், ஐ.எஸ். அமைப்பிற்கு கடத்தப்படுகிறார்கள் என்றெல்லாம் சொல்லவில்லை." என்று நம் வாதங்களை முன் வைத்தோம்.

மேலும், இந்த திரைப்படத்தில் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்த பெண் ஒருவர் ஒரு தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சியில் பேசும் போது, அப்படி கடத்தப்பட்ட 32000 பெண்களில் ஒருவர் என்னோடு இன்னும் தொடர்பில் இருக்கின்றார்" என்று மிகவும் கூல்-ஆக சொல்லி கொண்டிருக்கின்றார். இதெல்லாம் என்ன மாதிரியான பேச்சு. முதலில் இவர் கைது செய்யப்பட்டு இந்தியாவின் விசாரணை ஏஜென்சிகளான NIA போன்றவைகளால் விசாரிக்கப்பட வேண்டும்" என்றும் நாம் வாதாடினோம்.

இதற்கு பதிலளித்த நீதிபதிகள், "இதை நீங்கள் தனிப்பட்ட முறையில் புகார் அளிக்கலாம். இந்த வழக்கோடு இதை இணைக்காதீர்கள்" என்று கூறிவிட்டனர்.

உடனே எதிர் தரப்பு வழக்கறிஞர், "இல்லை நாங்கள் 32000 பெண்கள் என்பதை 3 பெண்கள் என்று மாற்றிவிட்டோம்." என்று கூறினார். 32000க்கும், 3க்கும் எவ்வளவு வித்தியாசம் உள்ளது? ஆக இவர்களுக்கே இதில் தெளிவில்லை 32 ஆயிரமா? அல்லது 3ஆ என்று. பின் எப்படி டிரெயிலரில் Uncovering the Truth that was kept Hidden என்று போடுவீர்கள் என்று வாதாடினோம்.

மீண்டும் எதிர் தரப்பினர், "நாங்கள் சென்சார் போர்டில்" சான்றிதழ் வாங்கிவிட்டோம் என்ற வாதத்தை முன் வைத்தனர். அதற்கும் நாம் எதிர்வாதத்தை வைத்தோம், "துப்பாக்கி, விஸ்வரூபம் போன்ற படங்களுக்கு சென்சார் போர்டு சான்றிதழ் வழங்கியும் தடை விதிக்கப்பட்டது. மேலும் நாங்கள் ஆரம்பத்திலேயே இந்த திரைப்படத்தில் காட்டப்பட்டுள்ள உள்ளடக்கத்தின் உண்மைத் தன்மை குறித்த கேள்விகளை CBFC - Centrel Board of Film Certificate மற்றும் MIB - Ministry of Information & Broadcasting போன்ற தளங்களிடம் எழுப்பியிருந்தோம். ஆனால் எங்களுக்கு முறையான பதில் அளிக்கப்படவில்லை." என்று வாதாடினோம்.

அதற்கு நீதிபதிகள், "படத்தினுடைய தயாரிப்பாளருடைய நிலைமையை யோசித்து பாருங்கள், உச்ச நீதிமன்றம், கேரளா நீதிமன்றம், தமிழ்நாடு என்று அலைந்து கொண்டிருக்கின்றார்." என்றார்கள். அதற்கு நான் சொன்னேன், "நான்கு மொழிகளில் படம் எடுத்தால் எல்லா நீதிமன்றங்களிலும் ஏறி இறங்கத்தான் வேண்டும்." என்று.

கற்பனை கதை என்று சொல்லி வெளியிடப்பட்ட திரைப்படங்களையே மதிப்பிற்குரிய நீதிமன்றம் தடை செய்த வரலாறெல்லாம் உள்ளது. ஆனால் இந்த படம் எந்த ஆதாரமும் இல்லாமல் மறைக்கப்பட்ட உண்மைகள் என்ற குறியீடுகளோடு வெளியிடப்படுகிறது. எனவே தாராளமாக இந்த படத்தை தடை செய்யலாம் என்றும் வாதாடினோம்.

உடனே எதிர் தரப்பினர், "மறைக்கப்பட்ட உண்மைகள் என்பதை எடுத்துவிட்டு, இது கற்பனை கதை" என்ற குறியிடோடு வெளியிடுகின்றோம் என்று அந்தர் பல்டி அடித்தார்கள். இப்படியெல்லாம் ஒரு நீண்ட வாதங்களுக்கு பிறகு, சென்னை உயர் நீதிமன்றம், "நீங்கள் முன்கூட்டியே வந்திருந்தால் திரைப்படத்தை திரையிட்டுக் காட்டி அதனுடைய உள்ளடக்கத்தினுடைய உண்மை தன்மையை மதிப்பிட்டு நாங்கள் ஒரு முடிவிற்கு வந்திருப்போம்." என்று கூறி இந்த மனுவை தள்ளுபடி செய்தது.

**தமிழகத்தில் இந்த படத்தை வெளியிட வேண்டாம் - உளவுத்துறை எச்சரிக்கை**

'தி கேரளா ஸ்டோரி' திரைப்படத்தை தமிழகத்தில் வெளியிடுவது குறித்து உளவுத்துறை எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்தப் படத்திற்கு கேரளாவில் கடும் எதிர்ப்பு இருக்கும் நிலையில், தமிழகத்தில் வெளியிட்டால் எதிர்ப்புகள் உருவாகும் என்று தெரிவித்துள்ளது. எனவே, தமிழகத்தில் 'தி கேரளா ஸ்டோரி' திரைப்படத்தை அனுமதிக்க வேண்டாம் என மாநில உளவுத்துறை அரசுக்கு பரிந்துரை செய்திருந்தது. ஆனால் மாநில அரசு தமிழகம் முழுவதும் வெறும் 27 திரையரங்குகளில் இந்த திரைப்படம் வெளியிட அனுமதி வழங்கியது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. படம் பார்த்துவிட்டு வெளியில் வந்து தனியார் சேனல்களுக்கு பேட்டி அளிக்கும் பாமர மக்கள் படத்தை திட்டி தீர்க்கிறார்கள். “மொக்க படம், பிரிவினையை விதைக்கும் படம், இது தென்னிந்தியாவில் ஆர்.எஸ்.எஸ். காலூன்றுவதற்கான பிரச்சாரம் தான் இந்த படம்” என்று மக்கள் தங்கள் கருத்துக்களையும், கோபங்களையும் வெளிக்காட்டுகின்றனர்.

**ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராம்**

கேரளா ஸ்டோரி திரைப்படம் குறித்து ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராம் அவர்கள் தனது கருத்தை டிவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். அதில், “இந்த படம் காஷ்மீர் ஃபைல்ஸ் மாதிரியான வெறுப்பு பிரச்சாரம் படம்தான். ஒரு காலத்தில் ஆட்சிக்கு வர மக்களை ஒன்றிணைத்தார்கள். இப்போது நீங்கள் வெறுப்பூட்டி மக்களை பிளந்து ஆட்சிக்கு வர முயல்கிறீர்கள். இந்த நச்சுத்தனமான அணுகுமுறையால் மக்களாகிய நாங்கள் தான் பாதிக்கப்படுகிறோம். ஜெய்ஹிந்த்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

**தமிழகத்திலும்....!**

தமிழகத்திலும் சமீபத்தில் புர்கா என்ற திரைப்படம் வெளியாகி சர்ச்சையை கிளப்பியது. முஸ்லிம் பெண்களின் மத நம்பிக்கை வழிமுறைகளான, “இத்தா, புர்கா அணிதல்” போன்றவைகள் குறித்த உண்மைக்கு புறம்பான புரிதலற்ற காட்சிகள் மூலம் இழிவுப்படுத்தப்பட்டிருந்தது. இப்போது “ஃபர்ஹானா” என்ற திரைப்படத்தின் டிரெயிலர் வெளியாகியுள்ளது.

இதிலும் முஸ்லிம் பெண்கள் தாங்கள் விரும்பி அணியும் ஹிஜாப் குறித்து தவறாக சித்தரிக்கக்கூடிய காட்சிகளை காண முடிகின்றது. எனவே நமது முதல்வர் ஸ்டாலின் அவர்களும் இதுபோன்ற பிரிவினைவாதம், வெறுப்பரசியலை தூண்டும் விதமாக வெளியாகக்கூடிய திரைப்படங்கள் மீது சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அந்த திரைப்படங்களை தமிழகத்தில் தடை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

**- ந.நி.,**


## இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்பு பிரச்சாரங்களை எப்படி எதிர்கொள்ள வேண்டும்!

இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்புப் பிரச்சாரம், முதல் நாள் தொட்டே நடைபெற்று வருகின்றது. இதற்காக அந்தந்த காலத்தில் கிடைக்கும் அத்தனை ஊடகங்களும் பயன்படுத்தப்பட்டன. ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாக இவை நடைபெறவில்லை. நிரந்தரமான திட்டங்கள், பெரிய அளவில் நிதி, அந்த நிதி தங்கு தடையின்றி கிடைத்திட நிரந்தர ஏற்பாடுகள், அதற்காக 24X7 என உழைத்திட மனித ஆற்றல், அவர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு என்ற ஓவர் டைம், சம்பளம் முதல் ஓய்வூதியம் வரை நிரந்தர ஏற்பாடு என அத்தனையும் ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டன.

வரலாற்றில் இவையெல்லாம் எப்படி நடந்தன என்பதை வைகறை வெளிச்சம் மாத இதழில் தொடராக தொடர்ந்து வெளியிட்டு வருகின்றோம். வெறுமனே இஸ்லாத்தின் எதிரிகள் எப்படியெல்லாம் செயல்படுகிறார்கள் என்பதை மட்டும் வெளியிடவில்லை. அந்த வெறுப்பை, எப்படி முஸ்லிம்கள் வெற்றி கொண்டார்கள். எப்படியெல்லாம் முஸ்லிம்கள் இந்த வெறுப்புப் பிரச்சாரத்தை தூள்தூளாக்கினார்கள். தவிடு பொடியாக்கினார்கள் என்பதையும் நாம் கூடவே கோடிட்டுக் காட்டி வருகின்றோம். அந்தத் தொடரைப் படித்தால் நிறையவே அறிவையும் ஆக்கப்பூர்வமான செயல் திட்டங்களையும் பெறலாம். அண்மையில் நான் எழுதியிருந்த ‘‘திப்புசுல்தான் மீண்டும் ஏன் கொலை செய்யப்பட வேண்டும்?’’ என்ற கட்டுரையில் திப்பு சுல்தான் மீது எப்படியெல்லாம் வெறுப்புப் பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விட்டார்கள். அதற்கு அன்றைய ஊடகங்களை எப்படியெல்லாம் பயன்படுத்தினார்கள் என்பதைக் குறிப்பிட்டிருந்தேன். அதை இந்த இதழிலும் இடம்பெறச் செய்துள்ளோம். வாசகர்கள் அதனையும் ஊன்றிப் படிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ஒவ்வொரு முறையும் இஸ்லாம் தாக்கப்படும் போதும், இஸ்லாத்தை விளக்கிச் சொல்லிடும் வாய்ப்பொன்று திறக்கப்படுகின்றது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த முயற்சி தொடர்ந்து நடந்துகொண்டே இருக்க வேண்டும்.

**- MGM**




# அயலி படம்

## மாதவிலக்கு குறித்து இஸ்லாம்

அயலி என்ற தரமான ஒரு படம் இந்து சமூகத்துக்குள் இருக்கும் மாத விலக்கு பிரச்சனை குறித்து பேசியிருக்கிறது. அதிலும் தமிழக கிராமங்களில் 1990களில் பெண்களுக்கு ஏற்படும் மாதாவிடாயை வைத்து வீட்டுக்குள் ஒதுக்கி வைப்பது, நிகழ்ச்சிகளில் ஒதுக்கி வைப்பது, படிக்க விடாமல் தடுப்பது என்று பல முக்கிய பிரச்சனைகள் குறித்து பேசுகிறது.

இதே போல் இப்போது வெளியாகியிருக்கும் தி கிரேட் இந்தியன் கிச்சன் என்ற படமும் பெண்களுக்கு மாதாவிடாய் ஏற்பட்டால் எப்படி இந்து சமூகத்துக்குள் நடத்தப்படுகிறார்கள் என்பது குறித்தும் பேசுகிறது. இதையொட்டி ஒரு முக்கிய பிரச்சனை குறித்து அல்லது இஸ்லாம் சாதித்த சாதனை குறித்து பெரிய அளவில் யாரும் பேசாதவற்றை உணர முடிந்தது.

உதாரணத்திற்கு இந்த இந்திய சமூகத்துக்குள் இருக்கும் கலாச்சாரம் முழுக்க இந்து சமூகத்துடையது தான். அவர் கிறிஸ்துவராக இருந்தாலும், புத்த மதத்தை சார்ந்தவராக இருந்தாலும் இந்து மதக்கலாச்சாரங்களை தன்னுள் வாங்கி கொள்ளக்கூடியதாக இருப்பார்கள். இதற்கு விதிவிலக்காக அமைந்தது இஸ்லாம் மட்டும் தான். அதுதான் இன்று வரை இஸ்லாம் குறித்து மட்டும் அதிக வெறுப்பை பரப்ப காரணமாகவும் இருக்கிறது.

இப்படியிருக்கையில் இங்கே இஸ்லாம் மட்டும் தான் பெண்களுக்கு மாதாவிடாய் காலத்திலும் மிகச்சுதந்திரமான ஒரு மகிழ்வான வாழ்க்கையை கொடுத்திருக்கிறது என

அறுதியிட்டு கூறலாம். இஸ்லாம் தோன்றியபின் மாதவிலக்கால் ஏற்பட்ட பெண்களுக்கு எதிரான கொடுமைகளில் இருந்து 1400 வருடங்கள் முஸ்லிம் பெண்கள் மிகச்சுதந்திரமாக மகிழ்வாக வாழ்ந்திருக் கிறார்கள்.


இன்றும் கூட இது அனைத்தும் மாறியிருக்கிறது என்று சொல்ல முடியாது. சாதிய பாகுபாடு குற்றம் என்று சட்டம் இயற்றி 70 வருடங்களுக்கு மேல் ஆனாலும் இன்றும் சாதிய மனநிலை மாறததற்கு காரணம் மக்களின் மனநிலை மாறாமல் இருப்பது தான். மக்களின் மனநிலையில் அவர்கள் நம்பிக்கை சார்ந்து எது சொல்லப்பட்டிருக்கிறதோ அது தான் அவர்களின் மனநிலையாக இருக்கிறது. அவர்களின் நம்பிக்கையை மாற்றாமல் மனநிலை மாறுவதற்கு வாய்ப்பில்லை.

அயலி படமோ அல்லது தி கிரேட் இந்தியன் கிச்சன் என்ற படத்தையோ பார்க்கும் போது அதை என்னுடன் தொடர்புப்படுத்திக் கொள்ள முடியவில்லை. மாதமொரு முறை மாதாவிடாய் வருவது மிக இயல்பான ஒன்று. அதை தனிமைப்படுத்தி பேசுமளவுக்கு ஒரு நிகழ்வாக எங்கள் முஸ்லிம் குடும்பங்களில் இதுவரை கேள்விப் பட்டதில்லை.

புத்தகங்கள், செய்திகள் மூலமாகவும், மாற்று சமூகத்து நண்பர்கள் வழியகாவும் மாதாவிடாய் சிக்கல்களை அறிந்திருக்கிறேன். இந்த படங்களை பார்த்த பிறகு இப்படி ஒரு மிக மோசமான பெரியதொரு சிக்கலை இஸ்லாம் எளிமையாக உதறி தள்ளியிருக்கிறது. முஸ்லிம் சமூகத்தில் இருந்து அப்புறப்படுத்தி யிருக்கிறது என்பது புரிந்தது. இதனை குறித்து பேசுவது தான் இப்பதிவு.

ஒரு மனிதனின் நம்பிக்கைகள் அவன் மதம் சார்ந்தே பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஒரு எலுமிச்சம் பழத்தை டயருக்கு அடியில் வைத்து வண்டியை எடுத்தால் அனைத்தும் சரியாகும் என்ற தவறான நம்பிக்கை அவன் மதம் சார்ந்தே அவனுக்கு வருகிறது.

பெரிய முனைவர் பட்டம் முடித்திருந் தாலும் கூட தனது செயல் எதற்கும் பயன் தராது என்று தெரிந்தும் எலுமிச்சம் பழத்தை




டயரில் வைக்கும் வழக்கும் அவரது நம்பிக்கை சார்ந்து அவருக்கு உருவாகியிருக்கும் மனநிலை. இதனை மதங்கள் தான் ஏற்படுத்துகின்றன.

அந்த வகையில் முக்கியபெரும் மதங்களாக இருக்க கூடிய கிறிஸ்துவம், இந்து மதம், யூத மதம் ஆகியவை மாத விலக்கு ஏற்பட்ட பெண்களை தீட்டாகவே பார்க்கிறது. மாதவிலக்கு ஏற்பட்ட பெண்ணை தொட்டாலோ, அவர் தொட்ட பொருளை தொட்டாலோ அவரது உடல் அசுத்தமாகி விடும் என்கிறது.

இதில் கிறிஸ்துவ மதத்தில், நம்பிக்கைகளை மக்கள் விலக்கி கொண்டு அதனை மாற்ற தொடங்கி விட்டதால் மக்களின் வாழ்க்கைக்கு ஏற்றவாறு மதக்கருத்தும் மாறியிருக்கிறது. அதனால் 20ம் நூற்றாண்டில் பைபிளில் தடை என்று சொல்லப்பட்ட எதுவும் குற்றமில்லை என்ற இடத்தை நோக்கி கிறிஸ்துவம் நகர்ந்திருக்கிறது. அதனால் அங்கே மாத விலக்கு பிரச்சனைகள் இன்று இல்லை.

ஆனால், இந்து மதம் இன்று வரை இதை பிடித்து வைத்திருக்கிறது.

இதற்கு காரணம் இதன் நம்பிக்கைகள் காலங்காலமாக கதைகள் வழியாக தொடர்ந்து வருகிறது. இப்படி செய்து விட்டால் குடும்பத்திற்கு ஏதாவது நடந்து விடும். நாம் சாமியின் சொல்படி வாழ வேண்டும் என்ற பிராமணிய கருத்தோடு நம்பிக்கையை கொண்டிருப்பதால் அதனுள் இருக்கும் மாத விலக்கு குறித்த கருத்துகள் பிரச்சனையாகவே இருக்கிறது.

*மனுஸ்மிருதி, 04 அத்தியாயம், 41வது வசனம் மாதவிடாயுடன் இருக்கும் பெண்ணை அடையும் ஒரு ஆணின் வீரியம், பலம், கண்பார்வை, ஆயுள் முதலானவை குறையும்.*

*42வது வசனம் அவ்வாறு செய்யாதவனுக்கு புத்தி வீரியம், பலம்,கண்பார்வை, ஆயுள் முதலானவை விருத்தியடையும்.*

*57வது வசனம், பாழடைந்த வீட்டில் படுக்க கூடாது, தன்னை விட கல்வியாலும், தனத்தாலும் மேம்பட்ட ஒருவனை அவன் உறங்கும் போது எழுப்பக்கூடாது. மாத விலக்கான பெண்ணுடன் பேசக்கூடாது.*

*அத்தியாயம் 03 239வது வசனம், பிராமணர்கள் சாப்பிடும் போது பன்றி, சண்டாளன், நபும்சன், தூரஸ்திரி(மாத விலக்கான பெண்), கோழி ஆகியவற்றின் பார்வை படக்கூடாது.*

இந்து மத புராணங்களின் அடிப்படையில் பெண்களுக்கு ஏற்படும் மாத விலக்கு அவருக்கு கொடுக்கப்பட்ட தண்டனை என்பதே நம்பிக்கையாக இருக்கிறது. இந்த பழக்கவழக்கங்கள் 20ம் நூற்றாண்டு வரை தீவிரமாக கடைபிடிக்கப்பட்டு வந்தது. சமையலறைக்குள் நுழையக்கூடாது, யாரையும் பார்க்க கூடாது, தனியாக சமைத்து கொள்ள வேண்டும், அவர்கள் பயன்படுத்திய பாத்திரங் களை பயன்படுத்தக்கூடாது.

அஸ்ஸாமின் ஒரு பகுதியில் தனியாக மண் குடில் அமைத்து வயதுக்கு வந்தவர்களையும், மாத விலக்கு ஏற்பட்டவர்களையும் வைக்கும் வழக்கம் இருந்தது. இதனால் பல நூறு பெண்கள் பாம்பு கடித்தும், வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டும் பலியாகியிருக்கிறார்கள். இதன் காரணமாகவே இந்திய உச்சநீதிமன்றம் 2005ல் இந்த வழக்கத்தை தடைசெய்தது.

சமீபத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்பு கூட சுவாமி குருஷ்ணவாருப் தாஷ்ஜி என்ற குஜ்ராத்தை சேர்ந்த சுவாமியார் தான் நடத்தி வரும் தனியார் கல்லூரியில் பேசும் போது, மாத விலக்கு ஏற்பட்ட பெண் சமைத்து மற்றவர்களுக்கு கொடுத்தால் அவர் அடுத்த பிறவியில் நாயாக பிறப்பார். அதுவே மாதவிலக்கு ஏற்பட்ட பெண் சமைத்து கொடுத்தை சாப்பிட்ட ஆண் அடுத்த பிறவியில் எருமையாக மாறிவிடுவார் என்று பேசினார்.

**‘Menstruating women cooking food for hubbies will be reborn as dogs’**

Swami Krushnaswarup Dasji's shocker also claims that men having such food will take re-birth as bullocks

The Federal
Ahmedabad, 6:55 PM, 18 February, 2020

0 COMMENTS | PRINT | A+ | A-



Principal and female staff had allegedly forced more than 60 girls to remove their undergarments to check if they were menstruating for "breaking a hostel rule that girls having their periods are not supposed to take meal with other inmates". Photo: YouTube

அதோடு அந்த கல்லூரி நிகழ்வில் கலந்து கொண்ட 60க்கும் மேற்பட்ட மாணவியர்களின் உள்ளாடைகளை சோதனை செய்து மாதவிலக்கு யாருக்கும் இருக்கிறதா என்று சோதித்து நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அனுமதித்தார்கள்.

இப்படி பெண்களை ஒரு தீட்டாக அணுகும் பழக்கம் சமய வழியில் இந்து சமூகத்தினுள் இருந்தது என்பதை மறுக்க முடியாது.

ஆனால், இஸ்லாமின் வழிகாட்டல்கள் மாத விலக்கு தொடர்பாக அனைத்து மதங்களில்

இருந்தும் வேறுபட்டு இருந்தது. பெண்களது மாத விலக்கு வலிகளின் காரணமாக அவர்களுக்கு சில கடமைகளில் இருந்து விடுவிப்பதும் அவர்களை அரவணைக்க சொல்லி அறிவுறுத்துவதுமாக இருந்தது.

*நபி(ஸல்) மனைவியர்களுள் ஒருவரான உம்மு சுலமா அவர்கள் சொல்லும் போது, எனக்கு மாத விலக்கு ஏற்பட்டது. அதனால் நான் விலகி செல்ல முற்பட்டேன். ஆனால் நபி(ஸல்) அவர்கள் என்னை அவர்களது போர்வைக்குள்ளேயே அணைத்து தூங்க சொன்னார்கள். ( நூல் - முஸ்லிம்)*

*நபி(ஸல்) அவர்களின் மனைவி ஆயிஷா அம்மையார் மாதவிலக்கு குறித்து பல ஹதீஸ்களை அறிவித்திருக்கிறார்கள், "நான் மாதவிலக்கு ஏற்பட்ட நேரத்தில் நபி(ஸல்) அவர்கள் எனது மடியில் படுத்து உறங்கினார்கள். அப்போது அவர்கள் தலையை சீவி நான் சுத்தம் செய்தேன். அவர்கள் குர்ஆனை ஓதியவாறு படுத்திருந்தார்கள். நான் கேட்டுக் கொண்டிருந்தேன்" என்கிறார்கள். (நூல் - முஸ்லிம்)*

*நபி(ஸல்) அவர்கள் என்னிடம் பள்ளி வாசலினுள் இருக்கும் போர்வையை எடுத்து வரச்சொன்னார்கள். அப்போது நான் மாத விலக்கு ஏற்பட்டிருப்பதை சொன்னேன். அதற்கு உன்னுடைய கைகளில் மாதவிலக்கு இல்லை என்று நபி(ஸல்) கூறி எடுத்து வரச்சொன்னார்கள். ( நூல் - முஸ்லிம்)*

*எனக்கு மாத விலக்கு ஏற்பட்டிருந்த சமயத்தில் நான் தண்ணீர் குடித்து கொண்டிருக்கும் போது நான் பருகிய அதே பாத்திரத்தை வாங்கி நான் வாய் வைத்து குடித்த இடத்தில் வாய் வைத்து நபி(ஸல்) அவர்களும் குடித்தார்கள். இறைச்சி உணவு சாப்பிடும் போது நான் கடித்து சாப்பிட்டு கொண்டிருந்த எலும்பை வாங்கி நான் கடித்த இடத்திலேயே கடித்து நபி(ஸல்) அவர்கள் சாப்பிட்டார்கள். ( நூல் - முஸ்லிம்)*

*நாங்கள் ஹஜ் யாத்திரிக்கைகாக மக்காவுக்கு சென்ற போது எனக்கு மாதவிலக்கு ஏற்பட்டது. அதனை நபி(ஸல்) அவர்களிடம் சொன்ன போது மக்காவை சுற்றி வரும் தவாப் தவிர மற்ற அனைத்து கடமைகளையும் முடிக்க சொன்னார்கள்.(நூல் - முஸ்லிம்)*

*நபி(ஸல்) அவர்களிடம் யூதர்களின் பழக்க வழகத்தை குறிப்பிட்டு மாதவிலக்கு குறித்து கேட்கபடுகிறது, யூதர்கள் தங்களது பெண்களுக்கு மாதவிலக்கு ஏற்பட்டால் அவர்களுடன் ஒன்றாக அமர்ந்து உண்பதில்லை, அவர்கள் வீட்டை விட்டு விலக்கி வைக்கப்படுகிறார்கள் என்று சொன்ன போது நபி(ஸல்) அவர்கள், உடலுறவு கொள்வதை தவிர மாத விலக்கு ஏற்பட்ட பெண்களுடன் எப்போதும் போல் இருங்கள் என்றார்கள். ( நூல் - முஸ்லிம்)*

நபி(ஸல்) அவர்களின் வழிகாட்டுதலும், குரானும் தான் இஸ்லாம். இப்படி மிகத் தெளிவான வழிகாட்டுதலின் கீழ் வாழும் முஸ்லிம்களுக்கு மிக எளிமையாக மாதவிலக்கு என்ற பெயரில் நடத்தப்பட்ட அடிமை வாழ்வில் இருந்து விடுதலை கிடைத்தது. இந்த விடுதலையை பெற பெண்கள் மிக எளிமையாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வது மட்டுமே அவர்களுக்கு போதுமானதாக இருந்தது.

இப்படி இஸ்லாம் அழகான வழிகாட்டுதலை கொண்டிருக்கும் போதும் நவீன மேற்குலக விமர்சகர்கள், இப்போதும் 20ம் நூற்றாண்டில் இஸ்லாம் பெண்களுக்கு எதிராக மாதவிலக்கு அடிப்படையில் கட்டுப் பாடுகள் விதிக்கிறது என்ற விமர்சனங்களை முன்வைக்கிறார்கள்.

அதில் முதலாவது, உடலுறவு வைத்துக் கொள்ள தடை. இரண்டாவது, தொழுவதற்கான தடை. முதலாவது விமர்சனத்திற்கான பதில் அது மருத்துவ ரீதியாக தவறு என்பது தான். இதனை பல்வேறு அறிவியல் ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

பெண்ணுக்கு மாதவிலக்கு ஏற்பட்டிருக்கும் போது உடலுறவு வைத்து கொண்டால் சம்பந்தப்பட்ட ஆணுக்கோ, பெண்ணுக்கோ பாலியல் ரீதியான நோய்கள் வருவதற்கான

வாய்ப்புகள் அதிகம். இரண்டாவது, தொழுவதற்கான தடை. இதில் கவனிக்க வேண்டியது இஸ்லாத்தின் கட்டுப்பாடுகள் பெண்களுக்கானது மட்டுமல்ல. ஆண்களுக் கானதும் கூட.

ஆண்கள், உடலுறவுக்கு பின் குளிக்காமல் பள்ளிவாசலுக்குள் நுழையக்கூடாது. தொழுகக் கூடாது. விந்து வெளியேறி விட்டால் தொழுக கூடாது என்று சுத்தம் சார்ந்து தடைகள் இருக்கிறது.

இதை போலவே பெண்களின் மாத விலக்கின் போதும் தொழுவதற்கு மட்டுமே மறுக்கப்பட்டிருக்கிறது ஒழிய இறைவனை துதிக்கவோ, இறைவனிடம் தன் தேவைகளை கேட்கவோ எந்த தடைகளும் இல்லை.

இது தனிப்பட்ட மனிதருக்கும் இறைவனுக்கும் இருக்கும் உறவில் வரக் கூடியது. ஒரு ஆண் உடலுறவு கொண்டு குளிக்காமல் பள்ளிவாசலுக்குள் வந்து தொழுது விட்டு போக முடியும்.

அதே போல் ஒரு பெண்ணும் தனது மாதவிலக்கை மறைத்து விட்டு பள்ளிக்குள் வந்து தொழுதுவிட்டு போக முடியும். ஆனால், உண்மை இறை நம்பிக்கை கொண்டவர்கள் இதனை செய்வதிலை.

இந்த தடை என்பது சமூகத்தடை கிடையாது, தனிப்பட்ட மனிதர்கள் தங்கள் இறைநம்பிக்கை சார்ந்து விரும்பி ஏற்றுக்கொண்ட தடைகள்.

இப்படி இஸ்லாம் பெண்கள் குறித்து சாதித்த சாதனைகளில் மாதவிலக்கும் ஒன்று. ஆனால் இது குறித்து பலர் பெரிய அளவில் பேசியதில்லை.

பல நூற்றாண்டுகளாய் முஸ்லிம் பெண்கள் அனுபவித்து வரும் இந்த சுதந்திரம் 20ம் நூற்றாண்டில் தான் பல பெண்களுக்கு கிடைத்திருக்கிறது.

**- அபூ சித்திக்**

07.02.2023


ஆதாரங்கள் : Muslim hadees 003:0592:Ch002

https://www.theglobeandmail.com/news/world/nepalese-menstruation-tradition-dies-hard/article11644844/

https://www.iium.edu.my/deed/hadith/muslim/003_smt.html

https://www.thehindu.com/news/national/menstruating-women-cooking-food-for-husbands-will-be-reborn-as-dogs-says/article30852624.ece/amp/

https://www.biblestudytools.com/nlt/leviticus/passage/?q=leviticus+15:19-33

https://lightofislam.in/how-islam-destigmatized-menstruation/

https://www.ncbi.nlm.nih.gov/pmc/articles/PMC6642425/


https://www.ncbi.nlm.nih.gov/pmc/articles/PMC2941592/

https://pubmed.ncbi.nlm.nih.gov/8885071/

https://www.iium.edu.my/deed/hadith/bukhari/006_sbt.html



## முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?




- அரபி மொழியில் முதல் பதிப்பை எகிப்தின் (RESEARCH TRANSLATION AND PUBLICATION IN EGYPT) ஆராய்ச்சி மற்றும் மொழிபெயர்ப்பு வெளியீட்டுக்கான அகாடமி 1950ல் கெய்ரோவில் வெளியிட்டது.
- உலகெங்கும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. அரபுலகின் மிகச் சிறந்த சிந்தனையாளர்களெல்லாம் இந்த நூலிலிருந்து மேற்கோள் காட்டி எழுதவும் பேசவும் செய்தார்கள்.
- அடுக்கடுக்காய் மிகச்சிறியதொரு காலத்தில் ஆறு பதிப்புகள் வெளிவந்தன. அதே காலகட்டத்தில் பார்சி, துருக்கி ஆகிய மொழிகளிலும், இந்த நூல் மொழிபெயர்க்கப்பட்டது. உருது மொழியில் 1954ல் வெளியிடப்பட்டது.

272 பக்கம் | 300/-

Vergal Pathippagam



# அமெரிக்காவின் நியூ ஜெர்சியில்

# ஹிஜாப் அணிந்த முதல் நீதிபதி

# நாதியா காஃப்

அமெரிக்காவின் நியூ ஜெர்சி மாகாணம். ஒரு முஸ்லிம் பெண்மணி நீதிபதியாக பதவியேற்கிறார். குழுமியிருந்த வழக்கறிஞர்கள், சக நீதிபதிகள் என அனைவரும் கைத்தட்டி வரவேற்கின்றனர்.

ஆனால் ஐரோப்பாவின் ஊடகங்கள் ஆர்ப்பரிக்கின்றன. அதை Flash Newsஆக தொடர்ந்து ஒளிபரப்புகின்றன. காரணம், அந்த பெண்மணி நீதிபதியாக பதவியேற்கும் போது, முழுமையான ஹிஜாப் அணிந்து, திருக்குர்ஆன் மீது கை வைத்து பதவி பிரமாணம் செய்கிறார்.

ஆம்! நாதியா காஃப். அமெரிக்காவில், நியூ ஜெர்ஸி மாகாணத்தில் முதன் முதலில் ஹிஜாப் அணிந்து பதவியேற்ற முதல் பெண் நீதிபதி இவர்தான். இதற்கு முன் பல முஸ்லிம் பெண்கள் நீதிபதிகளாக வந்திருக்கின்றனர். ஆனால் நாதியா காஃப் தான் முதன் முதலில் ஹிஜாப் அணிந்து பதவியேற்ற முதல் முஸ்லிம் பெண் நீதிபதியாவார்.



மகளிர் மன்றம்




**யார் இந்த நாதியா காஃப்?**

- தன்னுடைய இரண்டு வயதில் சிரியாவிலிருந்து அகதியாக அமெரிக்காவுக்கு வந்தவர் நாதியா. தன்னுடைய இளைய பருவத்தில் பல, இஸ்லாமிய நிறுவனங்களில் பணியாற்றியுள்ளார்.
- 2003ம் ஆண்டிலிருந்து Council on American-Islamic Relations என்ற அமைப்பில், Islamic civil rights organization பகுதியில் உறுப்பினராக இருந்து வருகின்றார்.
- அமெரிக்காவின் பெரிய, பெரிய பள்ளிவாசல்களை கொண்ட நியூ ஜெர்ஸி மாகாணத்திலுள்ள “பாஸைக் கவுண்டி” என்ற பகுதியில் தொடர்ந்து இஸ்லாமிய பணிகளை மேற்கொண்டு வருகின்றார்.
- கிளிஃப்டனில் உள்ள Wafa House என்ற “குடும்ப வன்முறை மற்றும் சமூக சேவைகளை” மேற்கொள்ளும் நிறுவனத்தில் சட்ட ஆலோசகராகவும் உள்ளார்.
- New Jersey’s Insider என்ற அமெரிக்காவின் நாளிதழ் 2020ல் சட்டம், அரசியல், சமூக நீதி, வணிகம் போன்ற துறைகளில் செல்வாக்குமிக்க மனிதர்கள் பட்டியலில் நாதியா காஃப் அவர்களின் பெயரையும் வெளியிட்டது.

**பன்முகத்தன்மை - நமது பலம்**

பதவியேற்பு விழாவில் நாதியா காஃப் பேசுகையில்,

“அமெரிக்காவின் நியூ ஜெர்ஸியில் ஒரு முஸ்லிமாக, அரபு சமூகமாக இப்போது நான் பெருமை கொள்கிறேன். நமது இளைய சமூகத்திற்கு நான் ஒன்றை கூற விரும்புகிறேன். அவர்கள் தத்தமது மதத்தை எந்த பயமும் இல்லாமல் பின்பற்ற வேண்டும். பன்முகத்தன்மை என்பது நமது பலமே தவிர, பலவீனமல்ல” என்று பேசினார்.

**- Jasmine Fathima Bsc.Bed.LLB.,**



**அமெரிக்காவின் அரிஸோனாவில்**

## ஹிஜாப் அணிந்த முதல் நீதிபதி

# லைலா இக்ரம்

நாதியா காஃப் போல அமெரிக்காவின் அரிஸோனா மாகாணத்தில் ஜூன் மாதம் 2022ல் நீதிபதியாக பதவியேற்றார் லைலா இக்ரம். தனது பதவியேற்பின் போது ஹிஜாப் அணிந்து, திருக்குர்ஆன் மீது கை வைத்து பதவி பிரமாணம் செய்தார் லைலா.



அப்போது Phoenix Business Journal என்ற அமெரிக்காவின் இதழ் first judge to swear the oath of office on a Quran – திருக்குர்ஆன் மீது கைவைத்து பதவி பிரமாணம் செய்த முதல் நீதிபதி என்று தலைப்பிட்டு செய்து வெளியிட்டிருந்தது.

லைலா இக்ரம் பாலஸ்தீனில் உள்ள காஸா பகுதியை பூர்வீகமாக கொண்டவர். காஸா பகுதியில் (இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின்) போர் சூழல் காரணமாக அகதியாக அமெரிக்காவிற்குள் குடியேறியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பிரபல கிருஸ்தவ பாதிரியார்

# ஹிலாரியன் ஹீகி

# இஸ்லாத்தை ஏற்றார்!

ஹிலாரியன் ஹீகி ஒரு அமெரிக்க பாதிரியார். முன்பு அவர் ரஷ்யாவின் ஆர்தடக்ஸ் கிருஸ்தவ துறவியாக இருந்தவர்.தன்னுடைய பொருமை, நற்குணம் மூலம் உயர்ந்த மரியாதையை பெற்றவர்.

2003ல் ஹிலாரியன் ஹீகி அந்தியோக்கியன் ஆர்தடக்ஸ் சர்சுக்கு மாறினார். அதன் பின் 2017ல் கிழக்கு கத்தோலிக்க திருச்சபையில் இணைய முடிவெடுத்தார். மேலும் அவர் பைசாந்திய கத்தோலிக்க திருச்சபையில் பாதிரியாராக, விஸ்கான்ஸினில் உள்ள செயிட்ன் நாஸியன்ஸ் உயிர்தெழுதல் சர்ச்சில் பட்டம் பெற்றவராவார்.

தான் இஸ்லாத்தை ஏற்றதை குறித்து அறிவிக்கும் போது, “இஸ்லாத்திற்கு திரும்புதல் என்பது எனது வீட்டிற்கு திரும்ப செல்வது போல என்னை உணர வைக்கின்றது என்றார்.

“இது நான் பிறந்த போது எனக்குள் இருந்த நம்பிக்கை. இது உண்மையில் நான் எனது வீட்டிற்கு வருவதைப் போல உணரவைக்கின்றது. நாம் இந்த பூமியில் பிறப்பதற்கு முன்பு அந்த ஒரு கடவுளை (அல்லாஹ்) தான் வணங்கி, அவனுக்கே அடிபணிந்தோம். இது குறித்து குர்ஆன் இப்படி கூறுகின்றது,

உம் இறைவன் ஆதமுடைய மக்களின் முதுகுகளிலிருந்து அவர்களுடைய சந்ததிகளை

வெளியாக்கி, அவர்களைத் தங்களுக்கே சாட்சியாக வைத்து: "நான் உங்களுடைய இறைவன் அல்லவா?" என்று கேட்டதற்கு, அவர்கள் "மெய் தான். நாங்கள் சாட்சி கூறுகிறோம்" என்று கூறியதை (அவர்களுக்கு) நினைவூட்டுவீராக; (ஏனெனில் இது நினைவூட்டப்படாததனால்) நிச்சயமாக இதனை (மறந்து) விட்டுப் பராமுகமாக இருந்து விட்டோம் என்று மறுமை நாளில் நீங்கள் (யாருமே) சொல்லாதிருக்கவும். (அல்குர்ஆன் : 7;172)

இதனால் தான் மதம் மாறிய முஸ்லிம்கள், தங்கள் மதமாற்றத்தை "இஸ்லாம் மதத்திற்கு திரும்புதல்" என்று குறிப்பிடுகின்றனர். இதுதான் நமது உணமையான மூல நம்பிக்கை. மாறாக மாறுதல் அல்ல."

இஸ்லாத்திற்கு திரும்பிய ஹிலாரியன் ஹீகி தனது பெயரை அப்துல் லதீப் என்று மாற்றியுள்ளார். தான் இஸ்லாத்திற்கு திரும்பியவுடன் தன்னை முஸ்லிம்கள் வரவேற்றதை குறித்து இப்படி கூறுகிறார் அப்துல் லதிப்,

"நான் இஸ்லாத்தை ஏற்றதும் முஸ்லிம் சமூகம் நம்ப முடியாத அளவில் என்னை வரவேற்று அரவணைத்துள்ளது. நேரிலும், இணையத்திலும் முஸ்லிம்களின் இந்த அரவணைப்பானது இதுவரை நான் எங்கேயும் பார்த்திராதது."

"எதிர்காலம் எனக்கு நிச்சயமற்றது. இருட்டில் குதிக்கும் போது எப்போதும் சில அச்சங்கள் தோன்றும். ஆனால் இப்போது நான் அமைதியை உணர்கின்றேன். சந்தோஷமாக இருக்கின்றேன். இறுபது வருடங்களாக இஸ்லாத்தின் பால் ஈர்க்கப்பட்ட எனக்கு இஸ்லாத்திற்கு திரும்பியதன் மூலம் நிம்மதி கிடைத்துள்ளது. எனது வாழ்வில் ஓரிறை நம்பிக்கையின் செயல்முறை இப்போது தொடங்குகிறது. ஆழ்ந்த கல்வியின் மூலமும், இந்த தீனின் மீதும் பற்றுதலுடனும், இந்த உம்மத்தின் மீதான பற்றுதலுடனும், நபி(ஸல்) அவர்களின் மீதான பற்றுதலுடனும் தொடங்குகிறது."

ஆதாரம் - https://radianceweekly.net/prominent-christian-priest-hilarion-heagyreverts-to-islam/



## 21 வயதான பிரிட்டனின் கோடீஸ்வரர்

# இஸ்லாத்தை ஏற்றார்!

பிரிட்டனுடைய முகவும் புகழ் பெற்ற மற்றும் வெற்றி கரமான தொழிலதிபராக அறியப்படுகின்ற ஆல்ஃபே பெஸ்ட் ஜூனியர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

ஆல்ஃபே பெஸ்ட் ஜூனியர் லண்டனிலுள்ள ரெட்பிரிட்ஜ் எனுமிடத்தில் மே, 22 1997 அன்று பிறந்தார். லண்டனில் மிகவும் இளம் வயதில் (17 வயது) பூங்கா உரிமை யாளரான முதல் நபர் ஆல்ஃபே தான்.

ஆல்ஃபே தந்தையின் சொத்து மதிப்பு மட்டுமே 5800 கோடிகள் என்று Sunday Times பத்திரிகை கூறுகின்றது.

ஒரு சில மாதங்களுக்கு முன் ஆஸ்ஃபே, தான் ஒரு பள்ளிவாசலில் இருக்கும் புகைப் படத்தை பகிர்ந்து,

"அல்லாஹ் யாரை நேர்வழிப் படுத்தினானோ அவனை யாராலும் வழிகெடுக்க முடியாது. அல்லாஹ் யாரை வழிகேட்டில் விட்டானோ அவனை யாராலும் நேர்வழிப்படுத்த முடியாது" என்று எழுதியிருந்தார்.

https://muslimmirror.com/




# தென்முடியனூர் தீண்டாமை!

> “கோவிலுக்குள் நுழைந்து விடலாம் என்று கனவில் கூட நினைத்து விடாதே என்றுதான் என் அம்மா எப்பொழுதும் என்னிடம் கூறுவார். மற்ற ஜாதிகளை சேர்ந்த பள்ளித் தோழிகள் சாமி கும்பிடும் போதெல்லாம் நாங்கள் வெளியே நின்றே பார்க்கவே அனுமதிக்கப்படுவோம்.”

சென்னையில் இருந்து 200 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது திருவண்ணாமலை மாவட்டத்தின் தென்முடியனூர் கிராமம். அங்கே இருக்கும் முத்து மாரியம்மன் கோவிலில் மற்ற ஜாதிகளை போல தலித்கள் சென்று வழிபட முடியாது. 80 வருடங்களாக இந்த சமூக புறக்கணிப்பு தொடர்கிறது.

தியாகிகள் தினமான ஜனவரி 30-ம் தேதி தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியை தமிழக அரசு நிறைவேற்றுகிறது. கடந்த ஜனவரி 30-ம் தேதி , மாவட்ட கலெக்டர் B முருகேஷ், காவல்துறை கண்காணிப்பாளர் (SP) கார்த்திகேயன், வருவாய் கோட்டாட்சியர் (RDO) மந்தகினி ஆகியோர் உதவியுடன் தலித்கள் கோவிலுக்குள் சென்று வழிபட்டனர்.

மீடியாக்களில் இச்செய்தி வந்தது. ஆனால் அவர்களின் மகிழ்ச்சி நெடு நாட்கள் அல்ல கொஞ்ச நாட்கள் கூட நீடிக்கவில்லை. தாக்குதல்களையும் பொருளாதார புறக்கணிப்பையும் தலித்கள் மீது அவிழ்த்து விட்டனர் ஜாதி இந்துக்கள்.

தலித்களுக்கு சொந்தமான விளைநிலங்களுக்கு செல்லும் தண்ணீர் வசதிகள் நிறுத்தப் பட்டன.

மேலும், அடிக்கும் வெயிலின் உஷ்னத்தில் பயிர்கள் வாடின. தலித்கள் வேலையை விட்டு நீக்கப்பட்டனர். அவர்கள் மீது சமூக, பொருளாதார புறக்கணிப்பை மேற்கொண்டனர் ஜாதி இந்துக்கள். இதனால் அவர்கள் வாழ்வாதார தேவைக்கும், பொருள்களை வாங்குவதற்கும் அருகில் இருக்கும் கிராமத்திற்கு செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. திருமண விழாக்கள், இறுதி சடங்குகள், மற்றும் இதர திறப்பு விழாக்களிலும் பறையர் சமூகத்தை சேர்ந்தவர்களின் நிகழ்ச்சிகள் புறக்கணிக்கப் பட்டன.

**கோவிலில் வழிபாடு நடத்தியதற்கு எதிர்வினை**:

தென்முடியனூரிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் எடத்தனூர் சந்திப்பு உள்ளது. அங்கே, தலித் சமூகத்தைச் சேர்ந்த இந்திரா (44) என்ற பெண்ணிற்கு சொந்தமான கடை உள்ளது. அதை பெப்ரவரி 7ஆம் தேதி காலையில் எரித்து சாம்பலாக்கியுள்ளனர்.

"நான் இங்கே தனியாக வசித்து வருகிறேன். கடையின் பூட்டு உடைக்கப்படவில்லை. எந்த பொருள்களும் திருடப்படவில்லை" என்று இந்திரா தெரிவித்துள்ளார். எனவே இது ஜாதிய வன்மத்தினால் நடந்துள்ளது என்பது தெளிவாகிறது.

SC /ST (Prevention of Atrocities வன்கொடுமை தடுப்பு) சட்டம் பிரிவு 3(2)(iii) இன் கீழ் காவல் துறை வழக்கு பதிந்து இருக்க வேண்டும் என்கிறார் வழக்கறிஞரும், Uncaste என்ற புத்தகத்தின் ஆசிரியருமான காரல் மார்க்ஸ் சித்தார்த்.

வட்டார கோட்டாட்சியர் மந்தகினி ஜனவரி 25ல் நடத்திய அமைதி குழு பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட 12 தலித்துகளில் இந்திராவும் ஒருவர்.

தண்டாரம் பட்டு காவல் நிலையத்தில் கடை எரிப்பு குறித்து புகார் கொடுத்த போது, ஆரம்பத்தில் அவர்கள் வழக்கு பதிவு செய்ய தயக்கம் காட்டினர். பின்னரே, பிரிவு 435 (நெருப்பு அல்லது வெடிபொருட்கள் மூலம் தீங்கு விளைவித்தல்) இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தனர் என்று விவரிக்கிறார் இந்திரா.

ஆதிக்க ஜாதியை சேர்ந்த ராஜா இச்சம்பவத்திற்கு காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கிறார் இந்திரா. இவர் தென்முடியனூர் பஞ்சாயத்து துணை தலைவர் வள்ளியின் கணவர். கோவிலில் சென்று வழிபாடு நடத்தியதற்கு பின் பலமுறை இந்திராவை ராஜா மிரட்டியுள்ளார்.

விசாரனை நடைபெற்று வருகிறது. அதே நேரத்தில், கோவில் நுழைவுக்கு பின் ஜாதிய




எரிக்கப்பட்ட இந்திராவின் கடை

பாகுபாட்டினால் தான் இச்சம்பவங்கள் நடைபெறுகின்றன என்பதை தண்டாரம் பட்டு காவல் ஆய்வாளர் தனலட்சுமி ஏற்றுக் கொள்ளவில்லை.

**கோவில் நுழைவுக்கு பின் நடந்த சம்பவங்கள்:**

கொரியர் ஒன்றை பெறுவதற்காக பஸ் நிறுத்தத்தில் சந்தோஷ் (25) என்ற தலித் இளைஞர் காத்து நின்றுள்ளார். அப்பொழுது அங்கே கூடி நின்ற 20 பேர் சந்தோஷை ஜாதி அடையாளத்தை சுட்டிக்காட்டி வசைபாடியுள்ளனர். அவரை அந்த இடத்தை விட்டு கிளம்பவும் வற்புறுத்தி உள்ளனர். அங்கே பணியில் நின்ற காவலர்கள் தலையிட்டு நிலைமையை சரி செய்யாமல் விட்டிருந்தால் அவர்கள் இன்னும் மோசமாக நடந்திருப்பார்கள் என்கிறார் சந்தோஷ்.

பிரகாஷ் ஒரு தலித் விவசாயி. அவருக்கு சொந்தமாக தென் முடியனூரில் ஒரு சிறிய நிலம் உள்ளது. அதில் அவர் கரும்பு பயிரிட்டு வருகிறார். இதனை சுற்றியுள்ள நிலங்கள் ஆதிக்க ஜாதியை சேர்ந்த ஒருவரின் வசம் உள்ளது. அவர் பிரகாஷ் நிலத்திற்கு வரும் தண்ணீர் வரவை தடுத்து விட்டு உள்ளார் .

“எங்களிடையே எழுதப்படாத ஒரு உடன்படிக்கை உள்ளது. அது, அவர்களுடைய கிணறுகளில் இருந்து தண்ணீரை எங்களுக்கு தருவார்கள். பயிரிட்ட பின் தண்ணீருக்கான பணத்தை நாங்கள் கொடுத்து விடுவோம். ஆனால் இப்பொழுது என்னுடைய பயிர்கள் வாடிவிட்டன.”

யாரும் இதற்காக எதுவும் செய்யவில்லை என நொந்து கொண்டார் பிரகாஷ்.

கோவில் நுழைவிற்கு முன் பிரகாசிட மிருந்தும் மற்ற தலித் விவசாயிகளிடமிருந்தும் ஆவின், ஹட்சுன், மற்றும் இதர நிறுவனங் களுக்காக பாலை பெற்றுக் கொள்வதை வழக்கமாக கொண்டிருந்தனர் ஜாதி இந்துக்கள். இனிமேல் அவர்கள் அப்படி செய்யப் போவதில்லை. ஒரு வாரம் கறந்த பால் முழுவதையும் கொட்டிடும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளதாக பிரகாஷ் கூறுகிறார்.

ஷேர் ஆட்டோ ரிக்ஷாகளில் பயணம் செய்வதும் தலித்களுக்கு தடுக்கபட்டுள்ளதால், பஸ் நிறுத்தம் வரை வருவதும் அவர்களுக்கு சிரமமாக்கப்பட்டுள்ளது. இனிமேல் வேலைக்கு வர வேண்டாம் என்று ஜாதி இந்துக்களிடம் பண்ணையாளாக வேலை பார்த்தவர்களிடம் கூறப்பட்டுள்ளதாக முருகன் தெரிவிக்கின்றார்.

இவர் தென்முடியனூரை சேர்ந்தவர். தற்போது சென்னையில் வசிக்கிறார். ஜனவரி 30இல் கோவிலுக்கு சென்று வழிபட்டவர் களில் இவரும் ஒருவர்.

**நீண்ட நாள் கோரிக்கை:**

தென்முடியனூர் முத்துமாரியம்மன் கோவிலில் 12 நாட்கள் பொங்கல் திரு விழாவை ஜாதி இந்துக்கள் கொண்டாடு வார்கள். அதில் கலந்து கொள்ள வேண்டும் என்பதே தலித்களின் நீண்ட நாள் கோரிக்கை.

இக்கோவில் தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் 30 ஆண்டுகளாக உள்ளது.

கோவில் நுழைவு என்பது தலித்துகளின் நீண்ட கால கோரிக்கையாக இருந்தாலும் ஜாதி இந்துக்கள் அவர்களுக்கு எதிராக நிற்கின்றனர். அவர்களின் வழிபாட்டு உரிமையை மறுக்கின்றனர். கோவில் வளாகத்தில் அவர்கள் நுழைந்தால் கோவில் தீட்டுபட்டுவிடும் என்று தீண்டாமை பாராட்டுகின்றனர்.

கோயிலுக்குள் சென்று வழிபட்டிட தேவையான முயற்சிகளை இந்து சமய அறநிலைய துறை முன்னெடுக்க வேண்டும் என்று தலித்கள் மனு அளித்துள்ளனர். அதன் பின்பே, வருவாய் கோட்டாட்சியர் துறை அமைதி பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது. அதில் பல்வேறு ஜாதிகளில் இருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

ஜனவரி 25ல் நடந்த இக்கூட்டத்தில், தலித்கள் ஜனவரி 30ம் தேதியிலிருந்து கோவிலுக்குள் செல்லலாம் என ஜாதி இந்துக்கள் சம்மதித்துள்ளனர்.

சந்தோசத்தில் தலையே சுற்றி விடும் போல் இருந்துள்ளது கிராமத்தில் வசித்து வந்த தலித்களுக்கு. அந்த மகிழ்ச்சியான தருணத் திற்காக பலர் புத்தாடைகள் வாங்கினர்.




மூடியிருக்கும் ஜாதி இந்துக்களின் கடைகள்

“கோவிலுக்குள் நுழைந்து விடலாம் என்று கனவில் கூட நினைத்து விடாதே என்றுதான் என் அம்மா எப்பொழுதும் என்னிடம் கூறுவார். மற்ற ஜாதிகளை சேர்ந்த பள்ளித் தோழிகள் சாமி கும்பிடும் போதெல்லாம் நாங்கள் வெளியே நின்றே பார்க்கவே அனுமதிக்கப் படுவோம். இறுதியாக, ஜனவரி 30 அதை நனவாக்க வைத்தோம்”

என்று தான் அடைந்த சந்தோசத்தை The News Minute (TNM) பத்திரிகையாளர்களிடம் பகிர்ந்துள்ளார் ஒரு தலித் சிறுமி (14).

ஆனால் குறிப்பிட்ட தேதியன்று உடையார், அகமுடையார், ரெட்டி, நாயுடு, செட்டியார் மற்றும் வன்னிய ஜாதிகளை சேர்ந்தவர்கள் தாங்கள் கொடுத்த வாக்குறுதியை மீறி மறியலில் ஈடுபட்டனர். அதன்பின் மாவட்ட நிர்வாகமும், காவல்துறையும் தலையிட்ட பின்னரே தலித்களால் கோவிலில் சென்று வழிபாடு நடத்த முடிந்தது. இதன் காரணமாக, இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் கோவிலை பூட்டி சாவியை எடுத்து சென்று விட்டனர்.

பெப்ரவரி 19 மஹா சிவராத்திரி அன்றும் கோவில் நடை மூடப்பட்டிருந்தது. பிரச்னைகளை தவிர்க்க வேண்டி கோவிலை சுற்றி காவல்துறை நிறுத்தப்பபடிருந்தது. பஸ் நிறுத்தங்கள், தலித் காலணிகள், கிராமத்தின் நுழைவு வாயில் என பல இடங்களில் தடுப்பு வேலிகள் போடப்பட்டிருந்தன.

அம்பேத்கர் காலனியின் முகப்பில் இருக்கும் மளிகை கடைகள் 20 நாட்களாக பூட்டி கிடக்கின்றன. ஆதிக்க ஜாதியை சேர்ந்தவர் களுடைய கடைகள் அவை. இதனால் அவர்களுக்கு வருமான இழப்பு என்றாலும் தலித்கள் மீது விதிக்கப்பட்ட ஊர் கட்டுப்பாடே முக்கியம் என்பதை இது உணர்த்துகிறது.

“தலித்கள் வசிக்கும் பகுதியில் இருந்து சில அடி தூரத்தில் இக்கடைகள் அமைந்துள்ளன. அதனாலேயே கடைகளை திறக்காமல் உள்ளனர்” என்று கூறுகிறார் குபேந்திரன். இவர் அக்கடைகளுக்கு பக்கத்திலேயே டீ கடை ஒன்றை நடத்தி வருகிறார். குபேந்திரனுக்கு வயது 53. இவர் தலைவராக பதவி வகிக்கும் டாக்டர் BR அம்பேத்கர் சமூக எழுச்சி படை என்ற சமூக அமைப்பே கடந்த வருடம் மாவட்ட நிர்வாகத்திடம் கோவில் நுழைவு பிரச்னையை எடுத்து சென்றது.

“எட்டாம் வகுப்பு முடித்த பின்பு நான் பெங்களூர் சென்று விட்டேன். அங்கே 25 வருடம் வேலை செய்த பின் மீண்டும் சொந்த ஊர் வந்தேன். அந்த அனுபவம் என்னுடைய கிராமத்தையும் அதன் ஜாதிய அமைப்பையும் புதிய கண்ணோட்டத்தில் பார்த்திட வழி வகுத்தது. மற்ற மாவட்டங்களில் உள்ள இருளர் பட்டியல் பழங்குடியினர் (Scheduled Tribe) முத்து மாரியம்மன் கோவிலில் நுழைய அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் அதே




குற்றச்சாட்டை முன் வைக்கின்றனர் கிராம வாசிகள்.

ரேசன் கடைக்கு சென்று இது குறித்து TNM கேட்டுள்ளது. குற்றச்சாட்டை மறுத்த அவர்கள், நாங்கள் எண் வரிசை அடிப்படையிலே பொருள்களை வந்து பெற்று கொள்ள மக்களிடம் கேட்டு கொண்டுள்ளோம். இங்கே எந்த வித பாகு பாடும் கடைப்பிடிப்பதில்லை என்றுள்ளார் ரேசன் கடை ஊழியர்.

ஆனால் இந்த வேறுபாட்டை அரசின் மற்ற திட்டங்களில் காணலாம் என கூறுகிறார் இந்திரா. பல வருடங்களுக்கு முன் ஜாதி இந்துக்களிடம் இணைந்து பணியாற்றுவதை நிறுத்தி விட்டதாக கூறுகிறார். தலித்களின் இடுகாடுகளை சுத்தம் செய்ய ஜாதி இந்துக்கள் மறுத்ததே அதற்கு காரணம் என்கிறார்.

அதாவது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் இப்பணிகள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. "நாங்கள் ஜாதி இந்துக்களின் இடுகாடுகளை சுத்தம் செய்தோம். ஆனால் அவர்கள் அதற்கு அடுத்தாற் போல் உள்ள எங்களின் இடுகாடுகளின் பக்கம் செல்வதற்கு கூட மறுத்து விட்டனர்" என்கிறார் இந்திரா.

கிராமத்தில் வசிக்கும் தலித்களுக்கு அனுமதி இல்லை. இது எந்த விதத்தில் நியாயம்?" என்று வினவுகிறார் குபேந்திரன்.

சத்திய சீலன். தென்முடியனூரில் வசிக்கும் தலித். பகிர்ந்து கொள்ள அவரிடம் இது போன்ற பல சம்பவங்கள் உள்ளன. "ஜாதி இந்துக்களால் நடத்தப்படும் உணவகங்களில் அமர்ந்து சாப்பிட நாங்கள் அனுமதிக்கப் படுவதில்லை. ஆனால் இதுவரை பார்சல் பெற்றுக்கொள்ளவாவது எங்களை அனுமதித் தார்கள் அவர்கள். ஆனால் கோவிலில் நுழைந்த பின்பு, பார்சல் தரவும் மறுத்து விடுகிறார்கள் என்று TNM இடம் நொந்து கொண்டுள்ளார் அவர்.

ஜாதி இந்துக்களுக்கு ஒரு நாள், தலித்களுக்கு இன்னொரு நாள் என பிரித்தே ரேசனிலும் பொருள்களை தருகிறார்கள் என்ற

### இரட்டை டம்ளர் முறை:

இரட்டை டம்ளர் நடைமுறையும் கிராமத்தில் பழக்கத்தில் இருப்பதாக குற்றச்சாட்டு உள்ளது. ஜாதி இந்துக்களால் நடத்தப்படும் டீ கடைகளுக்கு தலித்கள் சென்றால் அருகில் தலித் காலனிகளில் உள்ள கடைகளுக்கு அவர்கள் திருப்பி அனுப்ப படுகின்றனர். தலித் குழந்தைகள் அதிகமாக படிக்கும் தென்முடியனூர் ஆரம்ப பள்ளியின் நிர்வாக குழுவில் இதுவரை தலித் பெற்றோர்கள் தலைமை பொறுப்பில் சேர்க்கப் பட்டதில்லை.

### பதவியால் என்ன பயன்?

தலித் பஞ்சாயத் தலைவரான லோகேஸ்வரி எழுமலையை ஜாதி இந்துக்கள் நடத்தும் விதம் பல தலித்களுக்கு திருப்தி கரமானதாக இல்லை. லோகேஸ்வரி எழுமலை

அலுவலகத்தின் உள்ளே பணியாற்றும் போது கூட, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிக்கு என்று ஒதுக்கப்பட்ட நாற்காலியில் அவர் உட்கார அனுமதிக்கப்படுவதில்லை. ஜாதி இந்துக்கள் எடுக்கும் எல்லா முடிவுக்கும் அவருடைய கணவர் எழுமலை பக்க துணையாக இருக்கின்றார் என்கின்றனர் கிராமத்தார்கள்.

ஜனவரி 30 அன்று கோவிலுக்குள் சென்று வழிபடாத தலித்களில் லோகேஸ்வரியும் ஒருவர். கோவில் நுழைவு ஒரு மோசமான ஐடியா என்று நினைக்கிறார் அவர்.

காவல்துறை கண்காணிப்பாளர் கார்த்திகேயனை சந்தித்து இந்திராவின் வழக்கில் ஏன் SC/ST பிரிவு பயன்படுத்தப் படவில்லை என TNM பத்திரிகையாளர்கள் கேட்டதற்கு,

“குற்றமிழைத்தவர் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். தலித்துகள் இரு பிரிவாக செயல்படுகின்றனர். ஒரு பிரிவு கோவில் நுழைவை ஆதரிக்கிறது. மற்றொரு பிரிவு அதை எதிர்க்கிறது. குற்றம் இழைத்தது யார் என இன்னும் கண்டுபிடிக்கப்பட வில்லை. தலித் அல்லாதவர் தான் குற்றம் இழைத்தவர் என கண்டுபிடிக்கப்பட்டால் SC/ST பிரிவின் கீழ் வழக்கு பதியப்படும்” என கார்த்திகேயன் கூறியுள்ளார்.

“தலித்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்று கூறப்படும் கடைகளுக்கு தான் தனிப்பட்ட முறையில் சென்றதாகவும், குற்றச்சாட்டை நிரூபிக்கும் எந்த சான்றுகளும் இல்லை. மேலும், இரு சமூகத்தில் இருந்தும் சிலர் சமுதாயத்தை தூண்டிவிட விரும்புகின்றனர். அவர்கள் யார் என கண்டுபிடிக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்” என்கிறார் SP கார்த்திகேயன்.

*ஆதாரம்:* Dalits face massive backlash for temple entries as TN govt fails to protect them / The NEWS Minute

**- அபூஹாசின்**



# அல்குத்ஸ் (மீட்பு) தினம்




## ரமழான் மாதம் கடைசி வெள்ளிக் கிழமை 21-04-2023

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் அபூதர்(ரழி), ‘‘பூமியில் எது முதல் மஸ்ஜித்?’’ என்று கேட்டார்கள். ‘‘புனிதமிக்க மஸ்ஜித் ஹராம் (காபா)’’ என பெருமானார்(ஸல்) அவர்கள் சொன்னார்கள். அடுத்து எது? எனக்கேட்டார்கள், ‘‘தொலைவில் உள்ள மஸ்ஜிதுல் அக்ஸா’’ என பெருமானார்(ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

இன்னொரு நபிமொழியில் பெருமானார்(ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘மூன்று மஸ்ஜித்களைத் தவிர வேறெங்கும் நன்மையை நாடி பயணம் செய்வது என்பதில்லை. அவை மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுல் நபவி, பைத்துல் – முகத்திஸ்–ல் உள்ள மஸ்ஜிதுல் அக்ஸா’’.

இந்த மஸ்ஜித் அல்–அக்ஸா தான் முஸ்லிம்களின் முதல் கிப்லா, பெருமானார்(ஸல்) அவர்களின் பெயரால் நிறுவப்பட்ட, மதினா மஸ்ஜிதிலும் இதுவே கிப்லாவாக இருந்தது. 17 மாதங்களுக்குப் பின், இறைவன் கிப்லாவை கஆபாவை நோக்கித் திருப்பினான்.

இதுகுறித்து அல்லாஹ் குர்ஆனில் குறிப்பிடுகிறான்,

நபியே! நாம் உம்முகம் அடிக்கடி வானத்தை நோக்கிட காண்கின்றோம். எனவே நீர் விரும்பும் கிப்லாவின் பக்கம் உம்மைத் திடமாகத் திருப்பி விடுகின்றோம். (அல்குர்ஆன் – 2 : 144)

➢ விண்ணேற்றம் (மிஹ்ராஜ்) என்ற வரலாறுச் சிறப்புமிக்க பயணத்தின் மையப்பகுதியும் இதுதான். (அல்குர்ஆன் 17:1)

➢ கி.பி.637 – ஜெருசலத்தை கலீபா உமர் (ரழி) கைப்பற்றி மஸ்ஜிதுல் அக்ஸாவை கட்டினார்கள்.

➢ 705 – அப்துல் அல்மாலிக் அவர்களாலும் தொடர்ந்து அவரது மகனாலும் விரிவாக்கம் செய்யப்பட்டது.

➢ 746 – நில நடுக்கம் ஒன்று அதை இடித்துவிட்டது.

➢ அப்பாசி கலீபா அல்மன்சூர் அவர்கள் அதனை எழுப்பினார்கள்.

➢ 780 – அல்மஹ்தி அவர்கள் அதனை அழகுபடுத்தினார்கள்.

➢ 1033 – நிலநடுக்கம் ஒன்று அதனை மீண்டும் குலைத்தது.

➢ 1035 – பாத்திமுத்து கலீபா அல்அஸ்ஸாஹிர் – மீண்டும் அக்ஸாவை கட்டினார்கள். அதுவே இப்போதும் நின்று கொண்டிருக்கிறது.

➢ 1095 சிலுவைப்போர்களை தொடங்கினார்கள் கிறிஸ்தவர்கள்.

➢ 1099 – பைத்துல் முகத்திஸ் (ஜெருசலம்) அல்அக்ஸா மஸ்ஜித் கிருஸ்தவர் கைகளுக்கு சென்றது. 90 வருடங்கள் கிறிஸ்தவர்கள் அல்அக்ஸா மஸ்ஜித்–ஐ கிருஸ்தவ ஆலயமாகவும் உல்லாச மாளிகையாகவும் பயன்படுத்தினார்கள்,

➢ 1187ல் – சுல்தான் சலாஹுதீன் அய்யூபி அவர்கள் ஜெருசலம் அல்அக்ஸா ஆகியவற்றை மீட்டார்கள்.

➢ 1917ல் – கிலாஃபத் என்ற முஸ்லிம்களின் உலக தலைமை இராணுவ பலத்தை இழந்தது. அதே ஆண்டில் ஆங்கிலேயர்கள் யூதர்களுக்கு ஒரு தனி நாடு ஒன்றை முஸ்லிம்களின் பாலஸ்தீனில் உருவாக்கித் தருவதாக உறுதி தந்தார்கள்.

➢ 1918 உலக நாடுகளின் சபை (லீக் ஆப் நேஷனல்) பைத்துல் முகத்திஸ் அல்அக்ஸா ஆகியவற்றை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தது. ஆங்கிலேயர்கள் ஐரோப்பிய கிருஸ்தவர்களால் வெளியேற்றப்பட்ட ஒன்றரை இலட்சம் யூதர்களை பாலஸ்தீன முஸ்லிம்களின் நிலங்களில் குடியமர்த்தினார்கள்.

➢ 1922 உலக முஸ்லிம்கள் பாலஸ்தீன சுப்ரீம் கவுன்சில் என்றொன்றை உருவாக்கி அல் அக்ஸா மஸ்ஜித்–ஐ புனரமைத்தார்கள். இதில் இந்திய முஸ்லிம்கள் பெரும் தொகையை தந்தார்கள். (விரிவான தகவல்களுக்கு "வைகறை வெளிச்சம்" செப்.2009)

➢ 1931–35 முதல் ஹிட்லரால் துரத்தப்பட்ட யூதர்கள் பாலஸ்தீனில் ஆங்கிலேயர்களால் குடியமர்த்தப்பட்டார்கள்.

➢ 1948 ஐக்கிய நாடுகள் சபை மூலம் யூதர்களுக்கு ஒரு நாடு என இஸ்ரேல் உருவாக்கப்பட்டது.


4¢ CHICAGO DAILY SUN TIMES FINAL

THE PICTURE NEWSPAPER

April average net paid circulation in excess of 660,000

Vol. 1, No. 90 DEA. 2323 SATURDAY, MAY 15, 1948 AND. 4800 44 Pages

# Its name is Israel

# U.S. RECOGNIZES JEWISH STATE

Stories on page 2 and back page

➢ 1967 ஆகஸ்ட் ஸலோமாகோரன் என்ற யூத மத குரு 20 யூத இராணுவ வீரர்களோடு பூஜை செய்ய – அல் அக்ஸா மஸ்ஜிதுல் நுழைந்தார்கள். முஸ்லிம்கள் அதைத் தடுத்தார்கள்.

➢ 1969 – மஸ்ஜிதுல் அக்ஸாவின் ஒரு பகுதியை யூதர்கள் எரித்தார்கள். 1979 அல்குத்ஸ் தினம் அறிவிக்கப்பட்டது.

➢ 1982 – பால் லெஸ்ரார் என்ற யூதன் மனித வெடிகுண்டாக உள்ளே நுழைந்தாள். முஸ்லிம்கள் அவனைத் தடுத்தார்கள். மஸ்ஜிதை காப்பாற்றினார்கள். பலர் ஷஹீதானார்கள்.

➢ 1983–46 – யூதர்கள் மனித வெடிகுண்டாக மஸ்ஜிதுல் நுழைய முயற்சி செய்தார்கள். முஸ்லிம்கள் தடுத்தார்கள்.

➢ 1984 ஆகஸ்ட் 7ல் 130 கிலோ எடை கொண்ட வெடிகுண்டு ஒன்று மஸ்ஜிதுல் அக்ஸாவின் கீழ் வைக்கப்பட்டது. முஸ்லிம்கள் அதை வெடிக்கும் முன் அகற்றினார்கள். 1984 டிசம்பரிலும் இதுவே நடந்தது.



➢ 1986 – ஈகை பெருநாளின் போது யூதர்கள் உள்ளே நுழைந்தார்கள். தடுத்தார்கள் முஸ்லிம்கள். அதனால் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் ஷஹீதானார்கள்.

➢ 1988 – OIC என்ற உலக முஸ்லிம் நாடுகளின் கூட்டமைப்பு அல்குத்ஸ் தினத்தை உலகமயமாக்கியது.

➢ 1990 ஆகஸ்ட் 20ம் நாள் ஒரு யூதன் இரண்டு ஏவுகணைகளை மஸ்ஜித்–ஐ நோக்கி ஏவினான் மஸ்ஜித் சிறிது சேதம் அடைந்தது.

➢ 1990 – அக்டோபரில் சாலமோன் கோயிலுக்கு அடிக்கல் நாட்டிட யூதர்கள் அக்ஸா மஸ்ஜிதுக்குள் நுழைந்தார்கள். தடுத்தார்கள் முஸ்லிம்கள் ஷஹீதானார்கள் பலர்.

➢ 1991– அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் மஸ்ஜித்–ஐ தோண்டி அஸ்திவாரத்தை பலவீனப்படுத்தினார்கள்.

➢ 1992 – அமெரிக்காவில் வாழ்ந்த யூதர்கள் 1990ல் நாட்டிய அந்த கல்லை பூஜை செய்ய உள்ளே புகுந்தார்கள். தடுத்த பல முஸ்விம்கள் ஷஹீதானார்கள்.

➢ 2000 – யூத தீவிரவாதி ஏரியல் ஷரோன் ஆயிரக்கணக்கான யூதர்களோடு மஸ்ஜிதுக்குள் நுழைந்தான். முஸ்லிம்கள் தடுத்தார்கள். பலர் ஷஹீதானார்கள். அதுமுதல் ஒவ்வொரு ஜூலை 31ம் நாளும் யூதர்கள் சாலமோன் ஆலயத்தின் நினைவு நாள் என்று அல் அக்ஸா மஸ்ஜிதுக்குள் புகுந்து கபளிகரங்களை செய்கின்றார்கள். முஸ்லிம்கள் தடுக்கின்றார்கள்.



➢ 2009 ஜூலை 31ம் நாளும் இதைப்போல் மஸ்ஜிதுல் அக்ஸாவில் புகுந்தார்கள். முஸ்லிம்கள் பலர் தங்கள் உயிரைத் தந்து தடுத்தார்கள்.

➢ 2010 மே 31 நான்கு ஆண்டுகளாக பாலஸ்தீனின் காஸா பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் 15 இலட்சம் மக்கள் எந்த வாழ்வாதாரமும் இல்லாமல் அல்லல்பட்டுக்கொண்டு இருந்தார்கள். இவர்களுக்காக உதவி செய்ய உலக நாடுகள்




ஒன்றிணைந்து அனுப்பிய வாழ்வாதார பொருட்களை கொண்டுவந்த கப்பல் (Freedom Flotilla) சர்வதேச கடலில் வைத்து மே 31 அன்று இஸ்ரேல் தாக்கியது. பொருட்கள் கொண்டு சென்ற கப்பலில் இருந்த 19 பேர் உயிரிழந்தார்கள்.

➢ 2017 டிசம்பர் 21, பைத்துல் முகத்தஸ் என்ற ஜெருசலத்தை யூத நாட்டின் (இஸ்ரேல்) தலைநகராக அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டிரம்ப் அறிவித்தார்.



டிரம்பின் இந்த முயற்சிகள் தோற்றன. ஐக்கிய நாடுகள் சபையில் ஏமன், துருக்கி ஆகிய நாடுகளால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேறியது. இதனால் இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலத்தை ஆக்கும் முயற்சி தடைப்பட்டது. மேலும் ஏமன் மற்றும் துருக்கி கொண்டு வந்த தீர்மானத்திற்கு ஆதரவாக 128 வாக்குகளும். எதிராக 9 வாக்குகளும் பதிவாயின. இதில் இந்தியாவும் ஆதரவளித்து வாக்களித்தது.

**இஸ்ரேலியப் பொருட்களைப் புறக்கணியுங்கள் (BDS Movement)**

இப்படி ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டு வளர்ந்து வருகின்றது. இது இஸ்ரேல் நாட்டின் பொருள்களை மட்டும் புறக்கணிக்க சொல்லவில்லை. ஒருபடி மேலேபோய் நுணுக்கமான, இன்னும் பல புறக்கணிப்புகளைப் பரிந்துரைக்கின்றது. அவை

இஸ்ரேல் நாட்டுக்கு இலாபம் சென்றடையும் அளவில் இயங்கும் தொழிற்சாலைகளின் பொருள்களைப் புறக்கணிக்க சொல்கின்றது. இதனால் இஸ்ரேல் நாடு முதலீடு செய்யும் பொருள்கள் புறக்கணிக்கப்படுகின்றன.







இஸ்ரேலை ஆதரிக்கும். கம்பெனிகள் மார்க்கெட் செய்யும், அதாவது சந்தைப் படுத்தும் பொருள்களை வாங்கிட வேண்டாம் என்கிறது.

இஸ்ரேலில் முதலீடு செய்யும் தொழில் நிறுவனங்களின் பொருள்களை வாங்கிட வேண்டாம். இப்படி ஒரு பொருளாதார தடையை இஸ்ரேல் மீது போட்டு வருகின்றது இந்த அமைப்பு. இந்தப் பொருளாதார தடை இஸ்ரேலுக்கு மிகையான நெருக்கடியைக் கொடுத்திருக்கின்றது. அதனால்தாள் இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் நட்யான்ஹு் ‘‘எல்லோருடைய உரிமைகளையும் பாதுகாக்கின்றோம்’’ எனக் கூறினார்.

‘‘எங்கள் நாடு யூதர்களிள் நாடு என்றாலும், எங்கள் நாட்டில் முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள், பகாய்கள், இப்படி எல்லோரும் வாழுகின்றார்கள். அவர்கள், வழக்கறிஞர்களாகவும், சட்டம் செய்யும் அவைகளில் அங்கம் வகிப்பவர்களாகவும், நீதிபதிகளாகவும் இருக்கின்றார்கள். எங்கள் நாடாளும் மன்றத்தில் முஸ்லிம்கள் தொழுவதற்காக, ஓர் இடம் தனியாக ஒதுக்கப்பட்டிருக்கின்றது.’’ என்றார்.

இவையெல்லாம் யூதர்களின் பம்மாத்துகளாகவுமிருக்கலாம் ஆனால், அவர்கள் பொருளாதார அமுத்தங்களை உணருகின்றார்கள் என்பதை நாம் அறிந்திட முடிகின்றது.

**இஸ்ரேலின் கொரானா காலக் கொடுமைகள்**

பாலஸ்தீனில் வாழும் மக்களை குறிப்பாக ‘காஸா’ பகுதியில் வாழும் மக்களை கொடுமைப்படுத்துவதை இஸ்ரேல் நிறுத்த வில்லை. கொரோனா காலத்தில் மருத்துவக் கருவிகளும், மருத்துவ உதவிகளும், காஸா பகுதியை சென்றடைவதைத் தடுத்தார்கள்.

காஸா பகுதி மக்கள் மருத்துவமனைகளுக்குச் செல்லும் வழியில் தடைகளை வெட்டிப்போட்டார்கள். வழக்கம்போல நீண்ட



நேர சோதனைகளுக்குப் பிள்னரே அவர்கள் மருத்துவப் பகுதியில் உள்ளே நுழைய அனுமதிக்கப்பட்டார்கள். காஸா பகுதி மக்களுக்காக கத்தர் நாடு 150 மில்லியன் டாலர்களை உதவித் தொகையாக இந்தக் கொரனோ காலத்தில் அனுப்பியது. அந்தத் தொகை அந்த மக்களைச் சென்றடையாமல் தடுத்தது இஸ்ரேல்.

ஆனால் ஹமாஸ் இயக்கம். இஸ்ரேலிடம் ‘‘நீங்கள், அந்தத் தொகையை விடுவிக்காவிட்டால், நாங்கள் ஏவுகனை தாக்குதல் களை நடத்துவோம். நீங்கள் எல்லாம் ஏவுகணைகளிலிருந்து தப்பித்திட பங்கர்கள் என்ற பூமிக்கு கீழுள்ள சுரங்கங்களுக்கு ஓடுவீர்கள், அதனால் அங்கு ஜன நெருக்கம் ஏற்படும் கொரனோ வேகமாகப் பரவும் இதைச் செய்திட அதிக நேரமாகாது.

ஆனால் எங்கள் மார்க்கத்தில் இதற்கு அனுமதியில்லை. நீங்கள், தொடர்ந்து எங்களை கொரனோவுக்கு பலியாகிட நிர்பந்தித்தால், நாங்கள் எங்கள் மார்க்க அறிஞர்களிடம் அனுமதியைக் கோரிட வேண்டியது வரும்’’ என்றது. இதைக்கேட்டு அஞ்சிய இஸ்ரேல், அந்தப் பணத்தை அனுமதித்தது.

மேற்கு கடற்கரைப் பகுதி என்றழைக்கப்படும் (west bank) பாலஸ்தீனின் முக்கியப் பகுதியை கொஞ்சம் கொஞ்சமாக ஆக்கிரமித்து வருகின்றது இஸ்ரேல் அந்த இடங்களில் யூதர்களுக்கு வீடுகளைக் கட்டித் தருகின்றது. அவர்களை குடியமர்த்தவும் முயற்சிகளை செய்கின்றது. இதனை உலக மக்கள் அனைவரும் கண்டித்தனர். அதனை அமெரிக்கா ஆதரித்தது... உலகில், இஸ்ரேலுக்கு வெளியே வாழும் யூதர்களும், இஸ்ரேலின் அட்டூழியங்களைக் கண்டிக்கத் தொடங்கிவிட்டனர்.

பிரிட்டன் என்ற ஆங்கில நாட்டில் யூதர்கள் ஓர் அமைப்பைத் தொடங்கியுள்ளனர். அதன் பெயர் (IJAN) Jewish Network for Palestinians (UK) பாலஸ்தீனியர் களுக்கான யூத ஒற்றிணைப்பு (தளம்) 2008 ஆம் ஆண்டு உருவான இந்த அமைப்பு உலகெங்கும் படருகின்றது.

யூதர்களால் இப்படி ஒரு அமைப்பா? என்ற வினா நமக்குள் எழுந்தது. உடனேயே அதன் உண்மைத்தன்மைகளை கண்டறிய முயற்சிகளை மேற்கொண்டோம். ஆங்கில இதழியல் தளங்களில் எழுதிக்கொண்டிருக்கின்ற பத்திரிகையாளர்களிடம் கேட்டோம் அதன் நன்பகத் தன்மையை சந்தேகப்பட வேண்டாம் எனச் சொன்னார்கள். ஆனாலும் நாம் ஜாக்கிரதையாகவே இதனை கையாள வேண்டும். இந்த அமைப்பை உருவாக்கியவர்களில் ஒரு விஞ்ஞானி ஹேறாஜா மேயர் என்பவராவார்.




இவர் ஜெர்மனியில் யூதர்கள் இனப்படுகொலைகளுக்கு ஆளாகியபோது அதிலிருந்து தப்பித்தவர் என அறியப்படுகின்றார். இவர் இந்த அமைப்பைத் தொடங்கியதற்கான காரணத்தைச் சொல்லுகின்றார். அது அனைவரையும் நம்பிடச் செய்கின்றது அந்தக் காரணம், யூதர்களைக் கொடுமைகளுக்கு உள்ளாக்கியவர்கள் ஜெர்மனியைச் சார்ந்தவர்கள். அந்தக் கொடுமைகளைச் சொல்லித் தான் நாம் உலகெங்கும் அனுதாபத்தை சம்பாதிக்கின்றோம்.

ஆனால் அந்தக் கொடுமைகளை விஞ்சும் கொடுமைகளை நாம் பாலஸ்தீனில் செய்து கொண்டிருக்கின்றோம். ஆகவே அந்தக் கொடுமைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.




(Ijan) இஜான் என்றழைக்கப்படும், இந்த அமைப்பு எல்லா யூதர்களும் இஸ்ரேல் நாட்டை ஆதரிக்கவில்லை. இஸ்ரேல் ஒரு இனவாத நாடு Racist Country, அங்கு முஸ்லிம்களைக் கொலை செய்வது என்பது இனவெறிக் கொலைகள்தான். எனவே இஸ்ரேலை ஓர் இனவெறி நாடு என அறிவிக்க வேண்டும். (Apartheid State) என்று பிரகடனப்படுத்துகின்றது. இந்த அமைப்பிற்கு இன்னொரு பெயர் – சர்வதேச சீயோனிச எதிர்ப்பு அமைப்பு.

உலகிலுள்ள பல அமைப்புகள் : இந்த அல்குத்ஸ் நாளை; Justice for Palestinian People Day - பாலஸ்தீன மக்களுக்கு நீதி தேடிடும் நாள் என அறிவித்துள்ளன. இது கவனிக்கத்தக்கது.

சர்வதேச இஸ்லாமிய மனித உரிமை ஆணையம் (IIHRC - International Islamic Human Rights Commission) பாலஸ்தீன கொடியை பறக்க விடுங்கள் Fly the Flag என ஓர் இயக்கத்தைத் தொடங்கியுள்ளது.

இந்த நாளில் யூத இஸ்ரேலின் அநியாயங்கள் அனைத்தும் உலக மக்கள் அனைவருக்கும் வெட்ட வெளிச்சமாகி வருகின்றது. இஸ்ரேலுக்கு அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றது.

ஏப்ரல் 14 முதல் 21 வரை Passover Festival (யூதர்கள் இடம் பெயர்ந்த நாள்) எனக்கூறி மஸ்ஜித் அக்ஸாவிற்குள் நுழைந்து கபளீகரம் செய்தார்கள்.



இந்த வருடம் 2023–இல் வழக்கம்போல் Passover Festival (யூதர்கள் இடம் பெயர்ந்த நாள்) ஏப்ரல் 5 முதல் 12 வரை அறிவிக்கப்பட்டது. இஸ்ரேவின் ராணுவம் அத்துமீறி அல்அக்ஸா மஸ்ஜிதுக்குள் நுழைந்தது. மஸ்ஜிதுக்குள் இருந்த பொருட்களை அடித்து நொறுக்கியது. அங்கு தொழுது கொண்டிருந்த 400–க்கும் மேற்பட்ட முஸ்லிம்களை கைது செய்தது. அதில் 2 முஸ்லிம்கள் ஷஹீதானார்கள்.

யூதர்கள் ஒவ்வொரு வருடமும் மே –15ஆம் நாளை ஜெருசலம் நாள் எனக் கொண்டாடி, அல்அக்ஸா மஸ்ஜித் வளாகத்தில் கெடுபிடிகளைக் கட்டவிழ்த்து வருகின்றார்கள். பல முஸ்லிம்களை ஷஹீதாக்குகின்றார்கள்.

ரமழான் மாதம் முழுவதும் மஸ்ஜித் அக்ஸாவில் முஸ்லிம்கள் பெருவாரியாக சென்று தொழுவார்கள். இந்த வருடம் 2023



யூதர்களின் கெடுபிடிகள் அதிகமானதால் சென்ற வெள்ளிக்கிழமை (14-4-2023) ஜும்ஆ அன்று 2,50,000 பேர் தொழுதார்கள் இதனால் அக்ஸா வளாகமே நிரம்பி வழிந்தது. இது அல்அக்ஸா மஸ்ஜித்-ஐ நிர்வகித்து வரும் Jordan Administered Waqf தரும் தகவல். ஆனால் யூதர்கள் 1,30,000 பேர் மட்டுந்தான் தொழுதார்கள் என சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள்.



அதேப்போல ஒவ்வொரு ரமழான் மாதத்திலும் இஸ்ரேல் பாலஸ்தீன முஸ்லிம்களின் மீது குண்டு மழைகளை பொழியச்செய்து முஸ்லிம்களை படுகொலைகளை செய்யும். இந்த முறை ஈரான் சவூதி நல்லுறவால் சிரியா மீண்டெழுந்துள்ளது. அதன்மூலம் சிரியாவிலிருந்து சில ஏவுகணை தாக்குதல்கள் இஸ்ரேல் மீது ஏவப்பட்டுள்ளது. இதை சற்றும் எதிர்பாராத இஸ்ரேல் கமுக்கமாக



Hindustan Times | Get App

Home | Latest News | Cricket | India | World | Citi

IPL 2023 | Live Cricket Score | HT Premium | Web Stor

Home / World News / In a rare attack, rockets fired f...

## In a rare attack, rockets fired from Syria toward Israel

AP |

Apr 09, 2023 02:08 AM IST

FOLLOW ON Google News

Only one out of three rockets crossed into Israeli territory and landed in a field in the Israeli-annexed Golan Heights.

தன்னுடைய தாக்குதல்களை பின்வாங்கி கொண்டு அமைதியாகியுள்ளது.

உலக முஸ்லிம்களுக்கு பாலஸ்தீன முஸ்லிம்களின் வேண்டுகோள் உலகெங்கும் உள்ள முஸ்லிம்கள் அல்-குத்ஸ் வரவேண்டும் அங்கு வீற்றிருக்கும் அல்-அக்ஸாவில் தொழ வேண்டும். இதன்மூலம் இவையெல்லாம் உலக முஸ்லிம்களுக்குச் சொந்தம் என்பதை நிலை நாட்டிட வேண்டும். இதுவே பாலஸ்தீன மக்களின் வேண்டுகோள்.

இறைவனின் இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் சொன்னார்கள்,

“பைத்துல் முகத்திஸ்-அல் அக்ஸாவில் சென்று தொழுங்கள். இயலவில்லை என்றால் அங்கே எரியும் விளக்கு களுக்குப் பயன்பட கொஞ்சம் எண்ணெய்யை அனுப்புங்கள்.” (நபிமொழி-அஹ்மத்)

மேலும் இறைவனின் தூதர்(ஸல்) அவர்கள் இன்னும் சொன்னார்கள்,

“ஹஜ் அல்லது உம்ராவுக்குச் செல்லும் ஒருவர் மஸ்ஜிதுல் அக்ஸாவில் இஹ்ராம் அணிந்து பின்னர். புனித மஸ்ஜிதுக்கு (மக்காவிலுள்ள கஆபாவிற்கு) செல்லுவாரேயானால், அவருடைய முன் பாவங்களும் பின் பாவங்களும் மன்னிக்கப் பட்டுவிடும்.” (நபிமொழி – திர்மிதி – அஹ்மத்)

பெருமானார்(ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

இறுதிநாள் முஸ்லிம்கள் யூதர்களோடு போரிடாத வரை வராது. முஸ்லிம்கள் யூதர்களைக் கொலை செய்வார்கள். யூதர்கள் பாறைகளுக்குப் பின்னாலும் மரங்களுக்குப் பின்னாலும் ஒளிந்துகொள்வார்கள். பாறைகளும் மரங்களும் அல்லாஹ்வின் அடியானே இதோ யூதன் எனக்குப் பின்னால் ஒளிந்திருக்கின்றான் என்று கூறும். ஆனால் கர்காட் என்ற மரம் மட்டும் காட்டிக் கொடுக்காது ஏனெனில் அது ஒரு யூத மரம். (அறிவிப்பாளர் – அபூஹுரைரா(ரழி) அவர்கள்)

இன்றைய நாட்களில் பாலஸ்தீனுக்குப் பயணம் செய்து. அங்குத் தியாகங்களைச் செய்து கொண்டிருக்கும் மக்களைப் பலப்படுத்துவோம்.

இன்ஷா அல்லாஹ் இதைச் செய்வோம் ஒன்றிணைவோம் பாலஸ்தீன மக்களுடன்! பைத்துல் முகத்திஸ்-ஐ மீட்போம்! பைத்துல் முகத்தஸ் – அல்அக்ஸா ஆகியவை முழுமையாக மீட்கப்படும் வரை நமது முயற்சிகள் தொடரும்.

**இவண்,**

**நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்,**


**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்,**

# CRUSADE 2.0 BY JOHN FEFFER

**The west Resurgent War on Islam**

# சிலுவைப் போர் 2.0

**மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்**




இன்றைய நாள்களில் மேலைநாட்டவர்கள் அமெரிக்காவின் தலைமையின் கீழ் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் ஒரு பெரும் போரைத் தொடுத்து வருகின்றார்கள். இந்தப் போரை அவர்கள் சிலுவைப் போர் 2.0 என அழைக்கின்றார்கள். சுருக்கமாகச் சொன்னால் நாங்கள் முஸ்லிம்கள் மேல் தொடரும் இரண்டாவது சிலுவைப் போர் என்கின்றார்கள். சிலுவைப் போர்கள் என்றாலே அது முஸ்லிம்களுக்கும் கிருஸ்தவர்களுக்கும் இடையே நடந்த போர் என்று பொருள். இப்போது நடப்பது இரண்டாவது சிலுவைப் போர் என்றால் முதல் சிலுவைப் போர் எப்போது தொடங்கியது? எப்போது முடிந்தது?

முதல் சிலுவைப் போர் 1095ல் தொடங்கி 1274ல் முடிந்தது. அவை 9 போர்களாக நடந்தன. அவற்றை சிலுவைப்போர் 1.0 என்று கிருஸ்தவ உலகம் அழைக்கின்றது.

சிலுவை யுத்தம் 2.0 என்ற இரண்டாவது சிலுவைப்போர் 1991ல் தொடங்கியது என்பது வரலாற்று வல்லுநர்களின் கணிப்பு. இதனை முதல் வளைகுடா போர் என அழைப்பார்கள். இந்த சிலுவைப் போர் 2.0வை எப்படி நடத்திக் கொண்டிருக்கின்றோம் என்பதை ஜான் பெஃபர் என்பவர் ஒரு நூலாகத் தருகின்றார். அந்த நூலின் பெயர் CRUSADE 2.0 THE WEST'S RESURGENT WAR ON ISLAM அதாவது சிலுவைப் போர் 2.0 மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்.



இந்த நூலின் தமிழ் வடிவமே இந்தத் தொடர். முஸ்லிம்கள், முஸ்லிம் நாடுகள், இஸ்லாம், இவற்றின் மேல் இன்றைய நாட்களில் நடக்கும் தாக்குதல்களைப் புரிந்திட இந்தத் தொடரைப் படியுங்கள். இது தொடரல்ல. பயன் பயக்கும் பாடம். வரலாற்றுத் தொகுப்பு.

**தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,**

ஜான் பெஃப்பர் அவர்களின் கூற்றுக்களை நாம் மேற்கொண்டு புரிந்து கொள்வதற்கு முன்னால் இஸ்லாமிய வரலாற்றில் நடந்த முக்கியமான சில நிகழ்வுகளை இங்கே, இன்றைய இளைய தலைமுறையினருக்குத் தருகின்றோம். இது மனம் தளராமல் இஸ்லாமோஃபோபியாவை எதிர்கொள்ளலாம், வெல்லலாம் என்பதை ஊர்ஜிதப்படுத்திட.

ஏனெனில் இந்த வரலாறு இளைய தலைமுறையினரை சென்றடைந்திடாமல் தடுக்கப்பட்டே வருகின்றது. இதற்காக நேற்றுவரை பலகோடி பணமும், அதற்கு விலைபோன மனித பதர்களும் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

**ஈரானும் இஸ்லாமியப் புரட்சியும்**

இரண்டாம் உலகப் போருக்குப் பின் அன்றைய ஒரே வல்லரசு, Great Britain என்ற ஆங்கில நாடு மிகவும் குரூரமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப் பட்டது. இந்தப் போர் ஐரோப்பிய நாடுகளுக்கு இடையே செப்டம்பர் 1, 1939 இல் தொடங்கி செப்டம்பர் 2, 1965 வரை தொடர்ந்து நடந்தது. பின்னர் ஆசிய நாடுகளுக்கு இடையேயும் படர்ந்தது. உலக மக்கள் தொகையில் 3.7 சதவீதம் மக்களை கொன்று குவித்தன.

இதில் ஆங்கில நாடு பிரிட்டன் வெற்றி பெற்றது. ஆனால் அது சந்தித்த இழப்புகள் ஏராளம்! அதன் அன்றைய நிலைமையை, உலக வரலாற்றை வரைவதில் வல்லுனர்களான லாரி காலி மற்றும் டோமினி கியூ பெப்பேரி ஆகியோர் இப்படி பதிவு செய்தார்கள்,

> The cost of their victory, however, had almost vanquished the British. Britain's industry was crippled, her exchequer bankrupt, her once haughty pound sterling surviving only on injections of American and Canadian dollars, her Treasury unable to pay the staggering debt she'd run up, to finance the war. Foundries and factories were closing every where, over two million Britons were unemployed. Coal production was lower than it had been a decade earlier and, as a result, every day, some part of Britain was without electric power for hours.
>
> Only one family in fifteen had been able to find and afford a Christmas turkey for the holiday season just past. Many a child's stocking had been empty that Christmas eve. The treasury had slapped a 100% purchase tax on toys. The word most frequently scrawled on the windows of London's shops was 'No': 'No potatoes', 'No logs', 'No coal', 'No cigarettes', No meat'. Indeed, the reality confronting Britain that New Year's morning had been captured in one cruel sentence by her greatest economist. 'We are a poor nation, John Maynard Keynes had told his countrymen the year be- fore, "and we must learn to live accordingly." (Freedom at Midnight, First Edition A Race Destined to Govern and Subdue, Page, 1-2)

இதன்பொருள். இரண்டாம் உலகப்போரில் லண்டன் (ஆங்கில் நாடு) வென்றது உண்மைதான். ஆனால்,

> “அந்த வெற்றிக்காக அவர்கள் தந்த விலை அவர்களை வெற்றி கண்டுவிட்டது. (சின்னா பின்னமாக்கிவிட்டது) பிரிட்டனின் உற்பத்திக் கூடங்கள் பாதிக்கப்பட்டுவிட்டன. அதனுடைய கஜானா திவாலாகிவிட்டது. தலைக் கனத்தோடு தலைநிமிர்ந்து நின்ற பிரிட்டனின் நாணயம் பவுண்ட் ஸ்டெர்லிங் - அமெரிக்காவின் டாலர்களுக்குப் பின்னாலும் பவுண்ட் கனடாவின் டாலர்களுக்குப் பின்னாலும் ஒளிந்து கொள்ள வேண்டியதிருந்தது. அவற்றின் உதவியோடு உயிர் பிழைத்துக் கொண்டிருந்தது.
>
> பிரிட்டனின் கஜானா போருக்காக வாங்கிய பெரிய பெரிய கடன்களைத் திருப்பித் தந்திட இயலவில்லை. அதனுடைய கஜானா திவால், ஆலைகளும், இன்னபிற உற்பத்திக் கூடங்களும் ஒவ்வொரு இடத்திலும் மூடப்பட்டுக் கொண்டே இருந்தன. 20

லட்சம் பிரிட்டிஷ் குடிமக்கள் வேலையின்றி தவித்தார்கள், நிலக்கரி உற்பத்தி கடந்த 10 பத்து வருடங்களில் இல்லாத அளவுக்கு மிகவும் குறைந்து போயிற்று. இதனால் பிரிட்டன் நாட்டின் ஏதாவது ஒரு பகுதி மணிக் கணக்கில் விளக்கின்றி இருண்டு கிடந்தது.

லண்டன் வாசிகளைப் பொறுத்தவரை தொடர்ந்து எட்டாவது வருடமாக அவர்களின் புது வருடப் பிறப்பில் வறுமையின் வாட்டம் வதைத்தது. அவர்கள் கடுமையான உணவுப் பொருள் கட்டுப்பாட்டின் கீழ் வாழ்ந்தார்கள். அவர்கள் நுகர்ந்த ஒவ்வொரு பொருளும் (Ration) கட்டுப்பாடான விநியோகத்தின் கீழ் வந்தது. தாங்கள் நுகரும் பொருள்களுக்காக மக்கள் வரிசையில் நின்றார்கள். குழந்தைகளுக்கான பொருள்கள் அந்த கிருஸ்துமஸ் நாளில் இருப்பு இல்லை! கடைகள் காலியாகக் கிடந்தன. பொது நிதி கருவூலம் (குழந்தைகளின்) விளையாட்டுப் பொருள்களின்மீது 100% (விழுக்காடு) வரி விதித்திருந்தது.

லண்டனின் கடை வீதிகளில், அதிகமாக விளம்பரத்திலிருந்த சொற்கள், "இல்லை" என்ற சொற்கள் தான். "உருளைக் கிழங்கு இல்லை, எரிபொருள் இல்லை, நிலக்கரி இல்லை, சிகரெட் இல்லை, இறைச்சி இல்லை".



A British housewife has limited choice for her vegetable purchasing, as potato stocks dry up due to tight rationing control over supply - December, 1941. Image: Mary Evans/Grenville Collins Postcard Collection

"அந்த கிருஸ்துமஸ் நாளின் நிலைமையை யதார்த்தமாக எடுத்துச் சொல்லும் சொல், நாம் ஓர் ஏழைநாடு. நாம், அதற்குத் தகுந்தார் போல் வாழ்த்திட கற்றுக்கொள்ள வேண்டும்."

இப்படிச் சொன்னது. அன்றைய உலகின் மிகப்பெரிய பொருளாதார நிபுணர் ஜான்மேனாட்டூன்ஸ்.


இப்படி ஆங்கில நாடு வரலாறு காணாத பொருளாதார நெருக் கடிகளுக்கு உள்ளாகிக் கொண்டிருந்தது. (ஆதாரம் - Freedom at Midnight, Page-1,2 First Edition)

இந்தக் கொடுமையான பொருளாதார நிலையிலிருந்து, வெளியே வந்திட பிரிட்டன் பல உத்திகளைக் கையாண்டது. அவற்றுள் ஒன்றுதான் காலணி நாடுகளில் தனக்கு இடமில்லாத நாடுகளுக்குச் சுதந்திரத்தைக் கொடுத்துவிட்டு வெளியேறிவிடுவது. அப்படித்தான் இந்தியாவுக்கு 1947 ஆகஸ்ட் 15-ல் நள்ளிரவில் சுதந்திரம் வழங்கப்பெற்றது.

தனது பொருளாதார குரூர நிலையிலிருந்து வெளியே வந்திட பிரிட்டன் கையாண்ட பிரிதொரு உத்தி உலக நாடுகளின் இயற்கை வளங்களைக் கையகப்படுத்துவது. பச்சையாகச் சொன்னால் உலக நாடுகளின் இயற்கை வளங்களை சுரண்டுவது அல்லது கொள்ளையடிப்பது.

அன்றைய பிரிட்டனுக்கு இந்த விவகாரத்தில் ஈரானை ஆண்டு கொண்டிருந்த ஷா பஹ்லவி வம்சத்தினர் பெரிதாகப் பயன் பட்டனர்.

ஈரானில் ஏற்கனவே மன்னர் பரம்பரையினர் ஈரானின் எண்ணெய் வளத்தை பிரிட்டனுக்கு தாரை வார்த்துத் தந்து கொண்டிருந்தார்கள். ஆமாம் அங்கே Anglo Persian Oil Company என்ற பெயரில் பெட்ரோலை அகழ்ந்தெடுக்கும் நிறுவனம் கம்பெனியொன்று செயல்பட்டுக் கொண்டிருந்தது. இந்தக் கம்பெனியை/ நிறுவனத்தைப் பயன்படுத்தி தன் பொருளாதார நிலையை மேம்படுத்திட திட்டமிட்டது. அதிகமான பெட்ரோலை அகழ்ந்தெடுத்தது. லண்டன் பொருளாதாரத்தில்



மிகைக்கின்றது ஆங்கிலேயர்கள் மீண்டும் ஆடம்பரத்தில் திழைத்தார்கள்.

ஆனால் ஈரான் நாட்டு மக்கள் ஒரு வேளை உணவுக்கே திண்டாடினார்கள். பட்டினிச் சாவுகள் அதிகமாகின. ஆங்கிலேயர்களைப் போல் ஈரானின் மன்னர் பரம்பரையும், உல்லாச வாழ்க்கை வாழ்ந்தது. ஆனால் அடித்தட்டு மக்கள் அழிந்து கொண்டிருந்தார்கள்.

ஆங்கிலேயர்களின் இந்தக் கொடுமைக் கெதிராக வெகுண்டெழுந்தான் முஹம்மத் முசாதிக். மக்களை ஒன்று திரட்டினார், ஆங்கிலேயர்களின் கொள்ளைக்கு எதிராகவும் மன்னரின் துரோகத்திற்கு எதிராகவும்.

முஹம்மத் முஸாதிக் அவர்கள் (1882 - 1967) மன்னர் பரம்பரையைச் சார்ந்தவர். ஈரானிலும், மேலை நாடுகளிலும் சட்டம் படித்தவர். ஈரானில் முதன் முதலில் சட்டத்துறையில் முனைவர்(டாக்டர்) பட்டம் பெற்றவர். ஈரானின் பாராளுமன்றம் என கூறப்படும் மஜ்லிஸ் (MAJLIS)இல் உறுப்பினராக இருந்தவர். பின்னர் பல அமைச்சர் பொறுப்புகளிலும் இருந்தவர்.

இவர் மக்களை ஒன்றுதிரட்டி ஆங்கிலேயர்களுக்கு எதிராகவும், மன்னரின் துரோகத்திற்கு எதிராகவும் போராடினார். எல்லா எண்ணெய் நிறுவனங்களையும் அரசுடைமை ஆக்கினார். 1951இல் நடந்த தேர்தலில் ஈரானின் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஈரானில் நீண்ட நாட்களுக்கு பின் நடந்த தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர். பதவியில் அமர்ந்தவுடன், எல்லா எண்ணெய் கிணறுகளையும், எல்லா பெட்ரோல் நிறுவனங் களையும் தேசிய உடைமையாக்கினார்.

இதனால் பிரிட்டன் என்ற ஆங்கில நாட்டின் பெட்ரோல் கொள்ளை நின்றது. உடனேயே ஆங்கில நாட்டினர் ஈரானில் ஆட்சி கலைப்பை செய்து ஆட்சி மாற்றத்தையும் கொண்டு வந்திட சதிகளை மேற்கொண்டார்கள். தங்கள் உளவுத்துறை (M16) வழியாக இதனை செய்திட அவர்களால் முடியவில்லை.

இதனால் அன்றே உலக அரங்கில் ஒரு வல்லரசாகத் தலையெடுத்து வந்த அமெரிக்காவின் உதவியை நாடினார்கள், அமெரிக்க அதிபர் ட்ரூமென் என்பவர் ஒத்துக்கொள்ளவில்லை. அமெரிக்காவில் 1952ல் நடந்த தேர்தலில் அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் ஈஸன் கோவர் அதிபரானார். இந்த அமெரிக்க அதிபர், அமெரிக்காவின் கொலைகார அமைப்பாகிய CIA என்ற உளவுத்துறையிடம் ஈரானின் தேர்ந்தெடுக்கப் பட்ட ஆட்சியை கவிழ்க்கும் பொறுப்பை ஒப்படைத்தார்.

அமெரிக்க உளவுத்துறையான CIAவும், ஆங்கில நாட்டின் உளவுத்துறையாகிய M16னும் இணைந்து முஹம்மத் முசாதிக் அவர்களின் ஆட்சியைக் கவிழ்த்தனர். மீண்டும் மன்னராட்சியைக் கொண்டு வந்தார்கள்.

இப்படி 1953இல் ஈரானில் முதன்முதலாக ஜனநாயக அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் பட்ட ஆட்சியை, ஜனநாயகத்தின் காவலர்கள் எனக் காட்டிக்கொண்ட ஆங்கில நாடும் அமெரிக்காவும் கவிழ்த்தன. இவர்கள் தங்கள் சுயநலத்திற்காக எதை வேண்டுமானாலும் செய்வார்கள். மன்னர் பஹ்லவிக்கு பதவிகள் தந்து மன்னர் ஆட்சியின் கீழ் ஈரான் வந்து ஆங்கில நாட்டின் எண்ணெய்க் கொள்ளை தொடர்ந்தது. இப்போது அமெரிக்காவும் இந்த கொள்ளையில் இணைந்து கொண்டது.

## ஈரான் மன்னரின் புதிய கீழறுப்பு வேலைகள்

ஈரானின் மன்னர் வம்சாவழி மீண்டும் பதவி ஏற்றவுடன், தன்னை ஆட்சியில் அமர்த்திய ஆங்கிலேயர்களுக்கும், அமெரிக்கர்களுக்கும் அதீத விசுவாசமாக இருந்தார். இஸ்லாத்தையும், இஸ்லாமிய கலாச் சாரத்தையும் ஈரானிலிருந்து துடைத்தெரிந்திட ஆங்கிலேயர்களும், அமெரிக்கர்களும் காட்டிய வழியில் மிகவும் வேகமாக செயல் பட்டார்.

சட்டங்களை அதாவது ஷரீயா சட்டங்களை புனரமைக்கும் கமிட்டி ஒன்றை ஏற்படுத்தினார். ஷரீயாவைப் பின்னுக்குத் தள்ளி மேலைநாட்டுக் கலாச்சாரத்திற்கு பாட்டை போட்டார். இதனை White Revolution என அழைத்தார்.

தன்னை எதிர்ப்பவர்களைக் கொலை செய்திட சாவக் "Savak" என்ற இரகசிய கொலைப் படையை 1957ல் தயார் செய்தார். அப்போது கும் "Qum"இல் மார்க்கத்தைக் கற்றுக் கொண்டிருந்த, இமாம் கொமைய்னி அவர்கள், மன்னரின் ஷரீயத்திற்கு எதிரான சட்டங்களை எதிர்த்தார். ஏற்க மறுத்தார்.

தன்னுடைய அறிவாழமிக்க உரைகளின்வழி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார். இமாம் கொமைய்னி மீது வழக்குகளை தொடுத்தார். சிறை பிடித்து, இரண்டாண்டுகளுக்குப் பின்னர் அவரை வெளியே விட்டார். மீண்டும் இமாம் கொமைய்னி அவர்கள் தனது எதிர்ப்பையும், எழுச்சிமிகு உரைகளையும் தொடர்ந்தார்கள். மீண்டும் கைது. மீண்டும் விடுதலை.

1964 இல் இமாம் கொமைய்னி அவர்களை நாடு கடத்தினார். ஈராக் நாட்டில் நஜஃப் பகுதியில் வீட்டுச்சிறை. நாடு கடத்தப்பட்ட நிலையில் தனது உரையை தொடர்ந்தார். அக்டோபர் 1977-ல் அது மொத்த ஈரான் மக்களையும், மன்னர் ஆட்சிக்கும் அவர் கொண்டு வந்த White Revolution என்ற வெள்ளைப் புரட்சிக்கும் நிறுத்தியது. இது மேலைநாட்டுமயமாக்கல் தான்.

East and West are Worst, Islam is the Best. கிழக்கும் மேற்கும் அழிவு, இஸ்லாமே உயர்ந்தது, சிறந்தது என்ற முழக்கம் ஈரான் மக்களின் மூச்சும், பேச்சும் என்றானது. மக்கள் படை திரண்டது. மக்களைக் கொலை செய்து தன் ஆட்சியை காப்பாற்றிட முயற்சி செய்தார் ஷா பஹ்லவி.


1979 ஜனவரியில் ஆங்கிலேய அமெரிக்க இரகசியப் படையும், சவாக்கும் வீதிக்கு வந்து போராடிய மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். அதனை ஆயுதம் கொண்டு எதிர் கொள்ளும்படி, இமாம் கொமைய்னி ஈரானில் வாழ்ந்த இமாம்களுக்கு கட்டளை யிட்டார். நோகாத வாழ்வு, போகாத சுகம் என வாழ்ந்து கொண்டிருந்த இமாம்கள் சற்றே தயங்கினார்கள். அப்போது இமாம் கொமைய்னி அவர்கள், இப்படிக் கூறினார்கள்,

“நீங்கள், எந்த முஹம்மத்(ஸல்) அவர்களை அறுதி நபியாகவும், அழகிய முன்மாதிரி யாகவும் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்களோ, அந்த முஹம்மத்(ஸல்) அவர்கள், இரும்பால் பூட்டிய போர் உடைய அணிந்து போர்க்களம் கண்டார்கள். எதிரிகளை வெட்டினார்கள், எதிரிகளால் வெட்டப்பட்டார்கள் இதையும் சேர்த்துத்தான் பெருமானார்(ஸல்) அவர்கள் அழகிய முன்மாதிரி.”

இதனை செவிமடுத்த இமாம்கள் ஆயுதம் தாங்கி வந்தார்கள். தோற்றன அமெரிக்க, ஆங்கிலேய இரகசியப் படைகள் பஹ்லவி நாட்டின் பிரதமரான ஷாய்பூர் பக்தியார் முக்தியார் என்பவரிடம் நாட்டை ஒப்படைத்துவிட்டு, ஜனவரி 16, 1979ல் தப்பி ஓடினார்.

முக்தியார் இமாம் கொமைய்னி அவர்களை ஈரான் வரும்படி அழைத்தார். இமாம் கொமைய்னி அவர்கள் 1979 பிப்ரவரி திங்கள் முதல் நாளில் ஈரான் வந்தார்கள். பிப்ரவரி 11 ஆம் நாளில் ஈரானை விட்டும் மன்னராட்சி, வம்சாவழி ஆட்சி வேரோடும், வேரடி மண்ணோடும் முற்றாகக் கெல்லியெறியப் பட்டது. ஈரானை இஸ்லாமிய குடியரசு என அறிவித்திட வேண்டும் என்றார்கள். இமாம் கொமைய்னி அவர்கள். ஆனால் மன்னர் விட்டுச் சென்ற முக்தியார் மக்களாகக் கேட்டுத்தான் அதைச் செய்திட வேண்டு மென்றார்.

1954 முதலே ஈரானின் பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளிலும் மேலை தத்துவங்கள் இஸ்லாத்திற்கெதிரான மதச்சார்பின்மை, தேசியம் இவையெல்லாம்



மாணவர்களுக்கு நிரம்பவே கற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. உண்மையைச் சொன்னால் இஸ்லாம் பிற்போக்குத்தனம் அது காலம் கடந்தது என்றெல்லாம் அந்த மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப் பட்டிருந்தது. இன்னும் சொன்னால் அந்த மக்களுக்கு இஸ்லாத்தை வெறுக்கவும், மறுக்கவும் கற்றுக் கொடுத்திருந்தார்கள்.

இந்தக் கல்வியில் மக்கள் நிச்சயமாக இஸ்லாத்தை வெறுப்பார்கள், என எதிர்பார்த்த பிரதமர் ஷாய்பூர் பக்தியார் ஒரு கணிப்பிற்கு பின்னரே, இஸ்லாமிய குடியரசு என அறிவிப்பதாக அறிவித்தார்.

ஓர் கருத்துக்கணிப்பை 1979 மார்ச் மாதத்தில் நடத்தினார். 98% சதவீதம் மக்கள் இனி இஸ்லாமிய ஆட்சியே ஈரானில் வேண்டும் என வாக்களித்தார்கள். 1979 டிசம்பர் 2, 3 ஆகிய நாட்களில் ஈரான் இஸ்லாமிய குடியரசு என அறிவிக்கப்பட்டது. The Constitution of Islamic Republic of Iran ஈரான் இஸ்லாமிய குடியரசின் அரசியல் சாசன சட்டம் செயலில் வந்தது. ஈரான் இஸ்லாமிய குடியரசு என்றானது.

**உலகில் இடம்பெற்ற மாற்றங்கள்**

உலகம் சற்றும் எதிர்பார்க்காத ஓர் நிகழ்வு இது. முஸ்லிம்கள் அல்லாத நாடுகளில் ஒரு பெரிய தாக்கம். இஸ்லாம் மன்னராட்சிக்கும், வம்சாவழி ஆட்சிக்கும் வழிவகுக்கும் ஒரு மார்க்கம் என்ற எண்ணம் வேரூன்றி நின்றது முஸ்லிமல்லாதவர் மனதில். இந்தப் புரட்சி இஸ்லாம் நாட்டும் அரசியல் நெறிமுறைகளின் பக்கம் மக்களைத் திருப்பிற்று. ஆய்வுகள் பல வெளிவந்தன.

புரட்சிக்கு வித்திட்ட இமாம் கொமைய்னியின் உரைகள் "குக்குமத்தே இலாஹி!" என்ற தலைப்பில் தொகுக்கப் பெற்று, உலகிலுள்ள பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பெற்று உலகெங்கும் சுழன்றது.

Show Cross William என்பவரின் The Shaw's Last Ride என்ற நூல் 1988ல் வெளிவந்தது. அவர் அந்த நூலில் இப்படி குறிப்பிட்டார்,

"In the non Muslims world it changed the image of Islam. generating much interest in Islam both sympathetic and hostile."

The Time என்ற பத்திரிகை தனது ஜனவரி 7, 1980 இதழில் இப்படிக் குறிப்பிட்டது, "ஹிட்லர் ஐரோப்பாவைக் கைப்பற்றிய பின் உலகை உலுக்கிய நிகழ்வு ஈரானின் இஸ்லாமிய புரட்சி என்றார்."

பாலஸ்தீன விடுதலைப் போர் புதியதோர் பொலிவைப் பெற்றது. ஆப்கானிஸ்தானில் ரஷ்யாவுக்கு எதிராகப் போராடிய முஜாஹித்கள் புதிய உற்சாகத்தைப் பெற்றார்கள்.

உலக வரலாற்றில் இஸ்லாத்தின் மேலிருந்த காழ்ப்பையும், கசப்பையும் இந்த நிகழ்வு பெரிதாக மாற்றியது. அவ்வளவும் பல கோடி டாலர் செலவில் ஊட்டி உரமிட்டு வளர்த்திருந்த, இஸ்லாமிய வெறுப்பு தூர்ந்து போனது. இந்த மாபெரும் நிகழ்வை ஏனோ ஜான் பெஃப்பர் அவர்கள் மறந்து போனார்கள். இதேபோன்ற இன்னொரு நிகழ்வு அடுத்த இதழில். இன்ஷா அல்லாஹ்...

- MGM




# உத்திரப் பிரதேசம்

## ஒரு மாநிலத்தின் வகுப்புவாத ஆயுதமாக

## தேசத்துரோக சட்டம் எப்படி பயன்படுத்தப்படுகிறது?

**பிலால் அஹமது**

பிலால் அஹமது! எல்லா நாட்களைப் போல அன்றும்(05/02/2020) அதிகாலைத் தொழுகைக்காக வேகமாக பள்ளிவாசலை நோக்கி செல்கிறான். தொழுகை முடிந்தது. அதிகாலை 5.30 மணி. பள்ளிவாசலிலிருந்து வீட்டிற்கு நடக்க தொடங்குகிறான். நடந்து கொண்டிருக்கும் போது, எதிரில் சில அடிகள் தூரத்தில் காவல்துறையினர் நிற்பதை காண்கிறான்.

அந்த காவல்துறையினரை அவன் கடந்து நடந்து செல்கின்றான். அடுத்த நொடி அந்த காவல்துறையினர் பிலாலை தாக்குகின்றனர். லத்தியாலும், துப்பாக்கிகளாலும் பிலாலின் கால்களில் கடுமையாக அடிக்கின்றார்கள்.

“ஏன் என்னை அடிக்கிறீர்கள்?” என்று வலியின் வேதனையில் கேட்கிறான் பிலால். காவல்துறையினரிடம் எந்த பதிலும் இல்லை. தொடர்ந்து அடித்துக் கொண்டே இருக்கின்றனர்.

பிலாலின் கால்கள் செயலிழந்து விட்டது. அவன் கீழே விழுந்து சரிகின்றான். கீழே



விழுந்த பிலாலை தூக்கி காவல்துறை வாகனத்தில் ஏற்றுகின்றனர். செயலிழந்த கால் வலியின் வேதனையிலும், "என்னை ஏன் இப்படி அடித்து வாகனத்தில் ஏற்றினீர்கள்? என் தவறு என்ன?" என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கின்றான் பிலால்.

நீண்ட நேரத்திற்கு பிறகு ஒரு காவல்துறை அதிகாரி பதில் அளித்தார். "பொறுமையாக இரு! உன் கேள்விக்கான விடை கிடைக்கும்!!".

பிலாலுக்கு தெரியாது! CAA-க்கு எதிராக போராடிய போராட்டக்காரர்கள் மீது காவல்துறை நடத்திய அடக்குமுறையில் கைது செய்யப்பட்ட கடைசி ஆள் இவன் தான் என்று.

இதனால் அன்று இரவு பிலால் கைது செய்யப்பட்ட பகுதியான "பிலாரியகஞ்சில்" அமைதியாக போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்த முஸ்லிம்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் சாதாரண முஸ்லிம் களை பிரச்சனை செய்பவர்களாகவும், அரசுக்கு மற்றும் சமூகத்திற்கு அச்சுறுத்தலாகவும் சித்தரிக்கப்படுவதை நாங்கள் (Article 14) கண்டறிந்தோம்.

காலையில் கைது செய்யப்பட்ட பிலால் மற்றும் இன்னும் பலர் மீது தேசத்துரோக 124A வழக்கு போடப்பட்டது.

**ஃபைஸல் கான்**

ஃபைஸல் கான் அஹமதாபாத் மாநகராட்சியின் வார்டு உறுப்பினர் இவர். 22/03/2020 அன்று தேசத்துரோக வழக்கில் கைது செய்யப்பட்டார். மார்ச் 6ம் தேதி யாரோ ஆறு நபர்கள் CAA-க்கு எதிரான போரட்டத்திற்கு அழைப்பு விடுக்கும் நோக்கில் துண்டு பிரசுரம் விநியோகித் துள்ளனர். அடையாளம் தெரியாத அந்த 6 நபர்களில் இவரும் ஒருவர் என காவல்துறை இவரை கைது செய்துள்ளது.

"இந்த வழக்கில் எனக்கு எதிராக எந்த ஆதாரத்தையும் காவல்துறை சமர்பிக்க வில்லை. மேலும் சம்பவம் நடந்த மார்ச் 6ம் தேதி நான் ஊரிலேயே இல்லை. மார்ச் 4ம் தேதி ராஜஸ்தான் சென்று மார்ச் 7ம் தேதிதான் திரும்பி வந்தேன்." என்கிறார் ஃபைஸல்.

ஃபைஸல் கான் அலஹாபாத்-ல் நடந்த ஷாஹின்பாக் போராட்ட களத்தில், பெண்கள், குழந்தைகள், முதியவர்களுக்கு பல்வேறு உதவிகளை புரிந்தவராவார்.

இந்த போராட்டக்களம் மார்ச் 24, 2020 அன்று கொரானா லாக்டவுன் அறிவிப்பின் காரணமாக முடிவுக்கு வந்தது. அதற்கு இரண்டு நாட்களுக்கு முன் 22 மார்ச் 2020 அன்று லோக்கல் எஸ்.பி. ஃபைஸலை போனில் தொடர்பு கொண்டு தன்னுடைய அலுவலகத்திற்கு வருமாறு அழைத்துள்ளார்.

அங்கு சென்ற ஃபைஸல் கானுக்கு அதிர்ச்சி. அங்கு அவருடைய கைப்பேசியை கைப்பற்றி கொண்டனர். அங்கேயே அவரை கைது செய்து கஸ்டடியில் எடுத்துள்ளனர். அவர் கைது செய்யப்பட்டதை அவரது குடும்பத்தார்களுக்கு கூட தெரிவிக்கவில்லை.

Article 14 இணையதளம் ஃபைஸல் கானின் வழக்கறிஞர்களிடம் பேட்டி கண்டது. அப்போது அவர்கள் கூறுகையில்,

"சிறுபான்மையினர்கள் முந்தைய ஆட்சியில் போலி வழக்குகளை அதிகமாக எதிர்கொண்டனர். இப்போதைய யோகி ஆதித்யநாத் ஆட்சியில் முஸ்லிம்கள் அதிகமாக தேசத்துரோக வழக்குகளை எதிர் கொள்கின்றனர்." என்கின்றனர்.

இறுதியாக ஃபைஸல் கான் தனக்கு ஜாமின் கிடைப்பதற்கு முன் 4 மாதங்கள் சிறையில் இருந்தார்.

**பரோஸ் அஹமது**

உத்திர பிரதேசத்தில் மஹராஜ் காஞ்ச் எனும் மாவட்டம். எலக்ட்ரிஷியன் ஃபரோஸ்

அஹமது 09/11/2018 அன்று தேசத்துரோக வழக்கில் கைது செய்யப்பட்டார். காரணம் "ஹிந்து யுவ வாஹினி" (யோகி ஆதித்ய நாத்-ஆல் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்ட அமைப்பு) என்ற அமைப்பை விமர்சித்து வாட்ஸ்ஆப்பில் சில ஃபார்வார்டு மெஸ்ஸேஜ்களை பகிர்ந்துள்ளார். இதனால் ஃபரோஸ் கான், "பெரும்பான்மை சமூகத்தின் மத நம்பிக்கைகளை இழிவுபடுத்தியதாக" கைது செய்யப்பட்டுள்ளார்.

ஃபரோஸ் கான் வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் போது காவல்துறையினர், ஐ.பி.சி 124ஏ பிரிவை கைவிட்டனர். இதனால் மாவட்ட நீதிமன்றத்திலேயே அவருக்கு ஜாமின் கிடைப்பதற்கான வழிகள் கிடைத்தது.

ஆனால் ஜாமின் கிடைப்பதற்கு முன் அவர் 70 நாட்கள் சிறையில் இருந்தார். இது அவருடைய வியாபாரத்தை அழித்தது. அவருடைய குடும்பம் கடுமையான வறுமையில் தள்ளப்பட்டது. ஜாமினில் வெளிவந்து இரண்டரை வருடங்கள் கடந்த பிறகும், இன்னும் கடன்களை அடைக்க முடியாமல் தத்தளித்து கொண்டிருக்கின்றார்.

இதுகுறித்து ஃபரோஸ் கானிடம் கேட்டபோது, "நான் காவல்துறை மீது குற்றம் சொல்ல விரும்பவில்லை." என்று கூறுகின்றார்.

அவருடைய வழக்கறிஞரிடம் கேட்ட போது,

"இந்த சம்பவத்தில் வகுப்புவாத அமைப்புகளும், அதன் தலைவர்களின் அழுத்தங்களாலும் காவல்துறை இப்படி செய்துள்ளது என்று நான் நம்புகிறேன். ஃபைஸல் கான் குற்ற உணர்வோடு இருக்கின்றான். மத உணர்வுகளுக்கு நாம் எப்போதும் மதிப்பளிக்க வேண்டும். அதே சமபயம் ஒருவர் மீது 124ஏ சட்டத்தை பயன்படுத்த சொல்லி காவல்துறைக்கு அழுத்தம் கொடுக்க இவர்களுக்கு என்ன உரிமையுள்ளது? 2014க்கு பிறகு கடந்த 7 வருடங்களில் நிறைய தேசத்துரோக வழக்குகள் பதியப்படுகின்றன. இதெல்லாம் ஏன் நடக்கின்றது என்பதை என்னால் விவரிக்க முடியவில்லை." என்கிறார்.

இதுகுறித்து காவல்துறையிடம் கேட்டபோது, "எங்களது விசாரணையில் ஃபரோஸ் கான் மீது தவறுதலாக தேசத்துரோக குற்றச்சாட்டு வைக்கப்பட்டுள்ளது என தெரிய வந்தவுடன், உடனேயே 124ஏ சட்டத்தை குற்றப்பத்திரிகையிலிருந்து நீக்கிவிட்டோம்" என்று மட்டும் தெரிவித்தனர்.

**ஸாகிர் அலீ தியாகி**

ஸாகிர் அலீ தியாகி, உத்திரப் பிரதேசத்தின், முஸாபர் நகரில் வசித்து வரும் மாணவர். இவர் யோகி ஆதித்யநாத் பதவியேற்ற சில மணி நேரங்களில் தனது முகநூல் பக்கத்தில் யோகியின் கடந்த கால குற்றவியல் வரலாறுகளை பதிவிடுகின்றார்.

இது நடந்து இறுபது நாட்களுக்கு பிறகு ஸாகிர் அலீயை முஸாபர் நகரத்தில் உள்ள கோட்வாலி காவல் நிலையத்திற்கு வலுக்கட்டாயமாக தூக்கி செல்கின்றனர். அன்று இரவும் அவர் காவல் நிலையத்திலேயே தடுத்து வைக்கப்படுகிறார். இரவு 2 மணிக்கு திடீரென்று 5 நபர்கள் காவல் நிலையத்திற்குள் புகுந்து ஸாகிர் அலீயை கடுமையாக தாக்கியுள்ளனர்.

"நீ எங்கள் யோகி ஆதித்யநாத்-ற்கு எதிராக பேசிவிட்டாய். உன் வாழ்க்கையே அழிந்து விட்டது என்று நினைத்துக் கொள். நாங்கள் உன்னை தீவிரவாதி என்று மக்களுக்கு மத்தியில் பரப்புவோம்." என்று சொல்லி அடித்ததாக ஸாகிர் அலீ சொல்கின்றார்.

அடையாளம் தெரியாத ஐந்து நபர்கள் காவல் நிலையத்திற்குள் புகுந்து ஸாகிர் அலீயை தாக்கிய போது, அவர்களை தடுக்க எந்த காவல்துறை அதிகாரிகளும் முன்வரவில்லை. கடுமையான காயங்களுக்கு உள்ளாகியிருந்த ஸாகிர் அலீ அடுத்த நாள் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் மே 13 அன்று வெளியில் விடப்பட்டார். இதுவரை இந்த வழக்கில் 124ஏ தேசத்துரோக சட்டம் பயன்படுத்தப்படவில்லை.

அடுத்த நாள், "லக்னோவில் உள்ள உயர் அதிகாரிகளின் அழுத்தத்தின் காரணமாக, நீ தேசத்துரோக குற்றத்திற்காக விசாரிக்கப் படுவாய்" என்று தெரிவித்துள்ளனர். பின்னர் மே 18 அன்று ஸாகிர் அலீக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அப்போது 124A தேசத்துரோக சட்டம் அதில் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு சம்மந்தமாக யார் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தார்கள்? எந்தெந்த அதிகாரிகள் இந்த வழக்கை விசாரித்தார்கள் என்று Article 14 இணையதளம் கோட்வாலி காவல் நிலையத்தில் விசாரிக்க முடிவு செய்தது. ஆனால் அதற்குள் அங்கு பணியில் இருந்த காவலர்கள் அனைவரும் வெவ்வேறு இடங்களுக்கு பணியிட மாற்றங்கள் செய்யப்பட்டுவிட்டனர்.

**அப்துல் ஹன்னான்**

15 மார்ச் 2020, சலாப் மணி திருப்பதி, உத்திரப்பிரதேச அரசின், மின்னணு ஊடகத்துறையின் தலைமை ஆலோசகர். இவர் CAA சட்டத்திற்கு எதிரான முஸ்லிம்களை குறித்து ஒரு டிவிட்டர் பதிவை போடுகின்றார். அதில்,

"NPR கணக்கெடுப்பின் போது தங்களது ஆவணங்களை காட்டமாட்டோம் என்று முரண்டு பிடிக்கும் முஸ்லிம்கள் கவனத்தில் கொள்ளுங்கள், அப்படி நீங்கள் செய்தால் நீங்கள் கலவரங்களை சந்திக்க நேரிடும், உங்கள் வீடுகள், நிலங்கள் அபகரிக்கப்படும், உங்கள் புகைப்படங்களோடு போஸ்டர்களை ஒட்டுவோம்" என்று எழுதியிருந்தார்.



சலாப் மணி திருப்பதி



அப்துல் ஹன்னான்

இந்த ட்வீட்டை பார்த்த வழக்கறிஞர் அப்துல் ஹன்னான் அவருக்கு பதில் ட்வீட் ஒன்றை பதிவிடுகின்றார். அதில்,

"இந்த நாட்டின் மிகப்பெரிய வகுப்பு வாத பயங்கரவாதி ஒருவர், இந்த நாட்டின் மூத்த பிரதிநிதிகளை தீவிரவாதிகள் என்கிறார். நீங்கள் தீவிரவாதிகளைப் போல் தான் நடந்து கொள்கிறீர்கள். அதனால் நீங்கள் அப்படித்தான் நினைப்பீர்கள்." என்று எழுதியிருந்தார்.

இந்த பதில் டிவீட்டில் யார் அந்த "வகுப்புவாத பயங்கரவாதி" என்று அவர் குறிப்பிடவில்லை. ஆனால் அன்றைய தினமே டிவிட்டரில் புனைப்பெயரில் உள்ள யாரோ ஒருவர் ஆன்லைன் மூலம் அப்துல் ஹன்னான் மீது புகார் அளித்துள்ளார்.

அந்த புகாரின் அடிப்படையில் கான்பூரில் உள்ள கல்யான் காவல் நிலையத்தில் அப்துல் ஹன்னானுக்கு எதிராக 124A தேசத்துரோக சட்டத்திற்கு கீழ் FIR பதிவு செய்யப்படுகிறது. "டிவிட்டரில் ஹன்னான், முதல்வர் யோகி ஆதித்யநாத்-ஐ, வகுப்புவாத பயங்கரவாதி" என்று சொன்னதாக FIR-ல் இருந்தது.

அதன் பின் காவல் நிலையத்திலிருந்து அப்துல் ஹன்னானுக்கு அழைப்பு வருகின்றது. அவர் செல்கிறார். காவல் நிலையத்திற்கு சென்ற அடுத்த நிமிடம் அவர் கைது செய்யப்

படுகிறார். அடுத்து மூன்று நாட்கள் கழித்து மாவட்ட நீதிமன்றம், "அந்த பதிவில் அவர் யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை" என்று கூறி அவருக்கு ஜாமின் வழங்கியது.

இந்த அப்துல் ஹன்னான், உ.பி.யில் CAA எதிர்ப்பாளர்களுக்கு எதிராக நிலங்கள், வீடுகள் அபகரிக்கப்பட்டவர்களுக்காக வாதாடி அதை திரும்ப பெற்று கொடுத்து கொண்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து லக்னோவில் பணியாற்றி வரும் மனித உரிமைகள் பாதுகாப்பு வழக்கறிஞர் அஸ்மா இஜ்ஜாத் அவர்களிடம் கேட்டபோது,

"உத்திரப்பிரதேசத்தில் உள்ள தலைமைக் காவலர்கள் முதல் சாதாரன கான்ஸ்டபிள் வரை ஆட்சியில் இருக்கும் அரசியல் வாதிகளின் உத்தரவுகளுக்கும், கட்டளை களுக்கும் அப்படியே கீழ்படிகின்றனர். இங்கு பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு சிறுபான்மையினர், கிருஸ்தவர்கள், முஸ்லிம்கள் உட்பட அனைவரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். குறிப்பாக முஸ்லிம்கள் விஷயத்தில் அவர்களது நோக்கம் உடல்களுக்கு தீங்குகளை விளைவிப்பது மட்டுமல்ல. மாறாக இந்துக்கள் அவர்களை வெறுக்கத் தொடங்கும் வகையில் ஒட்டுமொத்த சமூகத்தையும் இழிவுபடுத்துவதாகும்." என்று கூறுகிறார்.


அஸ்மா இஜ்ஜாத்

**உத்திரப்பிரதேச மாநிலமும் - தேசத்துரோக வழக்குகளும்**

உத்திர பிரதேசத்தை பொறுத்தவரை, CAA போராட்டக்காரர்களுக்கு எதிராக அதிகமான தேசத்துரோக வழக்குகளை தவிர, அந்த மாநிலத்தின் இந்துத்துவ தலைவர்கள் அடையாளம் காட்டும் நபர்கள் மீதும், அதிகமான தேசத்துரோக வழக்குகள் பதியப் படுகின்றன. பெரும்பாலும், இந்து மத நம்பிக்கையை இழிவு படுத்துதல், முதல்வர் யோகி ஆதித்யநாத்-க்கு எதிராக பதிவிடுதல், தேசியவாதம், பாகிஸ்தானுக்கு ஆதரவான கோஷங்கள், இந்தியாவிற்கு எதிரான கோஷங்கள் போன்றவைகளே காரணங்களாக உள்ளன.

Article 14 இணையதளத்தின் தரவுகளின் படி, 2010 முதல் உ.பி.யில் பதிவாகியுள்ள 115 தேசத்துரோக வழக்குகளில், 77% சதவிகிதம் யோகி ஆதித்யநாத் பதவியேற்ற 2017க்கு பிறகு பதிவானவை.

அரசு மற்றும் அரசியல் தலைவர்களை விமர்சித்ததற்காக மட்டும் 2014க்கு பிறகு இந்தியா முழுவதும் 96% தேசத்துரோக வழக்குகள் பதியப்பட்டுள்ளது. இதில் 405 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 149 நபர்கள் பிரதமர் மோடியை விமர்சித்ததற்காகவும், 144 நபர்கள் யோகி ஆதித்யநாத்-ஐ விமர்சித்ததற்காகவும் கைது செய்யப்பட்டுள்ளனர்.


திவ்யா ஸ்பண்டானா




இந்த பட்டியலில் காங்கிரஸை சார்ந்த திவ்யா ஸ்பண்டானவும், ஆம் ஆத்மி கட்சியை சார்ந்த சஞ்சை சிங்கும் அடங்குவர். திவ்யா ஸ்பண்டானா தனது டிவிட்டர் பக்கத்தில் மோடியின் நெற்றியில் "Chor - திருடன்" என்ற சொல்லை கொண்ட ஒரு புகைப்படத்தை பகிர்ந்ததற்காக தேச துரோக வழக்கில் கைது செய்யப்பட்டார். சஞ்சை சிங், யோகி ஆதித்யநாத் அரசு உ.பி.யில் எப்படி ஒரு குறிப்பிட்ட சாதிக்காக வேலை செய்கிறது என்பதை வெளியிட்டதற்காக கைது செய்யப்பட்டார்.

அரசு, மற்றும் முதல்வர்கள், பிரதமர்களை விமர்சித்த காரணத்திற்காக தேசத்துரோக வழக்குகளை பயன்படுத்துவதில் எல்லா மாநிலங்களை விடவும், உத்திரப்பிரதேசம் முன்னணியில் நிற்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்ஷா அல்லாஹ்

தொடரும்...!

***Source : Article 14***

**அஷ்ரப் அலீ**



THE NEW INDIAN EXPRESS

NATION WORLD STATES CITIES OPINIONS BUSINESS SPORT GOOD NEWS MOVIES PHOTOS VIDEOS

Home › Nation

# Sedition charge against Divya Spandana for 'offensive' tweet against Narendra Modi

*Congress social media wing in-charge Divya Spandana aka Ramya has been booked for sedition by Lucknow police for an offensive tweet against Prime Minister Narendra Modi.*

Published: 27th September 2018 05:53 AM | Last Updated: 27th September 2018 05:53 AM

The Indian EXPRESS

JOURNALISM OF COURAGE

Explained Politics Cities Opinion Entertainment Investigations Lifestyle Tech Sports Premium

Karnataka Elections News Quiz Premium @100 IPL 2023 Health Specials Express et al. Express Research

Ad by CRITEO

Report this ad

Ad choices

News / India / Uttar Pradesh Police adds sedition to case against AAP MP Sanjay Singh

# Uttar Pradesh Police adds sedition to case against AAP MP Sanjay Singh

Sanjay Singh, who was in New Delhi on Friday, said he will visit Lucknow on September 20 and surrender himself to the police.

EDITION IN CHENNAI 31°C

THE TIMES OF INDIA

City Lucknow Mumbai Delhi Bengaluru Hyderabad Kolkata Chennai Agra Agartala Ahmedabad

POLITICS CIVIC ISSUES CRIME SCHOOL AND COLLEGES UP ELECTIONS VIDEOS PHOTOS WEATHER EVENTS

NEWS / CITY NEWS / LUCKNOW NEWS / UP: Azamgarh Cops Foil Attempt To Stage Anti-CAA P...

TRENDING TOPICS Badrinath Yatra : Badrinath temple portals open for pilg...

THIS STORY IS FROM FEBRUARY 5, 2020

# UP: Azamgarh cops foil attempt to stage anti-CAA protest, 18 booked

PATHIKRIT CHAKRABORTY / TNN / Feb 5, 2020, 11:26 IST

SHARE



சம்பவங்களை நேரில் கண்ட சாட்சியங்கள் குஜராத் கலவரத்தை விசாரணை செய்த நானாவதி குழுவிடம் சாட்சி அளித்துள்ளனர்.

எனினும், நரோடா பட்டியாவில் நடந்த கலவரத்தை கட்டுபடுத்த சென்று விட்டதால், தங்களால் நரோடா கம் பகுதிக்கு செல்ல முடியவில்லை என்று பல காவல் துறை அதிகாரிகள் சாட்சி அளித்துள்ளனர்.

விஹெச்பி, பஜ்ரங்தள் தலைவர்கள், பிஜேபியினர் கலவரத்தில் மும்மரமாக

# நரோடா கம் படுகொலை குற்றவாளிகள் விடுதலை

கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தை காரணம் காட்டி பாசிஸ்டுகள் தங்கள் கோரத்தாண்டவத்தை குஜராத் முழுவதும் அரங்கேற்றினர். 2002 பிப்ரவரி 28 அன்று முஸ்லிம்கள் வாழும் அஹமதாபாத் நரோடா கம் பகுதியில் நுழைந்த பாசிஸ்ட் கும்பல் முஸ்லிம்களின் வீடுகளுக்கு தீ வைத்தது. இதில் 11 முஸ்லிம்கள் உடல் கருகி பலியாகினர். நரோடா காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யப்பட்டது.

கொலை, கொலை முயற்சி, சதி திட்டம், சட்டத்திற்கு புறம்பாக ஒன்று கூடுதல், கலவரம், வழிப்பறி, வகுப்புவாத விரோதத்தை தூண்டுதல், மத உணர்வுகளை புண்படுத்துதல் இன்னும் இந்திய தண்டனைச் சட்டத்தின் மற்ற பிரிவுகளின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

பாஜக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாயா கொட்னானி, பஜ்ரங்தள் தலைவர் பாபு பஜ்ரங்கி , விஹெச்பி தலைவர் ஜெய்தீப் பட்டேல் , நரோடா காவல் நிலையத்தின் அப்போதைய ஆய்வாளர் V.S.கோஹில் ஆகியோர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

முஸ்லிம் சமூகத்திற்கு போதுமான பாதுகாப்பை காவல்துறை வழங்கிடவில்லை என்றே ஈடுபட்டனர். அவர்களின் தூண்டுதல் காரணமாகவே கலவரம் நடைபெற்றது என்பதை அங்கே வாழ்ந்த மக்கள் மட்டுமல்ல அங்கே நின்றிருந்த காவல் துறையினரும் கூறியுள்ளதை விசாரணை கமிஷன் பதிவு செய்துள்ளது.

எனினும் மேலே கூறிய தலைவர்கள் குற்றம் இழைத்தார்களா என்பதை நீதிமன்ற விசாரணையே முடிவு செய்யும். விசாரணை கமிஷன் ஒரு உண்மை கண்டறியும் குழு மட்டுமே என்பதால் இதனை பற்றி கருத்து கூறுவது விசாரணை கமிஷனுக்கு உகந்ததல்ல என்றும் பதிவு செய்துள்ளது.

### நரோடா பட்டியா வழக்கு

குஜராத் கலவரத்தில் நடந்த மிக மோசமான படுகொலையான நரோடா பட்டியா வழக்கில் 2012 இல் மாயா கொட்னானி, பஜ்ரங்கி இருவரும் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டது. கொட்னானிக்கு 28 வருட சிறை தண்டனை வழங்கப்பட்டது.

2013 இல் கொட்னானி, பஜ்ரங்கி, கிசான் கோரனி ஆகிய மூவரும் ஒரு மனுவை அளித்தனர். அதில் நரோடா பட்டியா வழக்கில் கொட்னானி குற்றவாளி என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால்




அவரை நரோடா கம் வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

அந்த மனு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

ஆனால் 2018ஆம் ஆண்டு குஜராத் உயர்நீதி மன்றத்தால் அவர் விடுதலை செய்யப்பட்டார். விசாரணை நீதிமன்றம் அவரை ஆரம்பத்தில் குற்றவாளி என கருதியுள்ளது. அதன் பின்பு அதற்கு ஆதரவான காரணங்களை தேடியுள்ளது. எனவே சந்தேகத்தின் பலனை கருத்தில் கொண்டு அவரை விடுவிப்பதாக நீதிமன்றம் கூறியது.

**நரோடா கம் வழக்கு**

நரோடா கம் வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட 86 பேரில், 18 பேர் விசாரணை நடந்து கொண்டிருக்கும் போதே இறந்து விட்டனர். ஒருவர் வழக்கில் இருந்து விடுவிக்கப் பட்டுவிட்டார். மீதி 67 பேர் பிணையில் வெளியே வந்து விட்டனர். கிட்டத்தட்ட 182 சாட்சிகள் விசாரணை செய்யப் பட்டுள்ளனர்.

தான் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க மார்ச் 2017 இல் இன்னும் 14 சாட்சிகளை விசாரிக்க வேண்டும் என்று கொட்னானி கேட்டுக் கொண்டார். இந்த சாட்சியில் அப்போது பிஜேபியின் தேசிய தலைவராக இருந்த அமித்ஷாவும் உண்டு.

18 செப்டம்பர் 2017 நீதிமன்றத்தில் ஆஜரான அமித்ஷா சம்பவம் நடந்த அன்று அதாவது 28 பிப்ரவரி 2002 இல் காலை 8:30 மணிக்கு குஜராத் சட்டசபையில் கொட்னானியை பார்த்ததாகவும் 11-11.15 மணிக்கு (Sola Civil Hospital) சிவில் மருத்துவமனையில் அவரை பார்த்ததாகவும் சாட்சியளித்தார்.

எனவே குற்றம் நடந்த நேரத்தில் தான் அந்த இடத்தில் இல்லை என கூறினார் கொட்னானி.

இது Special Investigation Team (SIT) சிறப்பு புலனாய்வு அணியின் கூற்றுக்கு முரணாக அமைந்தது.

சிறப்பு நீதிபதி சுபதா கிருஷ்ணகந்த் பக்ஷி வழக்கு விசாரணையை ஏப்ரல் 5 இல் முடித்தார்.

ஏப்ரல் 20 இல் அஹமதாபாத் சிறப்பு நீதிமன்ற நீதிபதி பக்ஷி தன்னுடைய தீர்ப்பை வழங்கினார். கொட்னானி, பஜ்ரங்கி, ஜெய்தீப் பட்டேல் உட்பட 67 பேரையும் அவர் வழக்கில் இருந்து விடுவித்தார்.

அனைவரையும் வழக்கில் விடுவித்து விட்டால் 11 முஸ்லிம்களை எரித்து கொன்றது யார்?

ஆதாரம்:

The Indian Express

All acquitted in 2002 Naroda Gam massacre,. April 21, 2023.

**- அபூஹாசின்**



மாலை மலர்

கோயம்புத்தூர்

**கோவையில் 2 கோவில்கள் முன்பு இறைச்சி வீசிய என்ஜினீயர் கைது**

30 மே 2020 7:26 AM

மேலும் படிக்க



THE NEW INDIA

NATION WORLD STATES CITIES OPINIONS

Home › States › Tamil Nadu

**Miscreants set fi**
**in Kovai, proper**

*According to the police, miscreants burnt cl*
*near Five Corners in Town Hall in the city.*

Published: 18th July 2020 11:20 AM | Last Updated: 1

# கோவையின் ஆலயங்களை குறிவைக்கும் மனநோயாளிகள்

**ஆலயம் தொழுவது சாலமும் நன்று. ஆனால், ஆலயங்களை சிதைப்பது இந்துத்துவ சக்திகளின் அஜண்டாக்களில் ஒன்று என்பதை கீழ்கண்ட சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன.**

**சம்பவம்** 1

*29.05.2020 காலை கோவையின் பிரதான பகுதியான வைசியாள் வீதியிலுள்ள வேணுகோபால கிருஷ்ணசாமி கோவிலிலும் அதன் அருகேயுள்ள ராகவேந்திரா கோவிலிலும் பன்றி இறைச்சியை வீசிவிட்டு ஒருவன் தப்பி ஓட முயன்றான். கோவில் வாசலில் பூ விற்ற பெண் கூச்சலிடவே பொதுமக்கள் பிடித்து விட்டனர். அவன் பெயர் ஹரி. மறுநாள் செய்தித்தாள்களில் எப்படி செய்தி வெளியிட்டனர் தெரியுமா? “கோவிலில் இறைச்சி வீசிய இன்ஜினியர் கைது”!*

*காவல் துறையினர் இந்த வழக்கை கையாண்ட விதம் தான் அதிசயம்! பன்றிக்கறியை வாங்கிக் கொண்டு இரு சக்கர வாகனத்தில் வந்து தெளிவாக இரு கோவில்களை தேர்வு செய்து கலவரம் ஏற்படட்டும் என்ற நோக்கத்தோடு வீசியவனை “மனநோயாளி” என்று மிக சிம்பிளாக வழக்கை முடித்துக் கொண்டனர் காவல் துறையினர்.*

**சம்பவம்** 2

*18.07.2020 - கோவையில் 6 கோவில்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இத்தனைக்கும்*


N EXPRESS

BUSINESS | SPORT | GOOD NEWS | MOVIES | PHOTOS | VIDEOS | WE

ire at three temples
rties damaged

othes and tyres at Magaliamman temple on NH road

wuson
le News

8th July 2020 03:51 PM

A+ A A



ஆர்.எஸ்.எஸ். தேசிய தலைவர் மோகன் பகவத் கோவையில் தான் இருந்தார். எவ்வளவு பெரிய கலவரம் நடந்திருக்க வேண்டும்? நடக்கவில்லை. ஏன்? இதை செய்தவனை காவல்துறையினர் பிடித்து விட்டனர்! குற்றவாளி ஒரு மனநோயாளி!

ஒட்டு மொத்த ஊரும் லாக்டவுன். எந்த பேருந்து வசதியும் கிடையாது. சேலத்திலிருந்து ஒரு மனநோயாளி வீட்டை விட்டு கிளம்பி எந்த வாகன வசதியுமில்லாமல் கோவைக்கு வந்து அதிகாலை 3 மணியளவில் 6 கோவில்களுக்கு (ஒரு கோவிலை விட்டு இன்னொரு கோவிலுக்கு செல்லவே அரைமணி நேரமாகும். அதிலும் நல்லாம்பாளையத்திலுள்ள கோவிலுக்கு செல்ல வேண்டுமென்றால் உள்ளூர்காரர்களான எங்களுக்கே வாகனத்தில் செல்லவே அரைமணி நேரம் ஆகும்!) சாவகாசமாக தீ வைத்தானாம். இது தான் காவல்துறையினர் வழக்கு பதிந்த (கதை அளந்த) லட்சணம்.

**சம்பவம் 3**

02.04.2023 கோவையின் பிரதான அவிநாசி சாலை உப்பிலிபாளையத்திலுள்ள பள்ளிவாசலில் இரவு தொழுகை நடந்து முடிந்த சிறிது நேரத்தில் முன்புறமுள்ள 1000 லிட்டர் சின்டெக்ஸ் டேங்கில் ஒருவன் எண்ணெய் போன்ற ஒரு திரவத்தை பாட்டிலிலிருந்து டேங்கில் ஊற்றுவதை ஒருவர் பார்த்து எல்லோருமாய் சேர்ந்து அவனை பிடித்து காவல்துறை வசம் ஒப்படைத்தனர்.

அவனை விசாரித்ததில் அவனும் “மனநோயாளியாம்!” இந்த சம்பவத்தில் புகாரும் அளிக்கப்படவில்லை! அதனால் வழக்கும் பதிவு செய்யப்படவில்லை!

மேற்சொன்ன மூன்று சம்பவங்களிலும் பாதிப்புக்குள்ளான ஆலயங்கள் அனைத்தும் பிரதான சாலைகளிலுள்ளவை. தீ வைத்தல், இறைச்சியை வீசுதல் போன்ற வன்முறை சம்பவங்களுக்கு பின்னால் நிச்சயமாக ஒரு திட்டமிடல் உள்ளது.

சின்னசின்ன சம்பவங்களுக்கெல்லாம் கண்டன ஆர்ப்பாட்டம் போராட்டம் என்று துள்ளிக் குதிக்கும் இந்துத்துவ அமைப்புகளோ, கட்சிகளோ மேற்சொன்ன முதல் இரண்டு சம்பவங்களின் போது அமைதி காத்தன.

ஆக வழிபாட்டுத்தலங்கள் சேதப்படுத்தப்படும் போது அந்தந்த சமுதாயத்தினர் எதிர்வினை யாற்றுவார்கள். இதனை பயன்படுத்தி ஒரு கலவரத்தை உருவாக்கி விடலாம் என்று துடியாய் துடிக்கின்றனர் இந்த சம்பவங்களை திட்டமிட்டவர்கள். ஆனால் கோவையின் மக்களோ சமூக ஒற்றுமையின்பால் மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கின்றனர். நாம் இங்கே குறிப்பிடுவது முஸ்லிம்களை மட்டுமல்ல இந்து சகோதர சமுதாயத்தினரை தான்.

தீபாவளிக்கு முதல்நாள் நடத்திக் காட்டிய கார் குண்டுவெடிப்பையே தெளிவாக புரிந்து கொண்டனர் சகோதர சமுதாயத்தினர், “இது முஸ்லீம்களால் நடத்தப்பட்ட தாக்குதல் அல்ல, முஸ்லீம்களை குறிவைத்து கறுப்பாடுகளால் நடத்தப்பட்ட தாக்குதல்” என்று.

இப்படி ஆலயங்களை சிதைப்பது உண்மையில் மன நோயாளிகள் தான் என்பதை காவல்துறை தக்க ஆதாரங்களுடன் நீதிமன்றத்தில் நிரூபித்துள்ளனரா என்பதை RTI மூலம் தான் அறிய முடியும் என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

**கோவையிலிருந்து வைகறை நிருபர்கள்**

**சிக்கந்தர் மற்றும் ஆசிப்**



மருத்துவம் - தொடர்

# காலையில் என்ன சாப்பிடலாம்?

பல வீடுகளில் காலைஉணவு என்பது ஒரு ஒழுங்குமுறையில் இருப்பதில்லை. அதிலும் பள்ளி, கல்லூரி போகும் பிள்ளைகள் மிகவும் மோசம். காலையில் எழுந்தவுடன் கண்ணாடியைப் பார்ப்பார்கள், அப்போதுதான் யோசிப்பார்கள், தொப்பை இருக்கிறது கொஞ்சம் குறைக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு பலர் காலை உணவைத் தவிர்த்து விடுகிறார்கள். காலை உணவு மிகவும் முக்கியம். காலை உணவை யார் மிகச் சிறப்பான முறையில் சரியாக எடுக்கிறார்களோ அவர்களுக்குப் புத்திசாலித்தனம் நோய் எதிர்ப்பாற்றல் ஆகியவை சரியாக இருக்கும்.

ஆசாரக்கோவை என்ற தமிழ் நூலில் காலையில் தித்திப்பான பழங்கள் அல்லது ஆவியில் வெந்த உணவு ஆகியவையே மிகச் சிறப்பான காலைஉணவு என்று குறிப்பிட்டுள்ளனர். தித்திப்பாக உள்ள பழங்களில் வாழைப்பழம் மிகவும் நல்லது. காலையில் உணவு சமைக்கத் தாமதமானால் இரண்டு வாழைப்பழம், ஒரு கொய்யாக் கனி சாப்பிட்டுச் செல்லலாம். சிறிது நிதானமாகச் சென்றால் இரண்டு பழம், கொஞ்சம் சிவப்பரிசி அவல், இட்லி, பொங்கல் எடுத்துக் கொள்ளலாம். காலை உணவாக ஆவியில் வெந்த உணவும், பழங்களும் எடுத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக வீட்டில் குழந்தைகள் இருந்தால் நிச்சயம் அவர்களுக்கு இவற்றை கொடுக்க வேண்டும்.

காலைச் சிற்றுண்டியாக மிகச் சிறப்பான உணவுகள் நம்முடைய பழக்கத்திலேயே இருக்கின்றன. சாதாரணமாக எளிதில் ஜீரணிக்கக் கூடிய உணவைத் தான் காலைச் சிற்றுண்டியாக எடுக்க வேண்டும். காலையிலேயே எண்ணையில் பொரித்த பூரி, பரோட்டா போன்றவை உண்பது தவறு. ஆவியில் வெந்த இட்லி, இடியாப்பம், பொங்கல் போன்ற உணவுகளே மிகவும் சிறப்பானவை, ஆரோக்கியமானவை.

பலரும் இட்லியில் என்ன இருக்கிறது என்று நினைக்கிறார்கள், உலக அளவில் பிரபலமான உணவியல் வல்லுனர் கே. டி. அட்சயா, "உலகில் உள்ள பல்வேறு உணவுகளில் சீனா, லத்தீன், அமெரிக்கா, மேற்கத்திய உணவுகள் ஆகியவற்றுள் மிகச் சிறந்த உணவு இட்லி" என்கிறார். அவர் மிகச்சிறந்த உணவு ஆராய்ச்சி யாளராகத் திகழ்பவர். அவர் அவ்வாறு கூறுவதற்கு என்ன காரணம்? இட்லிக்கு பயன்படுத்தும் மாவில் உடலுக்கு நன்மை தரக்கூடிய பல்வேறு பாக்டீரியாக்கள் உள்ளன. இட்லியானது நம்முடைய பசியை ஆற்றுவதோடு, புரோபயோடிக் என்றழைக்கப்படும் உடலுக்கு உள்சென்று

நன்மை செய்யக்கூடிய பாக்டீரியாக் களையும் சேர்த்துத் தருகிறது. அதேபோல புளித்து, ஊறவைத்து அரைத்து எடுக்கக்கூடிய இட்லி போன்ற உணவுகளும், பொங்கல் போன்ற சமச்சீர் உணவும் மிகவும் நல்லவை. பொங்கலில் அரிசி, பருப்பு, கொழுப்புக்கான நெய் போன்ற சமச்சீர் பொருள்கள் உள்ளன. காலை உணவைத் தவிர்ப்பதோ, எளிதாகக் கடையில் கிடைப் பவற்றை வாங்கி உண்பதோ நம் ஆரோக்கியத்தை நாமே கெடுத்துக் கொள்வதாக ஆகிவிடும்.

காலை உணவாக என்ன சாப்பிடுகிறீர்கள் என்று 70 வயது முதியவர் வரை யாரைக் கேட்டாலும் ஓட்ஸ் சாப்பிடுவதாகக் கூறுகிறார்கள். மேலும் "ஓட்ஸ் சாப்பிட்டால் உடம்பு இளைக்குமாமே!" என்கின்றனர்.

15 முதல் 20 ஆண்டுகளுக்கு முன்பு வரை ஓட்ஸ் என்றால் யாருக்குமே தெரியாது. ஜெனிவாவில் இருக்கும் உணவு மற்றும் வேளாண் அமைப்பில் எது மிகச் சிறந்த காலை உணவு என்று பட்டியல் தயாரித்தார்கள். ஜெர்மனி, சீனா, மத்திய தரைக்கடல் உணவுகள் என்று உலகின் எல்லா உணவுகளையும் ஆராய்ந்து எது மிகச் சிறந்த காலை உணவு என்று பட்டியலிட்டார்கள்.

எது இளைஞர்களுக்கு ஏற்றது? எது வயதான வர்களுக்கு ஏற்றது? எதைக் குழந்தைகளுக்குக் கொடுக்க முடியும்? எதை நோயுற்றவர்களுக்கும் கொடுக்க முடியும்? இப்படி ஒரு பெரிய பட்டிய லிட்டார்கள்.

கே.டி. அட்சயா எழுதிய "Ancient Indian Food" என்ற நூலை ஆக்ஸ்போர்டு பப்ளிகேஷனில் வெளியிட்டுள்ளனர். அவ்வளவு அருமையான புத்தகம். இவர் பட்டியலிட்ட ஓர் உணவைத்தான் எல்லா தரப்பினருக்கும் சிறந்தது என்று தேர்ந்தெடுத்தார்கள்.



அந்த உணவு நம் ஊர் இட்லி. விளையாட்டுக்குச் சொல்லவில்லை; அல்லது எனக்கு இட்லியின் மீது இருக்கும் பிரியத்தால் சொல்லவில்லை. அந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள் அனைவரும் சுவிட்சர்லாந்தில் வேலை செய்த ஜெர்மனியர்கள். அவர்கள் இதில் மிகச் சீரான அளவில் Recommended Dietary Allowance என்று சொல்லக்கூடிய பொருட்கள் இருக்கின்றன.

இதில் புரதம், கார்போஹைட்ரேட், ஃபைபர் அளவுகளும் உடலுக்கு நன்மை செய்யும் புரோபயாட்டிக் அளவுகளும் சரியான அளவில் இருக்கின்றன. இவையெல்லாம் அந்த இந்திய மக்களுக்கு எப்படித் தெரியும்? என்று கேள்வி எழுப்புகிறார்கள்.

அன்றைக்கு இருந்த நம் தமிழ் குடிக்கு புரோபயாடிக்ஸ் தெரியாது. அன்றைய மக்களுக்குத் தெரிந்ததெல்லாம் அறம் மட்டுமே. இந்த உணவைச் சாப்பிட்டால் என் குழந்தை நன்றாக இருக்கும்,என் சமூகம் நன்றாக இருக்கும் என்று அந்த மக்களுக்குத் தெரியும். அவ்வளவு நேர்த்தியாகத்தான் ஒவ்வொரு உணவையும் தமிழ்ச் சமூகமும் இந்தியச் சமூகமும் தேர்ந்தெடுத்திருக்கிறது. ஆகவே, இட்லி சாப்பிடுவோம்!.

**- நன்றி**

**முதுமை எனும் பூங்காற்று**



# முஆத் இப்னு ஜபல்(ரலி)

# அவர்களின் தீன் பணி!



**ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்**
**குளச்சல்**

கலீபா உமர் பின் கத்தாப்(ரலி) தோழர் ஒருவரை அழைத்து பனூகிலாப் கோத்திரத்தாரிடம் ஸகாத் வசூலித்து, ஸகாத் வாங்க தகுதி பெற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டினார்கள். கலீபாவின் தூதர் வந்திருக்கிறார் என்றதும் ஸகாத் கடமையாக்கப்பட்டவர்கள் அனைவரும் கொண்டு வந்து கொடுத்தனர். ஸகாத் வாங்க தகுதி பெற்றவர்களிடம் ஸகாத் ஒப்படைக்கப்பட்டது. கலீபாவின் பிரிதிநிதி தனக்கு இடப்பட்ட கட்டளையை முடித்து வெறுங்கையோடு வீடு திரும்பினார்.

மிடு வந்ததும் மனைவி நீண்ட வேலைக்கு பிரயாணம் செய்து, வெறும் கையோடு வீடு வந்துள்ளீர்களே! இது தான் நீங்கள் சென்ற வேலைக்கு கூலியா? என வினா எழுப்பினார். மனைவி பேச்சு கேட்டு என்னை ஓர் கண்காணிப்பவர் உற்று நோக்கி கொண்டிருந்தார். ஆகவே நான் எவ்வித பரிசு பொருள்களும் வாங்கவில்லையென்றார்.

கணவன் பதில் திருப்தி அளிக்காமையால் கலீபா உமர்(ரலி) வீட்டிற்குச் சென்று அவர்கள் வீட்டிலுள்ளவர்களிடம் முறையிட்டாள். அப்பெண் வீட்டிலுள்ளோர் மூலம் விபரமறிந்த கலீபா உமர்(ரலி) ஆள் அனுப்பி கூப்பிட்டார்கள் கலீபாவின் பிரதிநிதியை.

நீர் உம்மை கண்காணிக்க ஆள் அனுப்பியதாக ஓர் செய்தி வீட்டில் சொல்லியுள்ளீர். நான் உம்மை கண்காணிக்க யாரை அனுப்பினேன் எனக்கேட்டார்கள் உமர்(ரலி). அமீருல் முஃமினீன் நீங்கள் எந்தக் கண்காணிப்பாளரையும் என்னைக் கண்காணிக்க அனுப்பவில்லை. நான் வீட்டிற்கு வெறுங்கையோடு வந்ததால் மனைவியை சமாதானப்படுத்த அவ்வாறு சொன்னேன் என்றார் முஆத்.

கலீபா உமர்(ரலி)சில பரிசு பொருட்களை முஆதிடம் கொடுத்து அனுப்பினார்கள். அதனை பெற்று வீட்டிற்கு சென்றார்கள் முஆதிபினு ஜபல். முதல் அகபா உடன்படிக்கைப் படி மிஸ்அப்இப்னு உமர் மூலம் பதினெட்டு அல்லது பத்தொன்பது வயது முஆதிபினு ஜபல் இஸ்லாத்தில் இணைந்தார். முஆதிபினுஜபலை எமனுக்கு இஸ்லாமிய பிரச்சாரம் செய்ய அனுப்பிய போது நபிகள் நாயகம் முஆதிபினு ஜபலுடன் சிறிது தூரம் நடந்தே சென்றார்கள். மக்களுக்கு

விசயங்களை எளிதாகச் சொல். எதையும் கடினமாக்காதே. அவர்களுக்கு நற்செய்தி சொல்பவனாக இரு. அவர்கள் உன்னை கண்டு ஒதுங்காமல் இருக்கும்படி நடந்து கொள். விசுவாசம், தொழுகை, ஸகாத் போன்றவற்றை உபதேசி. அநியாயம் இழைக்கப்பட்டு வருபவன் தனது குறையை அல்லாஹ்விடம் தெரிவிக்கும் பிரார்த்தனை யிலிருந்து உன்னைத் தற்காத்துக் கொள். ஏனெனில் அத்தகைய பிரார்த்தனை இறைவனை நேரடியாக சென்றடைகிறது.

முஆதே! அடுத்த ஆண்டு நீர் என்னைக் காண முடியாது. என் அடக்கஸ்தலத்தை தான் காண முடியும் என நாயகம் சொன்னார்கள். இது கேட்ட நபிபிரான் தோழர்கள் அழுதார்கள். மதீனாவை நோக்கி திரும்பிய நபிகள் நாயகம் இறையச்சம் உடையவர் யாரோ அவர்களெல்லாம் எனக்கு மிகவும் நெருக்கமானவர்களே. அவர்கள் எங்கிருந்தாலும் எக்காலத்தவராயினும் சரி என நாயகம் கூற கண்ணீர் மல்க பிரியாவிடை பெற்றார் முஆத்.

குர்ஆன் வசனம் இறங்கும் போது அதை பதிவு செய்ய நபியால் நியமித்த ஆறு இளம் நபித்தோழர்களில் இவரும் ஒருவர். எமன் வந்த முஆத் இப்னு ஜபல் பெருமானாரிடம் நேரிடையாக கல்வி கற்றவர்கள். எமன் நாட்டு மக்களுக்கு கல்வி போதனையை செய்தார்கள். மக்கள் கற்றபடி அமல் செய்ய முற்பட்டனர்.

நபியென வாதம் செய்த அஸ்வத் அல் - அன்ஸியை முஸ்லிம்கள் ஒன்றுபட்டு எதிர்த்தனர். முஆத்இப்னு ஜபல் ஒரு குழுவிற்கு தலைமை ஏற்று அவனோடு போர் செய்தார்கள். அஸ்வதை பைரோஸ் அத்-தைலமி (ரலி) அவனை கொன்றொழிக்க அப்பிரச்சினை முடிவுக்கு வந்தது.

உமர்(ரலி) கலீபாவாக பொறுப் பேற்ற போது முஆதிப்னு ஜபலலை எமன் நாட்டிற்கு ஆளுனராக நியமித்தார்கள். அவர்கள் ஆட்சியில் எமன் நாடு பலவாறு உயர்வடைந்தது. தம் ஆட்சியில் முதலாவது ஆண்டு ஸகாத்தை நாட்டு மக்களின் வசதி படைத்தவர்களிடம் வாங்கி ஏழை எளியோருக்கு ஸகாத் வாங்க கடமைபட்டோருக்கு கணக்கிட்டு கொடுத்தார்கள். மீதி தொகையை தலைநகர் மதீனாவுக்கு அரசு கருவூலத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

இரண்டாவது ஆண்டு ஸகாத் தொகையில் பாதித் தொகையை அரசு கருவூலத்திற்கு அனுப்பி வைத்தார்கள். மூன்றாவதாண்டு ஸகாத் வாங்க ஆள் இல்லாததால் முழுத் தொகையையும் அரசு கருவூலத்திற்கு அனுப்பி வைத்தார் ஆளுனர் முஆதிப்னு ஜபல். இது இஸ்லாம் கற்றுத் தந்த பொருளாதார திட்டமாகும்.

முஆத்இப்னு ஜபல் தன் *38*-வது வயதில் காலமானார்கள். முஆதிப்னு ஜபலை எமன் நாட்டிற்கு ஆட்சியாளராக அனுப்பும் போது நபிகள் நாயகம் நீர் எப்படி ஆட்சி செய்வீர் என்று வினா எழுப்பிய போது நான் குர்ஆனை பின்பற்றுவேன். குர்ஆனில் விளக்கம் கிடைக்கவில்லையானால் உங்களின் ஹதீஸை பின்பற்றுவேன் என்றார். குர்ஆனில் ஹதீஸில் விளக்கம் கிடைக்காவிட்டால் என் பகுத்தறிவை குர்ஆனுக்கும், ஹதீஸுக்கும் மாற்றம் வராதபடி பிரயோகித்து ஆட்சி செய்வேன் என்றார்கள்.

இது கேட்ட நபிகள் நாயகம்(ஸல்) நீர் சொல்வது நேரான பாதையென்றார்கள். இதனடிப்படையில் தான் பிற்காலத்தில் மத்ஹபுகள் என்னும் சீர் செய்த நேரான பாதை ஏற்பட்டது. மத்ஹபு கூடாது எனக் கிளம்பிய கூட்டம் அவர்கள் பல்வாறு இன்று பிரிந்து நிற்பதை பார்க்கிறோம். இறைவன் மத்ஹபடி இபாதத் செய்யும் பாக்கியத்தை தந்தருள்வானாக! ஆமீன்.


**இஸ்லாமிய நாகரிகம்**




**ஆசிரியர்:** முஸ்தபா அல்ஸிபாஈ
**பக்கம்:** 208 பக்கங்கள்
**விலை:** 130/-

**நமது கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் எத்துணை கீர்த்திமிக்கது என்பதை இங்கே இயன்ற மட்டும் எடுத்துக் காட்டியுள்ளேன்.**

**நமது நாகரிகத்தின், பண்பாட்டின் அனைத்து அம்சங்களையும் இங்கே சுட்டிக்காட்டுவது என்பது இயலாத ஒன்றுதான். நான் தொடங்கி வைத்திருக்கின்றேன். நீங்கள் தொடருங்கள்; முடித்தும் வையுங்கள்.**

- முஸ்தபா அல்ஸிபாஈ

**Ph:7401213394**

Vergal Pathippagam | 8148129887




# டெல்லி கலவரம்

## வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள்

### 2020 டெல்லி கலவரத்தைப் பற்றிய "குடிமக்கள் குழுமத்தின்" அறிக்கை

**முன்னுரை**

பிப்ரவரி 23, 2020 - டெல்லியின் வடகிழக்கு மாவட்டத்தில் நான்கு நாட்கள் பேரழிவை ஏற்படுத்திய வகுப்புவாத வன்முறையின் தொடக்கப்புள்ளியை இது ஆராய்கிறது..

இந்த அத்தியாயம் இந்த காலகட்டத்தில் நடந்த வன்முறை சம்பவங்கள் குறித்த விளக்கத்தையும், வன்முறையின் இயக்கத்தை புவியியல் ரீதியாகவும் சூழ்நிலைப்படுத்துகிறது. மேலும் இதில் முக்கியமான நிகழ்வுகளையும், வன்முறை ஏற்படும்போது அரசு நிறுவனங்களின் பதில்களையும் சுருக்கமாக குறிப்பிடுகின்றது..

இது முழுமையானதல்ல. இதன் நோக்கம் நான்கு நாட்களின் ஒட்டுமொத்தக் கதையில் ஒவ்வொரு நாளும் என்ன நடந்தது என்பதைப் பற்றிய ஒரு தெளிவான பார்வையை வழங்குவதே. இதில் தொகுக்கப்பட்டுள்ள நிகழ்வுகள் மற்றும் உண்மைகள் அனைத்தும் அந்த நிகழ்வுகளின் சமகால செய்திகளிலிருந்து பெறப்பட்டவை. முடிந்தவரை, ஒவ்வொரு நிகழ்வையும் உறுதிப்படுத்த பல செய்தி ஆதாரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. மேலும் இதில் கிடைத்த வீடியோக்கள், ட்வீட்கள் மற்றும் களத்தில் இருந்த பத்திரிகையாளர்களின் நேரில் பார்த்தவர்களின் சாட்சியங்கள் அல்லது பிற சமூக ஊடக தகவல்கள் (முகநூல் (Facebook)இடுகைகள் அல்லது நேரலை வீடியோக்கள் போன்றவை) இதில் அடங்கும்.

இந்த அத்தியாயத்தில் உள்ள நிகழ்வுகளின் விளக்கம் இந்த காலகட்டத்தில் நடந்த அறிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது. பத்திரிக்கையாளர்கள் தங்களுடைய சொந்த முயற்சியில் ஆபத்தான நிலையில் இதனை ஆவணப்படுத்தியது பொது களத்தில் வன்முறை பற்றிய சில நிலையான விளக்கம் மற்றும் புரிதலை ஏற்படுத்தியுள்ளது.

இடைவெளிகள் இருக்கும் இடங்களில், இது தகவல்களின் வளர்ச்சி நிலையை பிரதிபலிக்கிறது. இந்த உண்மைகள் இன்னும் சட்டப்பூர்வமாக தீர்க்கப்பட வேண்டியவை என்பதை குழு அங்கீகரிக்கிறது. பெரும் பாலான வழக்குகளில் விசாரணைகள் இன்னும் முடிவடையவில்லை. இந்த சூழலில்தான் இதன் ஆய்வுகள் வைக்கப்படுகிறது.. ஒவ்வொரு நாளிலும் மேற்கோள் காட்டப் பட்ட இறப்புகள் குறித்த புள்ளிவிவரங்கள், அந்த நாளில் அறியப்பட்டவற்றின் வரம்புக்குட்பட்டவை. ஆகையால் அந்த நாளின் உண்மையான இறப்பு எண்ணிக்கையைக் இது குறிக்காது.

**டெல்லி கலவரம் - அந்த நான்கு நாட்களில் என்ன நடந்தது?**

**பிப்ரவரி 23 - 2020 - வன்முறையின் தொடக்கம்**

ஞாயிறு, பிப்ரவரி 23, 2020ம் ஆண்டு வடகிழக்கு டெல்லியில் முதன்முதலில் வன்முறை வெடித்தது. பின்வரும் நிகழ்வுகள் தான் இந்த வன்முறைக்கான குறிப்பிடத்தக்க காரணமாக அமைந்துள்ளது.

**ஜாஃப்ராபாத்தில் குழுமிய CAA எதிர்ப்பாளர்கள்**

22 பிப்ரவரி 2020 அன்று சீலம்பூரில் CAAக்கு எதிராக போராடிக் கொண்டிருந்த சில பெண்கள், அங்கிருந்து ஜாஃப்ராபாத் மெட்ரோ ஸ்டேஷனுக்கு அருகில் உள்ள சீலம்பூர் - ஜாஃப்ராபாத் பிரதான சாலையை மறித்து போராட்டத்தில் இறங்கியுள்ளனர். ஏற்கனவே பீம் ஆர்மி தலைவர் சந்திர சேகர் ஆஸாத் பிப்ரவரி 23ம் தேதி நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்த நிலையில் இதற்கு எதிர் நடவடிக்கையாக இந்த பெண்கள் குழுவின் மறியல் போராட்டம அமைந்துள்ளது.

**ஜாஃப்ராபாத் உள்ளிருப்பு போராட்டத்தை அகற்ற வன்முறை அணிதிரட்டல்**

பிப்ரவரி 23 காலை புதிதாக ஒரு அணிதிரட்டல் ஏற்படுத்தப்படுகிறது. இது ஏற்கனவே போராடிக் கொண்டிருக்கின்ற CAA எதிர்ப்பாளர்களுக்கு எதிராக திரட்டப் படுகிறது.

பா.ஜ.க.வின் கபில் மிஷ்ரா அதே நாள் காலை 9.16 மணியளவில் தனது டிவிட்டர் பக்கத்தில் ஒரு வீடியோவை பதிவிடுகின்றார். அதில் ஜாஃப்ராபாத்தில் போராட்டக்களத்தை காண்பிக்கின்றார். மேலும் அந்த டிவிட்டில்,

> “ஜாஃப்ராபத்தில் ஒரு புதிய களம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் சட்டங்கள் செயல்பட முடியாத இன்னொரு புதிய பகுதி அது. மோடிஜி சொன்னது சரிதான். ஷாஹின்பாக் போராட்டக் களம் ஒரு சோதனை மட்டுமே. உங்களது சாலைகள், பாதைகள், சந்தைகள், குடியிருப்பு பகுதிகள் என ஒவ்வொன்றையும் இழக்க தயாராக இருங்கள்.” என்று குறிப்பிட்டிருந்தார்.

அதே நாளில் மதியம் 1.22 டிவிட்டர் பதிவை இடுகின்றார். அதில் அவரது ஆதரவாளர்களுக்கு ஒரு அழைப்பு விடுக்கிறார்,



கபில் மிஸ்ரா

"மாலை 3 மணியளவில் மவுஜ்பூர் சவுக் அருகில் ஒன்று கூடுங்கள். நாம் இன்று ஜாஃப்ராபாத் CAA எதிர்ப்பாளர்களுக்கு பாடம் கற்பிக்கப்போகின்றோம். நாமும் CAAக்கு ஆதரவாக தெருக்களில் இறங்க போகின்றோம். உங்கள் அனைவரையும் அழைக்கிறேன். வாருங்கள்." என்று குறிப்பிடுகின்றார்.

கபில் மிஷ்ரா அழைப்பு விடுத்த மவுஜ்பூர் என்ற இடம் CAA எதிர்ப்பாளர்கள் போராட்டக்களமான ஜாஃப்ராபாத்-க்கு மிக அருகில் உள்ள இடமாகும்.

கபில் மிஷ்ராவின் இந்த அழைப்புக்கு பின் பிப்ரவரி 23ம் தேதி முழுவதும், பா.ஜ.க. மற்றும் இந்துத்துவ அமைப்புகளின் பல தலைவர்கள், முகநூல் போன்ற சமூக ஊடகங்களில் நேரலையில் தங்களது அழைப்புகளை விடுத்து வீடியோக்களை வெளியிட்டனர். இந்த வீடியோக்கள் இந்தியா முழுவதும் பலரால் பார்க்கப்பட்டது. மேலும் அந்த வீடியோக்களை தங்களது தனிப்பட்ட முகநூல் பக்கங்களிலும் வெளியிட்டனர்.

**பாஸிஸ்டுகளின் அழைப்புகள்**

**சஞ்சீவ் வர்மா**

பா.ஜ.கவின் மாநில செயலாளரான இவர் தனது முகநூல் பக்கத்தில் நேரலையில் வருகின்றார். அதில்,

"CAA எதிர்ப்பாளர்களுக்கு செல்லும் உதவிகளை தடுக்கும் விதமாக சாலைகளை மறியுங்கள். அவர்களுக்கு செல்லும், ரேஷன் பொருட்கள், பிரியாணி, தண்ணீர் அனைத்தையும் தடுத்து நிறுத்துங்கள். இப்படி செய்தால் அவர்கள் தானாகவே தங்களது வீடுகளுக்கு திரும்பி சென்று விடுவார்கள். நாம் இதுவரை அமைதியாக இருந்துவிட்டோம். ஆனால் இப்போது நாம் நமது வீடுகளுக்கு வெளியில் வந்து அவர்களை தடுக்க வேண்டும். இல்லையென்றால் அவர்கள் நமது வீடுகளுக்குள் புகுந்து விடுவார்கள். ஜெய் ஸ்ரீ ராம்! பாரத் மாதாகி ஜெய்!!" என்று தனது ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

**அனுபம் பாண்டே**

பா.ஜ.கவின் வார்டு உறுப்பினரான இவர் தனது முகநூல் பக்கத்தில் சில பதிவுகளை இடுகின்றார். காலை 10.46க்கு போட்ட பதிவில்,

"நாம் இன்னும் நமது வீடுகளில் உட்கார்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் அவர்களோ நமது வீடுகளுக்கு செல்லும் சாலைகளை மறித்து உட்கார்ந்து கொண்டிருக்கின்றார்கள். இது இந்த நாட்டின் 100 கோடி மக்களுக்கும் ஏற்பட்ட அவமானம்." என்று எழுதியிருந்தார்.


சஞ்சீவ் வர்மா


அனுபம் பாண்டே

அதே நாளில் மதியம் 12.44 மணிக்கு ஒரு பதிவிடுகின்றார். அதில்,

“ஜாஃப்ராபாத்தை நாங்கள் “ஷாஹின் பாக்”-ஆக மாறவிடமாட்டோம். சிகிகிக்கு ஆதரவாகவும், டெல்லி காவல்துறைக்கு உதவும் வகையிலும் நாங்கள் மவுஜ்பூர் சவுக்கில் மாலை 3 மணிக்கு ஒன்று கூடுவோம்” என்று எழுதியிருந்தார்.

**அஞ்சலி வர்மா**

இவர் டெல்லி பா.ஜ.க. முகநூல் பக்கத்தில் இணைந்திருப்பவர். இவர் தனது முகநூல் பக்கத்தில் காலை 11.27 மணிக்கு ஒரு பதிவிடுகின்றார். அதில்,


அஞ்சலி வர்மா

“உள்நாட்டு போருக்கு தயாராகுங்கள். மண்டையில் தொப்பி அணிந்திருக்கும் முல்லாக்கள் தக்கம் பாடம் புகட்டப்படுவார்கள்” என்று எழுதியிருந்தார்.

**ராகினி திவாரி**

இவர் தன்னை ஒரு பா.ஜ.க. தலைவர் என்று அடையாளப்படுத்திக் கொண்டு மவுஜ்பூர் சவுக்கிலிருந்து, முகநூலில் நேரலையில் வருகின்றார். அதில்,


ராகினி திவாரி

“சனாதானிகள் மீதான தாக்குதல்கள் முடுவிக்கு வரட்டும். இதுபோன்ற தாக்குதல்களை இனி நாங்கள் பொருத்துக் கொள்ளமாட்டோம். சனாதானிகளே வெளியில் வாருங்கள். ஒன்று கொல்வோம், அல்லது கொல்லப்படுவோம். இது ஓய்வெடுக்கும் நேரமல்ல. இப்போதும் உங்கள் ரத்தம் கொதிக்கவில்லை என்றால் அதே ரத்தமேயல்ல. தண்ணீர்.” என்று பேசினார்.

**கபில் மிஸ்ரா**

இதன் பின்னர் அதே நாளில் மவுஜ்பூர் சவுக்கில் கூடியிருந்த கூட்டத்தில் கபில் மிஸ்ரா உரையாற்றுகிறார். அப்போது அங்கு மாவட்ட டிஜிபி பிரகாஷ் வேதாந்த்-ம் இருக்கின்றார். அந்த உரையில்,

“டெல்லி எரிந்து கொண்டே இருக்க வேண்டு என்று அவர்கள் விரும்புகின்றார்கள். அதனால் தான் அவர்கள் சாலை மறியலில் ஈடுபடுகின்றார்கள். இதனால் தான் இங்கு கலவர சூழல் உருவாகியுள்ளது. எங்கள் தரப்பிலிருந்து இன்னும் ஒரு கல் கூட வீசப்படவில்லை. ஆனால் டி.ஜி.பி. நமக்கு முன் நின்று கொண்டிருக்கின்றார். இங்கே குழுமியிருக்கக்கூடிய உங்கள் அனைவரின் சார்பாக நான் இதைக் கூறுகின்றேன். டிரம்ப் திரும்பி செல்லும் வரை நாங்கள் அமைதியாக முன்னேறி செல்லப் போகின்றோம். ஆனால் அதன் பின் சாலைகளை விட்டு அவர்களை காவல்துறை அகற்றவில்லை என்றால், நாங்கள் காவல்துறையினரின் பேச்சை கேட்கமாட்டோம். அதன் பின் நாங்கள் சாலைகளில் இறங்குவோம்.” என்று பேசினார்.

இப்படி பேசிவிட்டு கபில் மிஸ்ரா அந்த கூட்டத்தை விட்டு சென்று விட்டார். அதன் பின் மாலை 4.30 மணிக்கு இந்த உரை சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டது. கபில் மிஸ்ரா தனது டிவிட்டர் பக்கத்தில் அந்த உரையின் ஒரு பகுதியான சிறு வீடியோ கிளிப்பை வெளியிட்டார். அதில்,

“டெல்லி காவல்துறைக்கு அடுத்த மூன்று

நாட்கள் குறித்து எச்சரிக்கை கொடுக்கின்றோம். ஜாஃப்ராபாத் மற்றும் சந்த் பாக் சாலைகளில் இருந்து அவர்களை அப்புறப்படுத்துங்கள். எங்களுக்கு நீங்கள் எதையும் விளக்க வேண்டாம். நாங்கள் உங்கள் கருத்துகளை கேட்க விரும்பவில்லை." என்று பேசியிருந்தார்.

**ஆகாஷ் வர்மா**

வடகிழக்கு டெல்லியின் பா.ஜ.க.வின் இளைஞர் அணி நிர்வாகி இவர். மவுஜ்பூர் சவூக் பகுதியிலிருந்து இவர் முகநூலில் நேரலையில் வருகின்றார். அந்த நேரலை வீடியோவில் அங்கு குழுமியிருந்த குழுவினர் கோஷங்களை எழுப்பும் காட்சிகள் இடம் பெற்றிருந்தன. அதில்,

"மோடிஜி! இவர்களை கம்புகளால் அடித்து விரட்டுங்கள் நாங்கள் உங்களோடு நிற்கிறோம்." "இந்த கற்களை பாருங்கள். இது உங்கள் சாலைகளை அடையப்போகின்றது." "விஜயா பார்கில் கூடியுள்ள முஸ்லிம்கள் மீது இந்த கற்களை அடிக்க போகின்றோம்." என்று கோஷங்களை எழுப்பி கொண்டிருந்தனர்.


ஆகாஷ் வர்மா

மேலும் அந்த வீடியோவில், "மவுஜ்பூர் சவுக்கில் எல்லோரும் ஒருங்கிணையுங்கள்." என்றும் ஆகாஷ் வர்மா பேசியிருந்தார். இவரது இந்த வீடியோ 40 ஆயிரம் பார்வையாளர்களை கொண்டிருந்தது.


அடுத்த நாள் 24-02-2020 அன்று ஆகாஷ் வர்மா மீண்டும் ஒரு நேரலையில் வருகின்றார். அதில்,

"நண்பர்களே நாம் காலையில் பெரிய அளவில் அணி திரளவேண்டும். நாம் நமது பலத்தை காட்ட வேண்டும்." என்று பேசிக் கொண்டிருக்கும் போதே அந்த கூட்டத்தில் சங்கு ஊதப்பட்டது. ஆகாஷ் வர்மா அந்த பக்கம் தனது கேமாரவை திருப்பி, "பாருங்கள் சங்கு ஊதப்பட்டு விட்டது. இதுதான் இந்துக்களின் ஒற்றுமை" என்று பேசினார்.

மேற்கண்ட பா.ஜ.க. மற்றும் இந்துத்துவ தலைவர்களின் அழைப்புகளை எல்லாம் உற்று நோக்கும் போது, "மவுஜ்பூர் சவுக்கில் இந்துத்துவவாதிகளை ஒருங்கிணைப்பதில், அதாவது CAA எதிர்ப்பாளர்களுக்கு எதிராக இந்துத்துவ அடையாளத்தோடு ஒன்று திரட்டப்படுவதில் ஈடுபட்டுள்ளனர் என்பது தெளிவாகின்றது. மேலும் இந்த அழைப்புகளில், "வன்முறையை தூண்டுதல்" தொடர்பான தெளிவான வார்த்தைகள் இருப்பதை பார்க்க முடிகின்றது.

இன்ஷா அல்லாஹ் தொடரும்.....!

**- Jasmine Fathima Bsc.B.Ed.LLB.,**

தலையங்கம்

# பலப்படுத்திக்கொள்ளுங்கள்

இஸ்லாம் மனித வாழ்வின் அனைத்து துறைக்குமான முழுமையான வழிகாட்டியாக விளங்குகிறது. அதில் ஆன்மீகம் லௌகீகம் என்று வேறுபாடு இல்லை. உடல் வலிமையை புறக்கணித்து வெறுமனே ஆன்மீகத்தை மட்டும் இஸ்லாம் கருத்திற் கொள்ளவில்லை. ஆரோக்கியமும், உடல் வலிமையை பேணுதலும் இஸ்லாத்தில் முக்கியமானவை. இதன் காரணமாகவே அளவாக உண்ணுதல், தூக்கம், ஓய்வு, உடற்பயிற்சி, சுகாதாரம் போன்ற தேவைகளை கருத்தில் கொண்டு இஸ்லாம் போதனைகளை வழங்கியுள்ளது. இயலாமை, சோம்பேறித்தனம், நோய், வறுமை, கடன் தொல்லை போன்றவற்றிலிருந்து பாதுகாப்பு தேடி நபியவர்கள் ஒவ்வொரு நாளும் பிரார்த்தனை செய்துள்ளார்கள். மேலும் குதிரையோட்டம், நீச்சல், அம்பு எறிதல், மல்யுத்தம், ஓட்டம் போன்ற விளையாட்டுத் துறைகளில் இஸ்லாம் ஆர்வமூட்டியுள்ளது.

கடைவீதியில் அம்பு எரியும் போட்டியை அஸ்லம் கூட்டத்தினர் நடத்திக் கொண்டிருந்தபோது நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அங்கே வந்தார்கள். இஸ்மாயில் நபியின் சந்ததிகளே! நீங்கள் அம்பு எரியுங்கள் உங்கள் தந்தை இஸ்மாயில் அவர்கள் அம்பு எரிபவராக இருந்தார்கள் என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறிவிட்டு, இரு அணிகளாக இருந்தவர்களில் ஒரு அணியைக் குறிப்பிட்டு நான் இந்த அணியில் சேர்ந்து கொள்கிறேன் என்று கூறி அந்த அணியில் சேர்ந்து கொண்டார்கள். எதிரணியில் இருந்தவர்கள் அம்பு எரிவதை நிறுத்தி விட்டார்கள். ஏன் நிறுத்தி விட்டீர்கள்? என்று நபிகள் நாயகம்(ஸல்) கேட்டபோது, நீங்கள் இந்த அணியில் ஒருவராகச் சேர்ந்திருக்கும் போது உங்களுக்கு எதிராக நாங்கள் எப்படி அம்பு எறிவோம்? என்று அவர்கள் விடையளித்தனர். அப்படியானால் நான் இரண்டு அணிக்கும் பொதுவானவனாக இருந்து கொள்கிறேன் இப்போது எரியுங்கள் என்றார்கள்.

அன்னை ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்கள், நானும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும் ஓட்டப்பந்தயம் நடத்திய போது நான் அவர்களை முந்திவிட்டேன். சில காலம் கழித்து எனக்கு சதைபோட்டு நான் கனத்துவிட்டபோது மீண்டும் ஓடினோம் அப்போது நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் என்னை முந்திவிட்டு, அதற்கு இது சரியாகிவிட்டது என்றார்கள்.

அனஸ்(ரலி) அறிவிக்கிறார்கள், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களது முன்னிலையில் பள்ளிவாசலில் அபீஸீனியர்கள் தங்களின் ஆயுதங்களை ஏந்திக் கொண்டு விளையாடினார்கள். இது போன்ற வீர விளையாட்டுகளையும், பயனுள்ள பயிற்சிகளையும் இஸ்லாம் அனுமதிக்கின்றது. உடலுக்கோ, அறிவுக்கோ பயன் தராத வீண் விளையாட்டுகளை இஸ்லாம் தடுக்கிறது.

அல்லாஹ் தன்னுடைய திருமறையில் கூறுகிறான்,

“நம்பிக்கையாளர்களே பொறுமையுடன் இருங்கள் (இன்னல்களை) சகித்துக் கொள்ளுங்கள் (ஒருவரை ஒருவர்) பலப்படுத்திக் கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள். (இம்மையிலும், மறுமையிலும் நீங்கள் வெற்றியடைவீர்கள்)( அன்னிஸா : 200)

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் சொற்பொழிவு மேடை(மிம்பர்) மீதிருந்தபடி, “நீங்கள் அவர்களுக்கு எதிராக உங்களால் இயன்ற அளவுக்குப் பலத்தைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள்(8:60)” எனும் வசனத்தை ஓதிவிட்டு, அறிந்துகொள்க பலம் என்பது அம்பெய்வதாகும், அதிக பலம் என்பது அம்பெய்வதாகும், பலம் என்பது அம்பெய்வதாகும் என்று கூறினார்கள்.

# வாசகர்கள் எண்ணங்கள்



Your channel

Vaigarai Velicham Official

Ramkumar Natarajan • 1 day ago

2000 periyar illa 10000 periyar vanthalum ongala thirutha mudiyathu.. konjam nalla padaikkanum bro neenga.. வாள் மூலம் இஸ்லாம் பரவி இருந்தால் இஸ்லாம் இன்று இல்லாமல் போய் இருக்கும்... இஸ்லாத்தை யாரும் ஏற்றுக்கொள்ள முன் வரவும் மாட்டார்கள்..

கற்க கசடற...



Mohamed Ismail • 7 days ago

எனது உடம்பை பார்க்கவும் ரசிக்கவும் தகுதியான ஒரே நபர் அப்பெண்ணின் கணவர் மட்டுமே ,அதே நேரம் ஒரு பெண்ணின் உடலை எவன் வேண்டுமானாலும் ரசிக்கலாம் என்பது என்ன செய்தியை சொல்கிறது மக்களுக்கு என்பதை முற்போக்கு அறிவிழந்த கபோதிகள் பதிலளிக்க வேண்டும் .

REPLY 0 replies 5




புர்காவும் | தோற்றுப்போன மேலைநாட்டு ...

Zail Anumu • 1 month ago

🌹🖤உங்கள் உழைப்புக்கு அல்லாஹ் ரஹ்மத் செய்வானாக!!! 🌹🌹🌹🌹🌹

உங்களுடைய எல்லா வீடியோக்களையும் நிறைய வட்ஸ்அப் குருப்புகளுக்கு நான் பகிர்ந்துகொண்டுள்ளேன் 🌹🌹

REPLY 0 replies 1



சிலுவைப்படைகள் செய்த கொலைகள் | தொடர் 21 | ...

Sadique Hussain • 2 days ago

Superb news given sister about the film and also good try against the film.

REPLY 0 replies 3



இது RSS-ன் பொய் பிரச்சாரம் | சட்ட ரீதியாக நடவடிக்கை ...

Amanullah Ibrahim • 7 days ago

இஸ்லாத்தை குறைகூறும் மக்களுக்கும் எதிர்க்கும் மக்களுக்கும் இறுதியில் புகழிடமும் மேன்மையும் மறுமையும் தருவது இஸ்லாம் தான்....இது கியாமத் நாள் வரைக்கும் தொடரும்...நமனைவர்க்கும் எல்லாம் வல்ல அல்லாஹ் போதுமானவன் ஆமீன்

REPLY 0 replies



14ம் நூற்றாண்டுகளிலேயே இஸ்லாமோபோபியா |...

**வைகறை வெளிச்சம் மாதந்தோறும் என் இல்லம் வந்துகொண்டிருக்கின்றது. அல்ஹம்துலில்லாஹ்! தங்கள் அன்பகத் தொண்டும் நன்றாகவே நடந்துவரக் காண்கிறேன்! 'குஜராத் கோத்ரா' குறித்து தாங்கள் எழுதிய கட்டுரை உண்மை வெளிக்கொணர்ந்தது. 2 நீதிபதிகள் குருடர்கள் என்ற வாசகம் நம் கண்ணை மேலும் வெளிச்சமாக்கியது.**

**– கவிஞர். இ.பதுருத்தீன்**

**https://www.youtube.com/@VAIGARAIVELICHAMOFFICIAL**

# வரலாற்றுக் குறிப்பில் ஒரு பகுதி!



சிவனின் இருப்பிடமான கைலாஷ் மானசரோவர் சீனாவின் ஆதிக்கத்தில் உள்ளது..

நம் நாட்டு விடுதலைக்குப் பிறகு, சீனா கைலாஷ் பர்வத் (கைலாசமலை) அல்லது கைலாஷ் மானசரோவர் மற்றும் அருணாசலப் பிரதேசத்தின் பெரும்பகுதியை ஆக்ரமித்ததால் அப்போது பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு ஐநா அவைக்குச் சென்று, "சீனா எங்கள் பகுதியை வலுக் கட்டாயமாக ஆக்ரமித்துள்ளது, எங்கள் பகுதியை மீண்டும் எங்களுக்குப் பெற்றுத் தாருங்கள்" என்றார்.

இதற்குச் சீனா தரப்பிடமிருந்து வந்த பதில்: "நாங்கள் இந்தியாவின் பகுதியை ஆக்ரமிக்கவில்லை. எங்கள் நாட்டின் பகுதியை 1680ல் இந்தியாவை ஆண்ட பேரரசர் பிடுங்கியதை நாங்கள் திரும்ப எடுத்துக் கொண்டோம்".

இந்த பதில் இன்றும் ஐநா அவையின் அதிகாரபூர்வ ஆவணங்களில் உள்ளது.

சீனா எந்த இந்தியப் பேரரசரின் பெயரை குறிப்பிட்டது தெரியுமா?

"ஔரங்சேப் – ***Aurangzeb"***

உண்மையில் ஔரங்சேப் காலத்திலும் சீனாதான் இந்தியப் பகுதியை ஆக்ரமித்தது. இதைக் குறித்து பேரரசர் ஔரங்சேப், அப்போதைய சீன நாட்டின் சிங் வம்ச (Ching dynasty) மன்னர் முதலாம் ஷுன்ஜிக்கு (Shunji I) எழுதிய கடிதத்தில், "கைலாஷ் மானசரோவர் இந்தியாவின் ஒரு பகுதி. அது மட்டுமின்றி, அது எங்கள் இந்து சகோதரர்களுக்கு புனிதமான இடம். எனவே, அந்த இடத்தை விட்டுவிலகுங்கள்" என எழுதினார்.

கடிதம் எழுதி ஒன்றரை மாதமாகியும் சீன தரப்பிடமிருந்து பதில் இல்லாததால் குமாவோன் பகுதி அரசர் பாஜ் பஹதூர் சந்த் அவர்களின் படையுடன் இணைந்து குமாவோன் வழியாக மலையேறிச் சென்று சீனாவைத் தாக்கி, கைலாஷ் மானசரோவர் பகுதியை இந்தியாவுடன் மீண்டும் இணைத்தார்.

எந்த பேரரசர் ஔரங்சேப் அவர்களை தீவிர இஸ்லாமிய அரசர் என்றும், இந்துக்களுக்கு எதிரானவர் என்றும் பரப்புரை செய்யப்படுகிறதோ அதே பேரரசர்தான். அவர்தான் இந்தியாவின் முதல் உண்மையான 'சர்ஜிகல் ஸ்டிரைக்' நடத்தியவர்.

வரலாற்றின் இந்த பக்கங்கள், இந்தியா விடுதலை அடைந்த காலத்து ஐநா அவையின் ஆவணங்களில் உள்ளன. அது மட்டுமின்றி அந்த ஆவணங்கள் நாடாளுமன்றத்திலும் பாதுகாப்பாக உள்ளன.

அந்த வரலாற்றுச் சம்பவங்களை நீங்கள் கீழ்க்கண்ட புத்தகங்களிலும் காணலாம்..

ஹிஸ்டரி ஆஃப் உத்தராஞ்சல் – உத்தராஞ்சல் வரலாறு.(ஆசிரியர்: ஓ.சி. ஹாண்டா) மற்றும் த டிராஜிடி ஆஃப் திபத் – திபத்தின் துயரம் (அல்லது சோகமுடிவு).(ஆசிரியர்: மன்மோஹன் ஷர்மா.)

பதிவு: **Meenakshi Sundaram**



குழந்தை வளர்ப்பு

# விளையாட்டும் விடுமுறையும்

"பள்ளிக்கூடங்கள் அடைக்கப்பட்டு விட்டன."

"விடுமுறைகள்... குதூகலங்கள்..."

மாணவ மாணவிகளுக்கு நிம்மதி.

ஓயாத விளையாட்டு. உணவுண்ண நேரமில்லாத விளையாட்டு.

"பாட்டி வீட்டுக்கு, பிறந்த ஊருக்கு என்று பயணங்கள்."

இப்படியெல்லாம் இருந்தன ஒரு காலகட்டத்தில். குழந்தைகள் பள்ளிப் பருவத்தை அனுபவித்துக் கொண்டிருந்த காலங்கள் அவை. என் பள்ளிப் படிப்பில் அப்படி இருந்தேன், இப்படி இருந்தேன் என இனிமையான சூழலில் வாழ்ந்த நாட்களை எண்ணி வாழ்வின் வாடிய நாட்களில் இதயத்தை ஈரப்படுத்திக் கொள்வதுண்டு.

இந்த இனிமைகளெல்லாம் கடந்த கால வரலாறாக மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இன்றைய நாட்களில் பள்ளிப் பருவம் பரபரப்பான பருவமாக மாறிப் போய்விட்டது. சதா சர்வ காலமும் நல்ல மார்க், நல்ல மார்க் என்று அதட்டும் பெற்றோர்கள். அதிக மதிப்பெண்களுக்காக பள்ளிக் கூடங்களிலும், டியூஷன் சென்டர்களிலும் மாற்றி, மாற்றி குடியிருக்கும் மாணவர்கள்.

பள்ளிக்கூடங்களிலும் கட்டுப்பாடு -கள், டியூஷன் சென்டர்களிலும் கட்டுப்பாடுகள். காலில் ஷூ இறுக்கிக் கட்டு, வயிற்றில் ஒரு கட்டு. இல்லை இடுப்பில் ஒரு கட்டு பெல்ட். கழுத்தில் இன்னும் அழுத்திக் கட்டு "டை" (TIE). சாவு என்று இதற்குப் பொருள் இல்லை.

இரண்டு புஜங்களையும் இறுகப் பிணைக்கும் ஒரு மூட்டை புத்தகங்கள். கட்டு, கட்டு எனக் கட்டிய பிறகு கட்டுப்பாடுகள். அதற்கு ஆங்கிலத்தில் பெயர் "டிசிப்ளின்". இப்படிப் பள்ளிப் பருவம் பயங்கரப் பருவமாக மாறிப் போயிற்று.

இப்படி அவர்களின் மாணவப் பருவம் முழுவதும் வகுப்பறைகளில் கழிகின்றன. அரைக்காமல் சொன்னால் பள்ளியறைகள் என்ற சிறைச்சாலைகளில் அவர்களின் வாழ்க்கை!

இந்த மதிப்பெண்களை மட்டுமே இலக்காகக் கொண்டு வாழும் வாழ்க்கையில் அவர்கள் ஒரு பகடைக்காயாய் உருளுகிறார்கள். இந்தப் பள்ளிப் படிப்பில் மாணவர்கள் எந்த அளவுக்கு வெறுப்படைந்திருக்கிறார்கள் என்றால், பள்ளிப் படிப்பு முடிந்தவுடன் தங்கள் புத்தகங்களை சில மாணவர்கள் கிழித்து எரிகின்றார்கள்.

இன்னும் சில மாணவர்கள் பாதிப் படிப்பிலேயே ஓடிவிடுகின்றார்களாம் பள்ளியை விட்டு. ஆசிரியர்கள்-பெற்றோர்கள் சந்திப்பில் இந்தப் பள்ளிப் பாலகர்களுக்கு கொஞ்சமாவது ஆசுவாசம் கிடைக்குமா என்றால் அதுவுமில்லை.

ஆசிரியர்-பெற்றோர்கள் கூட்டங்களுக்கு வரும் பெற்றோர்களில் பெரும்பாலோர் இன்னும் கொஞ்சம் கண்டித்து வையுங்கள் என்றுதான் பரிந்துரைத்துக் கொண்டு செல்கிறார்களாம். அனுபவமிக்க ஆசிரியை ஒருவர் ஆதங்கத்தோடு வெளிப்படுத்துகின்றார் இதை.

மாணவ மாணவிகளுக்கும் நாம் உருக்கியும், உலுக்கியும் எடுக்கப்படுகின்றோம் என்ற எண்ணம் மனதில் ஆழப் பதிந்து இருக்கின்றதாம். ஒரு முறை வகுப்பில் மாணவர் பருவம்தான் வாழ்க்கையின் நிம்மதியான பருவம் எனக் குறிப்பிட்டார் ஆசிரியை.

“கொல்” என்று சிரித்து விட்டார்களாம் மாணவ மாணவிகள்.

விளக்கம் சொல்லிட வேண்டிய தேவையே இல்லாமல் ஆசிரியை மாணவர்களின் விரக்தியைப் புரிந்து கொண்டாராம்.

மாணவப் பருவம் விம்மிடும் விளைவுகளால் வீங்கிப்போய்க் கிடக்கிறது. இவற்றிலிருந் தெல்லாம் விடுதலை கிடைக்கும் மாதம்தான் இந்த மே மாதம். ஆனால் இந்த மாதத்திலும் நுழைவுத் தேர்வு பயம்.

குழந்தைப் பருவம் முதற்கொண்டு (LKG முதற்கொண்டு) ஒவ்வொரு பருவத்திலும் நுழைவுத் தேர்வு.

எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற சூன்யமயமான சிந்தனை.

10, +2 வகுப்பு மாணவர்களுக்குச் சில பள்ளிக்கூடங்களில் இந்த மாதமும் முழுநேரப் படிப்பு.

இப்படி மழலைப் பருவமும் பெரும் போராட்டப்பருவம் அல்லது அழுத்தங்கள் அதிகமான (டென்ஷனான) பருவமாகி விட்டது.

இப்போது கட்டுப்பாடுகளே அவர்களைக் கட்டிப் போடுகின்றன.

இப்படிச் சொல்லிவிடுவதால் கட்டுப்பாடுகள் வேண்டாம் என்றில்லை. இப் போது உள்ள நிலையில் அவர்களுக்குக் கட்டுப்பாடுகளைப் போல் ஆசுவாசங்களும் தேவை என்பதை நாம் உணர வேண்டும்.

அவர்கள் மொத்தமாக உருமாறிப் போகும் முன் சற்று வெளியே அழைத்துச் செல்லுங்கள்.

இறைவனின் அருட்கொடையாய் அவனது ஆற்றல்களை வெளிப்படுத்தும் ஆறு, கடல், மலர்த் தோட்டங்கள், மலை, மடுவு இவற்றையும் அவர்களுக்குக் காட்டுங்கள்.

விரிந்து விசாலமான இந்த உலகில் ஆண்டவனின் அத்தாட்சிகளை (ஆயாத்துல்லாஹ்) அவர்களை அழைத்துச் சென்று காட்டுங்கள்.

வசதியும், வளமும் கைவரப் பெற்றோர் கோடைவாசஸ்தலத்தைக் கொண்டு காட்டுங்கள்.

அவர்களின் மன அழுத்தங்களுக்கு மருந்தாய் அவை அமையும். அவர்களின் மன வளத்திற்கு விருந்தாய் அவை அமையும்.

மழலைகளின் நலன் கருதி இதைச் செய்யலாம். சூழ்நிலை சரியில்லை என நீங்கள் சற்று முணங்கலாம். ஆயிரம் ஆபத்திற்கிடையேயும் நாம் ஆசுவாசமாக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

அப்படிக் கற்றுத் தந்த முஹம்மத்(ஸல்) அவர்களை வழிகாட்டியாய் கொண்டவர்கள் நாம்! இந்தப் பயணத்திலும் நாம் ஒரு முன் மாதிரியாக அமையலாம். இறைவன் தன் இறைமறையில் கூறுகின்றான்.

(நபியே!) நீர் கூறும்: “பூமியில் நீங்கள் சுற்றித் திரிந்து சிருஷ்டிகளை எவ்வாறு உற்பத்தி செய்கிறான் என்பதைப் பாருங்கள். (அவ்வாறே மரித்த) பின்னரும், அல்லாஹ் (மறுமையில்) மறு முறையும் உற்பத்தி செய்வான். நிச்சயமாக அல்லாஹ் யாவற்றின் மீதும் மிக்க ஆற்றலுடையோன்.”

அல்குர்ஆன் 29:20

மேலும் கீழ்க்கண்ட குர்ஆன் வசனங்களைப் பார்க்கவும்: 22:46, 40:21, 40:82, 30:9, 35:44

**MGM**




# பிராமினிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

**சென்ற இதழின் தொடர்ச்சி....!**

விசாரணை தரப்பின்படி இந்த விசதித்திட்டம் கொலம்போவில் உருவாக்கப்பட்டது. ஆனால் எந்தவிதமான விசாரணையும் கொலம்போவில் நடத்தப்படவில்லை. தீவிரவாதத்தடுப்புப்படை இன்டெர்போலுக்கு ஒரு கடிதத்தை மட்டும் அனுப்பி அதில் கொலம்போவில் குற்றம் சாட்டப்பட்டவர் தங்கியிருந்த விவரம் குறித்தும், தேடப்படும் குற்றவாளிகளுடனான அவரது சந்திப்பு குறித்தும் தகவல் அளிக்குமாறு கோரி இருந்தது. ஆனால், எந்த ஓர் அறிக்கையும் இன்டெர்போலிடமிருந்து பெறப்படவில்லை. ஆகையால், விசாரணைத் தரப்பினர் கூறுவது போல ஹிமாயத் பேக், ஃபயாஸ் கக்ஸி மற்றும் ஸைபுத்தீன் அன்சாரி ஆகியோர் மத்தியில் ஒரு சந்திப்பு கொலம்போவில் நடந்ததை உறுதிப்படுத்தவோ, காக்ஸியும் அன்சாரியும் ஹிமாயத்திற்கு வெடிகுண்டுகள் தயாரிக்க பயிற்சி வழங்கியதை உறுதிப்படுத்தவோ, குண்டு வெடிப்புகளை நிகழ்த்த பணம் வழங்கியதை உறுதிப்படுத்தவோ எந்த ஒரு சிறு ஆதாரமும் இல்லை. ஆனபோதிலும், நீதிமன்றம் அவர் சதித்திட்டத்தை உருவாக்குவதற்காக கொலம்போ சென்றார். அதற்காக நிதியை திரட்டினார் என்ற அரசுத் தரப்பினரின் வாதத்தை ஏற்றுக் கொண்டது.

போலி ஆவணங்களை கையில் வைத்திருந்தது வேறு நபர்களுக்கு சொந்தமான ஆவணங்களை அதாவது ஊனமுற்றோர் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், ரேஷன் கார்டு எனப்படும் குடும்ப அட்டை, இருப்பிட சான்றிதழ், ஓட்டுனர் உரிமம் போன்றவற்றை குற்றம் சாட்டப்பட்டவரின் பையில் இருந்ததாக கூறி அந்த சான்றிதழ்கள் அந்தந்த குறிப்பிட்ட துறைகளுக்கு சரிபார்ப்பிற்காக அனுப்பி வைக்கப்பட்டது. அந்த ஆவணங்கள் போலியானவை என்பது கண்டறியப்பட்டது. எனினும், அந்த போலியான ஆவணங்கள் குற்றம் சாட்டப்பட்டவரால் தயாரிக்கப்பட்டது என்பதற்கோ அந்த ஆவணங்கள் தவறான வழியில் பயன்படுத்தப் பட்டு புகார்கள் பெறப்பட்டன என்பதற்கோ எந்த விதமான ஆதாரங்களும் இல்லை. அதேபோல் இந்த ஆவணங்களுக்கும் குண்டுவெடிப்பு சதித் திட்டத்திற்கும் இடையேயான தொடர்பையும் நிறுவ அரசுத்தரப்பினால் இயலவில்லை.

எனவே, நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவர் மீது இந்த போலி ஆவணங்களை தயாரித்த தற்கான குற்றத்தை சுமத்தவில்லை. ஆனால், அவற்றை கையில் வைத்திருந்த குற்றத்தை உறுதி செய்தது.

**தங்களுக்கு சாதகமானவர்களின் வாய்மொழி சாட்சியத்தின் மீது விசாரணை தரப்பின் பெரிய நம்பிக்கை**

இவ்வழக்கின் முக்கியமான மற்றொரு அம்சம் என்னவென் றால் சில சாட்சியங்களின் வாய்மொழி சாட்சியத்தின் மீது அதிக நம்பிக்கை

கொண்டிருந்ததும் அதனை சார்ந்திருந்ததும் தான். குற்றம் சாட்டப்பட்ட ஹிமாயத் பேக் தன் கைபேசிகளை மும்பையிலும் அவுரங்கா பாத்திலும் தன் நண்பர்களிடம் கொடுத்து வைத்திருந்தார் என்ற விஷயத்திலும் ஜெர்மன் பேக்கரி குண்டு வெடிப்பை நிகழ்த்த நேரத்தில் தூண்டக்கூடிய கருவியாக செல்போன் உபயோகப்படுத்தப்பட்டது என்பதிலும் இன்னும் பல முக்கிய விஷயங்களிலும் சில சாட்சியங்களின் வாய்மொழி சாட்சியத்தின் அடிப்படையிலேயே நிரூபிக்க முயற்சிக்கப் பட்டது.

1) அப்துல் சமத் இந்தோரி (PW-73), ஷேக் கவுஸ் (PW-92), ஷேக் அப்துல் ரேஹான் (PW-94), ஷேக் அஹ்மத் லைக் (PW-95), அஸ்பக் கான் (PW-87), மற்றும் முஹம்மது அன்சாரி (PW-97), ஆகியோரின் வாய்மொழி சாட்சியத்தின் அடிப் படையில் பின்வரும் முக்கியமான விஷயங்கள் நிரூபிக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ளப் பட்டது.

1) குற்றம் சாட்டப்பட்டவர் உத்கிர் என்ற இடத்தில் யூசுப் மற்றும் ஹசன் என்று கருதப்படும் பொய்யான பெயர்களில் வசித்து வந்தார்.

2) குற்றம் சாட்டப்பட்டவர் மற்றொருவரின் வங்கிக்கணக்கை உபயோகித்து இயக்கிக் கொண்டிருந்தார்.

3) குற்றம் சாட்டப்பட்டவருக்கும் குற்றம் சாட்டப்பட்டு தலைமறைவான மற்றொரு வருக்கும் இடையிலான தொடர்பு. குற்றம் சாட்டப்பட்டவரின் உள்ளம் தீவிரவாத கொள்கையில் கொண்டிருந்த ஈடுபாடு, மதத்தின் மீது கொண்டிருந்த வக்கிரமான கருத்துகள்.

4) குற்றம் சாட்டப்பட்டவர் இன்னொருவரின் பெயரில் முன்பதிவு செய்யப்பட்ட பயணச் சீட்டில் மும்பைக்கு சென்றார். அங்கு ஒரு தங்கும் விடுதியில் புனைப்பெயரில் தங்கியிருந்தார்.

1 மற்றும் 3ஐ பொருத்தவரை, சாட்சிகளின் வாய்மொழி சாட்சியத்தை உறுதிப்படுத்தக் கூடிய எந்தவிதமான ஆதாரமும் இல்லை. 2ஐ பொருத்தவரையில் ஏற்கெனவே குற்றம் சாட்டப்பட்டவரின் கொலம்போ பயணம் குறித்து விவாதிக்கும் போதே அந்த விஷயம் விவாதிக்கப் பட்டு விட்டது. குற்றம் சாட்டப் பட்டவர் மும்பைக்கு 7, பெப்ரவரி, 2010 அன்று இன்னொருவரின் பெயரில் முன்பதிவு செய்து பயணம் செய்த விஷயத்தை பொருத்தவரை அரசுதரப்பு தாக்கல் செய்த ஆதாரமானது சந்தேகத்திற்குரியது.

ஏனெனில் அந்த பயணச்சீட்டில் டிராவல் ஏஜென்ஸியின் (பயண நிறுவனம்) பதிவில் பயணம் செய்தவரின் பெயர், அதாவது யாருடைய பெயரில் குற்றம் சாட்டப்பட்டவர் பயணம் செய்தார் என்று கூறப்பட்டதோ அந்த பெயர் வெள்ளை மை (ஒயிட்னர்) கொண்டு அழிக்கப்பட்டு அதன் மேல் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. பயணச்சீட்டின் கார்பன் நகல் காணவில்லை. அல்நூர் தங்கும் விடுதியில் இருந்த பதிவேட்டில் இருந்தவை பொருத்தவரையில் தங்கியிருந்தவரின் பெயர் முஹம்மது யூசுப் முஹம்மது இஷாக் என்று பதியப்பட்டிருந்தது.

ஆனால் தரப்பட்டிருந்த கைபேசி மட்டும் குற்றம் சாட்டப்பட்டவருடையது. இந்த ஆதாரம் திரிக்கப்பட்ட ஆதாரமாக தெரிகிறது. ஒரு நபர் தன்னுடைய அடையாளத்தை மறைக்க விரும்பிய நிலையில் எதற்காக தன்னுடைய உண்மையான செல்போன் எண்ணை தரப்போகிறார்? இந்த வாதத்தை எதிர்கொள்ள அரசுத் தரப்பு தங்களுடைய விருப்பத்துகுகந்த சாட்சியமான அப்துல் சமத் இந்தோரி (PW73) என்பவரின் வாய் மொழி சாட்சியத்தையே முக்கியமாக சார்ந்திருந்தது. நீதிமன்றமும் இதை ஏற்றுக்கொண்டது. குற்றம் சாட்டப்பட்ட ஹிமாயத்பேக்-ஐ வெடிகுண்டுகளை வைத்தவருடன் சேர்த்து புனேவில் பார்த்தது கூட தனி சாட்சியத்தின் மூலமே நிரூபிக்கப் பட்டது.

குற்றம் சாட்டப்பட்ட ஹிமாயத் பேக்-ஐ கடைசியாக வெடிகுண்டுகளை வைத்த யாசின் பட்கல் என்பவருடன் சேர்த்து புனேவில் பார்த்தது கூட ஓர் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுனரின் வாய் மொழி சாட்சியத்தின் அடிப்படையில் நிரூபிக்கப் பட்டதாக? ஏற்றுக்கொள்ளப் பட்டது. சம்பவம் நடந்த அன்று குற்றம் சாட்டப்பட்டவர் புனேவில் இருந்தார் என்பதை நிரூபிப்பதற்கு இந்த ஒன்று மட்டுமே ஆதாரம்.

**பயிற்றுவிக்கப்பட்ட (சொல்லிக் கொடுக்கப்பட்ட) சாட்சியம், சிறந்த சாட்சியம்**

எந்தெந்த விஷயங்களில் அரசுத்தரப்பு வாய் மொழி சாட்சியத்தை சார்ந்திருந்ததோ அதுவும் வழக்கின் மிக முக்கியமான அம்சங்களின் கூட அதனை உறுதிப்படுத்தக்கூடிய விஷயங்கள் எதுவுமின்றி மிக அதிகமாக சார்ந்திருந்ததோ அவையெல்லாம் கற்பிக்கப்பட்ட சாட்சியங்கள்.

காவல்துறையினரால் பயிற்றுவிக்கப்படும் சாட்சியங்கள் சிறந்த சாட்சியங்களாகவே இருக்கும். காரணம் அவர்கள் நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணையை எதிர் கொள்ளும் வகையில் சிறப்பாக பயிற்றுவிக்கப் பட்டிருப் பார்கள். துரதிருஷ்டவசமாக நீதிமன்றம் அரசு தரப்பின் நேரமையற்ற நடவடிக்கைக்கு இரையாகிவிட்டது.

**தண்டனை**

இந்த புத்தகத்தில் இதற்கு முந்தைய பகுதிகளில் விவாதிக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப் படையில் விசாரணை நீதிமன்றம் ஹிமாயத் பேக்-இன் மீது சுமத்தப்பட்ட தீவிரவாதம், சதித்திட்டம், குண்டுவெடிப்பு, கொலை, கொலை முயற்சி போன்ற பெரும் பான்மையான குற்றங்களில் குற்றச்சாட்டை உறுதி செய்தது. மோசடி குற்றச்சாட்டில் இருந்து மட்டும் அவரை விடுவித்தது. அவருக்கு மரண தண்டனை வழங்கியது. மற்ற தண்டனைகளை இந்திய குற்றவியல் சட்டம், உபா எனப்படும் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் 1967, வெடிப்பொருட்கள் சட்டம் 1908 ஆகிய வற்றின் கீழ் வழங்கியது. நீதிமன்றம் மோசடி வழக்கில் மட்டும் அவரை குற்றச்சாட்டில் இருந்து விடுவித்தது.

விசாரணை நீதிமன்றம் வழங்கிய மரண தண்டனையை உறுதி செய்யவும் விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டவர் மேல்முறையீடு செய்ததாலும் இவ்வழக்கு உயர்நீதிமன்றம் சென்ற போது உயர்நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவரை தீவிரவாதம், சதித்திட்டம், குண்டுவெடிப்பு, கொலை, கொலை முயற்சி போன்ற முக்கியமான குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவித்து விடுதலை செய்தது. தீர்ப்பில், "மொத்தத்தில் அரசுத்தரப்பு வழக்கு நம்பிக்கை ஊட்டும் விதத்தில் இல்லை" என கூறியிருந்தது. இவ்வழக்கின் முக்கியமான அம்சங்களில் உயர்நீதிமன்றத்தின் கணிப்பு.

இன்ஷா அல்லாஹ்

அடுத்த இதழில்.....

**ஜஸாக்கல்லாஹு ஹைரன். நன்றி! நன்றி!**

**வாசகர்கள் அனைவருக்கும் ரமழான் நல்வாழ்த்துக்கள்!**

**ரமழான் மாதத்தில் எங்கள் பணி சிறக்க நிதி உதவிகளை வழங்கிய அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றிகள் பல. அல்லாஹ் உங்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் நிரம்ப நற்கூலிகளை வழங்கிடுவானாக!**

**- இவண்**

**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் / நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்**
**அன்பகம் தாஃவா மத்ரஸா / வைகறை வெளிச்சம் மாத இதழ் / வேர்கள் பதிப்பகம்**

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002